
கல்கி

KALKI
19.1.86
ரூ. 1.50



இயற்கை இரக்கம் காட்டவில்லை; அரசும் ஆதரவு காட்டவில்லை

‘பார்லே-ஜீ’



பார்லே க்ளூகோ பிஸ்கட்டுகள்.
இப்போது இதன் செல்லப்பெயர் ‘பார்லே-ஜீ’!



ஏன் பார்லே-ஜீ ?

நீங்கள் விரும்பும் ஒரு பிஸ்கட்டிற்கு இது சுருக்கமான, இனிய செல்லப்பெயர். அது பார்லே க்ளூகோ என்பதில் சந்தேகம் இல்லை. உண்மையில் ‘பார்லே-ஜீ’ என கூறும் பொழுது நேச உணர்வு மிகுதியாகிறது. தவிர இப்பெயரில் அடங்கி உள்ள ஜீவனுள்ள அம்சங்கள்— ஜீவனுள்ள சத்து-சுவையான பால், கோதுமை மற்றும் சர்க்கரையிலிருந்து கிடைக்கிறது. ஜீவனுள்ள வளர்ச்சி-ஊட்ட சசத்து நிரம்பிய க்ளூகோ இதனை வழங்குகிறது. ஜீவனுள்ள ருசி-இது நீங்கள் அறிந்ததே!

PARLE

Gluco

சுவை மிக்க சத்துணவு

இந்தியாவில் அதிக விற்பனையாகும் பிஸ்கட்

everest/85/PP/490/TM

இயற்கை இரக்கம் காட்டவில்லை;
அரசும் ஆதரவு காட்டவில்லை...

அப்பாவிக் குழந்தைகளின் சோகக் கதை...



அன்று ஞாயிற்றுக் கிழமை. வாரம் முழுவதும் செய்த நெசவு வேலைக்குக் கூலி வாங்கும் நாள். வழக்கம் போலக் கூலியை வாங்கிக் கொண்டு வந்து சித்தியிடம் கொடுக்கத்தான் வேண்டுமா? பன்னிரண்டு வயதுச் சிறுவனான செல்வத்தின் பிஞ்சு மனம் யோசித்தது.

அம்மா இருந்தவரை ஒவ்வொரு நாளும் எத்தனை இனிமையாய் இருந்தது! பிறக்கும் போதே திக்குவாயாகப் பிறந்து, ஒரு வார்த்தை பேசுவதற்கே இரண்டு மூன்று நிமிடங்களானாலும் அம்மாதான் எத்தனை அன்பு காட்டுவாள்! 'உன் வாயில் என்னடா கொழுக்கட்டையா அடைத்திருக்கிறது? சொல்லேண்டா, சொல்லேண்டா!' என்று இவன் திக்குவாயைக் கருணையோடு பார்க்காமல், பிரம்பால் அடித்து நொறுக்கிய ஆசிரியர்களின் கொடுமையை அம்மாவிடம் வந்து கண்ணீர் விட்டுக் கதறும்போது, அவளும் இவனைக் கட்டிக் கொண்டு கதறி, அடிபட்ட இடங்களையெல்லாம் எத்தனை பரிவோடு தடவிக் கொடுத்து ஆறுதல் சொல்லுவாள்!

ஆனால் இந்தச் சித்தி? ஆசிரியர்களை விடவும் கொடுமைக்காரியாகவல்லவா இருக்கிறாள். பள்ளிக்கூடத்தில் அடிபட்டது போதாதென்று இவளும் சேர்ந்தல்லவா அடிக்கிறாள்; திட்டுகிறாள். சித்திதான் ஒழியட்டும். அப்பாவுக்குஎன்ன வந்தது? பள்ளிப் படிப்பைக் கூட விட்டுவிட்டு நெசவு வேலைக்குப் போய்ச் சம்பாதித்துக் கொண்டு வந்தாலும் அப்பாவும் சித்தியின் கொடுமைகளைப் பற்றி ஒரு வார்த்தைகூட எதிர்த்துப் பேசுவதில்லையே! இந்தச் சூழ்நிலையில் இன்னமும் இந்த வீட்டில்தான் வாழ வேண்டுமா?

மெட்ராஸ் போனால் ஏதாவதொரு வேலை செய்து பிழைத்துக் கொள்ள முடியாதா? ஏன் முடியாது? ஈரோட்டில் செய்கிற வேலையை மெட்ராஸில் செய்தால் போகிறது! சோறு கிடைக்காமலா போய்விடும்? துணிச்சலோடு கோவை எக்ஸ்பிரஸில் ஏறி சென்னைக்குக் கிளம்பிவிட்டான் செல்வம்.

சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் ஓரிரவு படுத்துக் கழித்துவிட்டு மறுநாள் வேலை தேடும் படலத்தில் இறங்கினான் செல்வம். பல இடங்களில் ஏறியிறங்கிய பிறகு, ஆள்வார்ப்பேட்டையிலுள்ள பெட்ரோல் பங்க் ஒன்றில் மாதம் எண்பது ரூபாய்ச் சம்பளத்தில் வேலைக்குச் சேர்ந்தான்.

ஒரு மாதம் முழுவதுக்கும் எண்பது ரூபாய் போதுமானதாக இல்லை என்றாலும் அவ்வப்போது ஒரு சில வாடிக்கையாளர்கள் இரக்கப்பட்டுத் தரும் எட்டணா, ஒரு ரூபாய் போன்ற இனாம்கள் மிக்க உதவிகரமாய் இருந்தன. ஒரு சில வாடிக்கையாளர்கள் செல்வத்தின் திக்குவாயைப் புரிந்துகொண்டு காட்டிய இரக்கம் இவனின் பிஞ்சு மனத்துக்கு மிகவும் ஆறுதலாய் இருந்தது. அப்படிப்பட்ட வாடிக்கையாளர்களில் ஒருவர் தான் ஹெச். எம். ஆஸ்பத்திரியில் வேலை பார்க்கும் டாக்டர் விஜயகுமார்.

"டாக்டர் ஐயா எப்படியாவது என் திக்குவாயைக் குணப்படுத்துங்கள் ஐயா!" என்று செல்வம் கொங்குத் தமிழில் சைகையாகப் பேசியபோது இவனுடைய ஆர்வத்தைக் கண்டு அதிசயப்பட்டுவிட்டார் அவர். உடனே, தனது நண்பரான டாக்டர் பிரசாத் நடத்தி வரும் 'பாத்வே' அமைப்புக்குச்

* செல்வம்



* புவனா



* குழந்தைகளுக்கு நடக்கும் பல்வேறு பயிற்சிகள்...



சிபாரிசுக்கடிதத்தோடுசெல்வத்தை அனுப்பி வைத்தார்.

அடையாறிலுள்ள 'பாத்வே' என்னும் 'டாக்டர் தாத்துராவ்மெமோரியல்சாரிடபுள் டிரஸ்ட்' மருத்துவமனைக்கு வந்த இந்த இரண்டு மாதங்களிலேயே செல்வம் ஓரளவுக்குச் சரளமாகப் பேசக் கற்றுக் கொண்டு விட்டான். தமிழில் எழுதப் படிக்கவும் கற்றுக் கொண்டுவிட்டான். இவனுடைய புத்தி சாலித்தனத்தாலும், தன்னம்பிக்கையாலும் கவரப்பட்ட டாக்டர் பிரசாத், இவன் அந்த அமைப்பில், பேச்சுப் பயிற்சி பெறும் நேரம் போக மீதி நேரங்களில் செய்யும் வேலைகளுக்கான சம்பளமாக 'மாதம் நூறு ரூபாயை இவனுடைய எதிர்கால வாழ்க்கைக்காக இவன் கணக்கில் போட்டுக் கொண்டு வருகிறார். செல்வமும் டாக்டர் பிரசாத்தையே, தாயும், தந்தையுமாகக் கண்டு, அவரோடும் அந்த அமைப்போடும் ஒன்றிப் போய்விட்டான்! இவன் மட்டும்தானா இப்படி?

'பாத்வே'யின் இன்னொரு பகுதிக்குச் செல்கிறோம். அங்குள்ள சோபா ஒன்றில் ஐந்து அல்லது ஆறு வயதே நிரம்பிய பிஞ்சுப் பூ சுகன்யா நிச்சலனமாய் உட்கார்ந்திருக்கிறாள். சொக்கத் தங்கத்தின் நிறம். ரோஜாப் பூவுக்குக் கையும் காலும் முளைத்துப் பிறந்தது போன்ற அழகு. பார்த்தவுடனேயே



* டாக்டர் பிரசாத்

மடியில் தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்ச வேண்டும்போல் தோன்றுகிறது. அருகில் சென்று பார்க்கும் போதுதான் அத்தனை அழகான முகத்தில் இரண்டு கண்களும் குருடு என்று தெரிந்து நம் இதயம் சுக்கு நூறாய் வெடித்துச் சிதறுகிறது.-கண்களுக்கு

* செந்தில்குமார்.





மட்டும்தானா பார்வை இல்லே? வாயும் பேச முடியாத பிறவி ஊமை. மூளே வளர்ச்சியும் இல்லே. ஆனாலும் அவள் காதுகளுக்குக் கூர்மை அதிகம். அருகில் கேட்கும் பேச்சுக் குரல்களையும் ஓசைகளையும் கேட்டுத் தன் பார்க்க முடியாத கண்களை நாலாபக்கமும் திருப்புகிறாள். சிரிக்கிறாள். கைகால்களை அசைத்துக் கொண்டு சிணுங்குகிறாள். பார்க்கப் பார்க்க, ஒருவன் ஆண் பிள்ளை யானாலும் அழ ஆரம்பித்துவிடுவான்; அத்தனை சோகம் நம் நெஞ்சைப் பிழிகிறது.

நமக்கே இப்படி என்றால் அந்தக் குழந்தை யின் பெற்றோருக்கு எப்படி இருக்கும்? அருகிலிருக்கும் சுகன்யாவின் பெற்றோர்களான வாட்டசாட்டமான அந்த இளம்தம்பதிகளைப் பார்க்கிறோம். முந்தானைத் தலைப்பை வாயில் திணித்துக் கொண்டு குமுறுகிறாள் அந்த இளம் தாய். தந்தையோ சோகத்தை மறைக்கத் தூரமாக விலகிப் போகிறார். அதற்கு மேலும் அவர்களிடம் பேசும் சக்தி இழந்த நாம், டாக்டர் பிரசாத்தைப் பார்க்கிறோம்.

''வாருங்கள்! இன்னும் எத்தனை சுகன்யாக்கள் உள்ளே இருக்கிறார்கள்!'' என்று நம்மை வேறோர் அறைக்கு அழைத்துச் செல்கிறார்.

நாம் உள்ளே சென்றதும் பத்துப் பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க சில குழந்தைகள் பேந்தப் பேந்த விழிக்கின்றன. சில நம்மிடம் வந்து நம்மை அதிசயத்தோடு உற்று உற்றுப் பார்க்கின்றன. சில நம் கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டுச் சத்தம் போடாமல் சிரிக்கின்றன. இன்னும் சில, தங்கள் நோட்டுப் புத்தகங்களில் எழுதியுள்ள எழுத்துக்களை நம்மிடம் காட்டிப் பாராட்டுதல்களை எதிர்பார்க்கின்றன. பாராட்டும்போது சிலிர்த்துப் போய்ச் சந்தோஷப்படுகின்றன.

''இவள் பெயர் செல்வி. பன்னிரண்டு வயதாகிறது. திருச்செங்கோட்டைச் சேர்ந்தவள். இங்கே இவள் வரும்போது சிறிதும் மூளை வளர்ச்சி இல்லாமல்தான் இருந்தாள். எழுந்து நிற்க முடியாத அளவுக்கு உடலும் ஊனம். சிறுநீரும், மலமும் இவளுடைய கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டு போய்க் கொண்டே இருந்தன. இப்போது எங்கள் பயிற்சியின் மூலம் எவ்வளவோ குணமடைந்துவிட்டாள். அதோ அவன் பெயர் செந்தில்குமார்....'' இப்படி அங்குள்ள ஒவ்வொரு குழந்தையையும் டாக்டர் பிரசாத் நம்மிடம் அறிமுகப்படுத்தும்போது நம் மனம் குலுங்கிப் போகிறது.

''மொத்தம் இங்கே அறுபத்தேழு குழந்தைகள் சிகிச்சை பெறுகிறார்கள். அவற்றில் இருபத்தெட்டுப் பேர் தமிழகத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும் வந்து; இங்கேயே தங்கிச் சிகிச்சை பெறுகிறார்கள். மற்றவர்களெல்லாம் தினந்தோறும் பெற்றோர்களுடன் வந்து சிகிச்சை பெற்றுச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

''இந்தக் குழந்தைகளுக்கெல்லாம் இலவசமாகத்தான் சிகிச்சை செய்கிறோம். இங்கேயே தங்கிச் சிகிச்சை பெறும் குழந்தைகளுக்குச் சிறுசிறு கைத் தொழில்களையும் கற்றுத் தருகிறோம். ஆம்; இந்தக் குழந்தைகள் வாழ்த்து அட்டைகள் தயாரிக்கின்றனர். பேனாவுக்கான ரீஃபில்கள் தயாரிக்கின்றனர். கூடவே பேச்சுப் பயிற்சி, நடப்பதற்கான பயிற்சி போன்ற பயிற்சிகளையும் பெற்றுக் கொண்டிருக்கின்றனர்.....!'' என்கிறார் டாக்டர் பிரசாத்.

''அது சரி, டாக்டர். இப்படிப்பட்ட ஊனங்களுக்கு என்ன காரணம்?'' நாம் கேட்கிறோம்.

''பல காரணங்கள் இருக்கின்றன. தொற்று நோய்களின் காரணமாகத் தாயின் கருப்பைக்குள் இருக்கும்போதே ஏற்படலாம். பிறக்கும் போதும் ஏற்படலாம். பிறந்த

மாதம் ஒரு மாவட்டம்

மதுரை மாவட்ட மக்களுக்கு.....



கல்கி ஏற்கும் சமுதாயப் பணியில் முதல் மாவட்டமாக மதுரை மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்திருப்பது நினைவிருக்கிறதல்லவா! அதன்படி, மதுரை மாவட்டம் பற்றிய குறைகளும், முறையீடுகளும் தவிர, பெரிய சாதனைகள் என்று தாங்கள் கருதுகிற விஷயங்களைப் பற்றிய குறிப்புக்களும் கல்கி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி தேதி: 20.1.86.

உடனே எழுதி அனுப்புங்கள்!

— ஆசிரியர்.

பாண்டிச்சேரி மத்தியப் பல்கலைக்கழகம்

பாண்டிச்சேரி—605 001

பல்கலைக்கழகச் சின்னத்திற்கு ஓவியப்போட்டி

பாண்டிச்சேரி மத்தியப் பல்கலைக்கழகத்திற்குரிய சின்னம் (LOGO) போட்டியின் மூலம் தெரிந்தெடுக்கப்பட உள்ளது. மிகச் சிறந்ததாகத் தெரிந்தெடுக்கப் படும் ஓவியத்திற்கு ரூ. 5,000/— (ரூபாய் ஐந்தாயிரம்) பரிசு அளிக்கப்படும். சின்னத்தை வரைகின்ற போது பின்வரும் முக்கியக் கருத்துக்களுக்கு உருவளிக்கலாம் :

''பாண்டிச்சேரியின் தேசிய பாரம்பரியம், அண்ணல் அரவிந்தர், மகாகவி பாரதியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போன்றோருடன் புதுவை கொண்டுள்ள நெருங்கிய தொடர்பு; இவை தவிர பிரெஞ்சு மொழி மற்றும் கலாசாரத்துடன் உள்ள உறவுகள்; பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், அந்தமான், நிகோபார் தீவுகள், இலட்சத்தீவுகள் இவற்றிற்கும் கல்விப் பணிபுரிய இருப்பது — இப்பகுதியில் அமைக்கப் பட்டுள்ள முதல் மத்தியப் பல்கலைக்கழகம்.''

இப்பல்கலைக்கழகம் எவ்வாறு திகழ வேண்டுமென்று பிரதமர் திரு. இராஜீவ் காந்தி அவர்கள் துணை வேந்தருக்கு அனுப்பிய செய்தியில் கூறிய பின்வரும் கருத்துக்களைப் பிரதிபலிக்குமாறும் ஓவியங்கள் அமையலாம்.

''ஈடு இணையற்ற தனது தனி வரலாற்றுப் பின்னணியின் காரணமாகப் புதுவை மாநிலம் தனிச்சிறப்புடன் விளங்குவதோடு அல்லாமல், பாரதத்தின் வளர்ச்சிக்கும் சீரிய முறையில் தனது பெரும் பங்கை அளித்துள்ளது. இன்று அமையவிருக்கும் பாண்டிச்சேரி மத்தியப் பல்கலைக்கழகம் இப்புதுவையின் ஒப்பற்ற பாரம்பரியத்துக்கு ஏற்ப அனைத்து வாய்ப்புக் களையும் படைத்து பல அரிய அறிவியல் புதினங்களை, மக்கள் ஏற்றம் பெறும் வகையில் மலரச் செய்யும் என்று திண்ணமாக நம்புகிறேன்.''

பரிசுக்கான சிறந்த ஓவியத்தைப் பல்கலைக்கழகப் பிரதிநிதிகளும் ஓவிய நிபுணர்களும் அமைந்த ஒரு குழு தெரிந்தெடுக்கும். ஒரே நபர் எவ்வளவு ஓவியங்கள் வேண்டுமானாலும் வரைந்து அனுப்பலாம். ஓவியம் தெளிவான வண்ணப்படங்களாக இருத்தல் வேண்டும்.

ஓவியங்கள் 36'' × 24'' அளவில் இருத்தல் வேண்டும். ஓவியத்தில் பல்கலைக் கழகத்தில் குறிக்கோள் (MOTTO) அமைக்க இடம் விட வேண்டும். ஓவியரே ஒரு குறிக்கோளையும் அமைத்தும் அனுப்பலாம். சின்னத்தை/குறிக்கோளை ஏற்பதில் பல்கலைக்கழகத்தின் முடிவே இறுதியானது.

* ஓவியங்கள் பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டிய கடைசி தேதி: 31.01.1986.

* ஓவியங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:

உதவிப் பதிவாளர் (நிர்வாகம்),
பாண்டிச்சேரி மத்தியப் பல்கலைக்கழகம்,
212, அண்ணா சாலை,
இராம் இன்டர்நேஷனல் கட்டிடம்,
பாண்டிச்சேரி—605 001.

பின்னரும் மூளை சேதமடையலாம். பிர சவத்தின் போது வெற்றிடக் கருவி (Vaccum Forceps) களைப் பயன்படுத்திக் குழந்தையை வெளியே எடுக்கும் போதும் பிஞ்சு மூளை சேதமடைய வாய்ப்புண்டு. தவிர, தாயின் மனநிலைப் பிரச்னைகள், கருவுற்றிருக்கும் போது தாய் உட்கொள்ளும் மருந்துகளின் பின் விளைவுகள் ஆகியவையும் கூடக் காரண மாகின்றன.

''பொதுவாக நம் நாட்டைப் பொறுத்த வரை ஊட்டச்சத்துக் குறைவே இப்படிப் பட்ட குழந்தைகள் பிறக்கக் காரணமாகி றது. சில சமயங்களில் மிக நெருங்கிய ரத்த சம்பந்தமுள்ள பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகளும் இந்தக் கோளாறுகளால் பாதிக்கப்பட்டு விடுகின்றன. மனநிலை கோளாறுகள் பற்றிய அமெரிக்க அமைப்பு (AAMD) ஒன்றின் கணக்குப்படி இந்தியா விலுள்ள மொத்தமக்கள் தொகையில் மூன்று சதவீதம் பேர் இப்படிப்பட்ட மனநிலைக் கோளாறுகளால் பாதிக்கப்பட்டவர்களாகத் தான் இருக்கிறார்கள்!''

''இப்படிப்பட்ட குழந்தைகளுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணமும் ஆர்வ மும் உங்களுக்கு எப்போது ஏற்பட்டது?''

''ஓ! அது ஒரு பெரிய கதை! என் சொந்த ஊர் மைசூர். தாய்மொழி கன்னடம். என் அப்பா ஒரு டாக்டர். ஆண்களும் பெண்களு மாகச் சேர்ந்து என்னோடு பிறந்தவர்கள் என்னோடு சேர்த்துப் பன்னிரண்டு பேர். என் சகோதரி ஒருத்தியே மன வளர்ச்சி குன்றிய நிலையில்தான் பிறந்தாள். அது என்னை வெகுவாகப் பாதித்தது.

''என் தந்தையாரும் அவரது நாற்பதாவது வயதில் வலிப்பால் பாதிக்கப்பட்டுக் கண் பார்வை இழந்தார். அந்தச் சமயத்தில் டாக்டருக்குப் படித்துக் கொண்டிருந்த என் அண்ணன் ஒருவர் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி மனநிலை பாதிக்கப்பட்டார். இதெல்லாம் என்னை டாக்டருக்குப் படிக்கத் தூண்டின. தொடர்ந்து பேச்சுப் பயிற்சி நிபுணராகவும் தேர்ச்சி பெற்றேன்.

''பிறகு சென்னையில்தான் 73ம் ஆண்டு எனது டாக்டர் பணியைத் துவங்கினேன். நிறைய வருமானம் வந்தது. அந்த வருமானம் எனது சேவைமனப்பான்மையை மறைத்து நட்சத்திர ஹோட்டல்களில் ஆடம்பரமாக வாழத் தூண்டியது.

அப்படி நான் ஆடம்பரமாக வாழ்ந்து கொண்டிருந்தபோதுதான் கோபிச் செட்டி பாளையத்திலிருந்து ஒரு பெற்றோர் மன வளர்ச்சியில்லாத தங்களுடைய பெண் குழந்தைக்குச் சிகிச்சையளிப்பதற்காக என்னிடம் வந்தார்கள். அவர்களிடமும் நிறைய ஃபீஸ் வாங்கிக் கொண்டு சிகிச்சை யளித்துக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு நாள் அந்தப் பெற்றோர் தாங்கள் சென்னையில் தங்கியிருக்கும் வீட்டிற்கு வரும் படி வற்புறுத்தவே, நானும் சென்றேன். சென்றபோது, அவர்களுடைய வீட்டில் வந்தவர்களை உட்கார வைப்பதற்குக்கூட ஒரு நாற்காலி இல்லாததைக் கண்டு அதிர்ந் தேன். 'எனக்கு ஆயிரக்கணக்கில் ஃபீஸ் தருகிறீர்கள், அப்படியிருந்தும் உங்கள் வீட் டில் உட்காரக்கூட ஒரு நாற்காலி இல்லையே, ஏன்?' என்று கேட்டேன்.

''அதற்கு அவர்கள், 'டாக்டர் நாங்கள் ஒன்றும் வசதி படைத்தவர்கள் இல்லை. எப்படியாவது எங்கள் ஒரே பெண் குழந்தை யைக் குணமாக்கிவிட வேண்டும் என்பதற் காக இருக்கிற சொத்துக்களையெல்லாம் விற்றுத்தான் உங்களுக்கு ஃபீஸ் தந்து கொண்டிருக்கிறோம்!' என்றார்கள்.

''அவர்களின் அந்த பதிலில் என் ஆடம்பர மனம் வெட்கப்பட்டது; வேதனைப்பட்டது. அன்றிலிருந்து, 'இனி யாரிடமும் ஃபீஸ் வாங்குவதில்லை. எனது புனிதமான டாக்டர் தொழிலை சேவை மயமாகத்தான் செய்ய வேண்டும்' என்று சபதமெடுத்துக் கொண் டேன். அதன் விளைவுதான் என் தந்தையார் பெயரில் அமைக்கப்பட்ட 'டாக்டர் தாத்து ராவ் மெமோரியல் சாரிடபுள் டிரஸ்ட்' என்னும் அமைப்பு. நல்வழி அல்லது மார்க் கம் என்னும் பொருள்பட 'பாத்வே' என்று சுருக்கமான பெயரும் சூட்டியுள்ளேன்.

''எனது இந்தச் சேவை ஆர்வத்துக்காக ஆரம்பத்தில் 'டால்மியா'விலிருந்துதான் ஐம்பதாயிரம் ரூபாய் கொடுத்து உதவினார் கள். நல்ல மனம் படைத்த சில பணக்காரர் களின் உதவியும் எனக்கு உற்சாகத்தைக் கொடுக்கிறது. கடந்த இரண்டாண்டு கால மாக மத்திய அரசும் மானியம் வழங்கி ஊக்குவிக்கிறது. இருந்தாலும் சில சமயங் களில் சில அரசு அதிகாரிகள் என்னை மிக வும் புண்படச் செய்துவிடுகிறார்கள்.

''அப்படித்தான் ஒருமுறை ஓர் அதிகாரி வந்திருந்தார். என் மீது அனாவசியமான ஊழல் குற்றச்சாட்டுக்களையெல்லாம் கூறி னார். 'நீ மைசூர்க்காரனாக இருந்து கொண்டு எதற்காகச் சென்னைக்கு வந்து சேவை செய் கிறாய்? பணம் சுருட்டவா? உன்னுடைய காரை எப்படி வாங்கினாய்? ஏது பணம்?' என்று என்னை மிகவும் நோகச் செய்தார். என்னோடு சேர்ந்து இந்தச் சேவையில் ஈடு பட்டிருந்த சக டாக்டர் ஒருவரின் ஸ்கூட்ட ரைப் பார்த்துவிட்டு, 'உனக்கு எப்படி ஸ்கூட்டர் வந்தது?' என்றெல்லாம் கேட்ட தால் அந்த நண்பர் மனமுடைந்து 'சேவை யும் வேண்டாம், ஒரு மண்ணும் வேண்டாம்' என்று விரக்தியடைந்து இங்கிலாந்துக்குச் சென்றுவிட்டார். அங்கு இப்போது அவர் ஏராளமான வசதிகளோடு வாழ்ந்து கொண் டிருக்கிறார். என்னையும் அங்கு வந்துவிடும் படி வற்புறுத்தினார். நான்தான் இந்தக் குழந்தைகளைப் பிரிய மனமில்லாமல் இங் கேயே இருக்கிறேன்.

''இந்த டிரஸ்ட்டுக்கான மானியத்தை மத்திய அரசுதான் வழங்குகிறது. மாநில அரசு அதற்குச் சிபாரிசு செய்ய வேண்டும்; அந்த சிபாரிசுக்கே இத்தனை கெடுபிடி. இதெல்லாம் எதற்காக என்றால் 'சம் திங்' பெறுவதற்காகத்தான் என்று நண்

பர்கள் சொன்னார்கள். நான் உண்மையி லேயே நொந்து போனேன். என்னால் நம்பவே முடியவில்லை!

''இங்கே பணிபுரிவதற்குச் சம்பளமாக மாதம் ஆயிரம் ரூபாய் மட்டும்தான் இந்த ட்ரஸ்ட்டிலிருந்து பெறுகிறேன். அதை வைத்துக் கொண்டுதான் குடும்பத்தை நடத் திக்கொண்டிருக்கிறேன். எனது திருமணமும் வரதட்சணை ஏதும் இல்லாத கலப்புத் திரு மணம். நான் கன்னடியன். என் மனைவி சந்திரா ராஜஸ்தானி. அவள் வீட்டில் பொம்மைகள் செய்து விற்றுச் சம்பாதிக் கிறாள். என்னோடு சேர்ந்து இந்தக் குழந்தை களுக்கும் சேவை செய்கிறாள். என்னை இந்தச் சேவையில் ஊக்குவிக்கவும் செய்கிறாள். இந்த நிலையில் நான் லஞ்சம் கொடுக்கப் பணத்துக்கு எங்கே போவேன்?

''எப்படியோ பல மாதங்களின் தாமதத் திற்குப் பிறகாவது இந்த ஆண்டு சில நல்ல மனம் படைத்த அதிகாரிகளால் எங்களுக்கு மத்திய அரசின் மானியத் தொகை வந்து சேர்ந்துவிட்டது. அதுவரையில் மகிழ்ச்சி தான். அந்த அதிகாரிகளுக்கு நானும் இந்தக் குழந்தைகளும் நன்றிக் கடன் பட்டிருக் கிறோம்!'' என்று கூறி முடித்தார் டாக்டர் பிரசாத்.

அவர் கூறிய கதையைக் கேட்டதும் நாம் நெகிழ்ந்து போகிறோம். அதே சமயத்தில் இப்படிப்பட்டதோர் சேவை அமைப்பி லிருந்துகூட 'சம்திங்' எதிர்பார்த்து மானியத் தொகையைத் தாமதப்படுத்தும் அரசாங்கத் தின் சிவப்பு நாடா முறையைக் கண்டு ஆவேசப்பட்டுத் துடிக்கிறோம். குழந்தை களின் நலனுக்காகச் சத்துணவு போடுவ தாகப் பெருமைப்படும் அரசின் பெயரைக் கெடுப்பதற்கென்றே சில அலுவலர்கள், அதிகாரிகள் வந்து சேர்கிறார்கள். அவர்கள் தவறுகளைத் திருத்த வேறு சில அதிகாரிகள் செயல்பட வேண்டியிருக்கிறது. 'தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் தரப்படும்; தேடுங்கள் கண்டடைவீர்கள்' என்று ஏசு பெருமான் சொன்னார். ஆனால் இவர்களைப் போன்ற குழந்தைகள் எப்படித் தட்டுவார் கள், கைகளே ஊனமாயிருக்கும்போது! எப்படிக் கேட்பார்கள் வாயே ஊமையா யிருக்கும்போது! எப்படிக் கண்டடைவார் கள், கண்களே குருடாயிருக்கும்போது? எந்தையே எம்மை மன்னியும்! அரசு அதிகாரிகளே இவர்களுக்கான உதவிகளைத் தாமதப்படுத்தாமல் செய்து ஆதரியும்! ஏனெனில், 'தாமதப்படுத்துவதென்பது மறுக்கப்படுவதற்குச் சமம்' என்று நீதிபதி களே கண்டனம் செய்திருக்கிறார்கள்.

—நமது நிருபர்கள்.

அட்டை வண்ணப்படம், படங்கள்: யோகா

(சென்ற இதழ் அறிவிப்பிலும் இந்த இதழ் அட்டைப் படத்திலும் வெளியாகியுள்ள இக்கட்டுரைத் தலைப்பு அச்சாகும்போது, 'பாத்வே' அமைப்புக்கு அரசு மானியம் வந்து சேராவிட்டாலும், இப்போது கிடைத்து விட்டது என்பதையறிந்து மகிழ்கிறோம். மத்திய, மாநில அரசுகளுக்கும், அதிகாரிகளுக்கும் நன்றி செலுத்துகிறோம். — ஆ.ர்.)



* ஒரு தமிழர் தரைப்படைத் தளபதி யாகப் பதவி ஏற்கிறார்:

* கிருஷ்ணசுவாமி சுந்தர்ஜி

* கல்கிக்குச் சிறப்புப் பேட்டி அளித்துள்ளார். ஸாம்பின் கேள்விகள்:

* பாக். அணுகுண்டு நிஜமானதா? அதைச் சந்திக்க நாம் தயாரா?

* பொற்கோயில் இராணுவ நட வடிக்கைக்குத் தலைமை தாங்கிய போது அவர் மனநிலை எவ் வாறிருந்தது?

* ராணுவம் பற்றி மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள் என்ன?

* பேட்டி காண்பவர்: வாஸந்தி

* அடுத்த இதழில்: கவர் ஸ்டோரி



கல்கி

1986 ஜனவரி 19
மலர் 44 இதழ் 25
குரோதன தை 6



தமுக்கடிக்கப்படும் திட்டங்கள்!

வழக்கம்போல இந்த ஆண்டும் ஆளுனரின் சட்டசபைப் பேச்சு என்ற சடங்கு வெளி நடப்பு போன்ற மேளதாளங்களுடன் கன ஜோராக நடந்தேறியது. இந்தப் பேச்சைப் படிக்கும்போது, 'ஆகா! நம் கஷ்டமெல்லாம் தீர்ந்தது; இனி தமிழகத்தில் பாலும் தேனும் பெருக்கெடுத்து ஓடப் போகிறது' என்றே தோன்றும்! அப்படி ஏகப்பட்ட திட்டங்களைத் தமுக்கடித்துத் தெரிவிக்கிறது ஆளுனரின் உரை. அவர் என்ன செய்வார் பாவம்! படிக்கக் கொடுத்ததைப் படிக்க வேண்டியதுதானே அவர் கடமை!

எதிர்பார்ப்புகளைக் கிளறி விடுகிற இந்த உரைக்கும் உண்மை நிலைக்கும், மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது. உதாரணமாகக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள பத்து லட்சம் வீடுகளையே எடுத்துக் கொள்வோம். தமிழக அரசு தனது நிதி வசதிகளை லாப நோக்குடன் முதலீடு செய்யாமல் சத்துணவுத் திட்டம் போன்ற சமுதாய நலத் திட்டங்களிலேயே அதிகமாகச் செலவிடுகிறது என்ற கவலை பொருளாதார வல்லுனர்களிடையே ஏற்கெனவே உள்ளது. 'இப்போது நலிந்த பிரிவினருக்காகப் பத்து லட்சம் வீடுகள் எனில் அதில் முதலீடாகப் போகிற கோடிக்கணக்கான ரூபாய்க்கு லாபம் எதையும் எதிர்பார்க்க முடியாது. அப்படியே வருவாய் இருந்தாலும் அது மிக மிகக் குறைந்த அளவில்தான் இருக்கும். 'போனால் போகட்டுமே, நலிந்த பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தருவது அவசியம்தானே' என்ற வாதத்தை ஏற்றுக் கொள்வோமாயினும் அவை எத்தகைய வீடுகள் என்ற கேள்வி எழுகிறது. இன்றைக்கு வீட்டு வசதி வாரியமும் குடிசை மாற்று வாரியமும் நலிந்த பிரிவினருக்குக் கட்டி முடிக்கும்போதே நலிந்து போய் விடுகிற வீடுகளைத் தான் அளிக்கின்றன.' இனி கட்ட உத்தேசித்துள்ள வீடுகள் இதைவிடவும் சிறப்பாக





இருந்துவிடப் போவதில்லை. மாறாக இன்று கிடைப்பதை விடவும் மோசமானவையாகத் தான் இருக்கும். எனவே, மக்களின் வரிப் பணமாகிய இந்தக் கோடிக் கணக்கான ரூபாயும் வீணடிக்கப்படவிருக்கிறது என்றே துணிந்து கூறலாம். ஆக மொத்தம் இந்தத் திட்டத்தினால் மகிழ்ச்சியும் பயனும் அடையப்போகிறவர்கள், சில பல காண்ட்ராக்டர்களும் அவர்களிடம் கைகூசாமல் லஞ்சம் பெறுகிற சில அரசியல்வாதிகளும், அதிகாரிகளுமே.

தொழில் வளர்ச்சிக்கு ஏற்கெனவே உள்ள பல இலாகாக்கள் போதாதென்று, புதிதாக ஓர் அமைப்பை உருவாக்கப் போவதாக ஆளுனரின் உரை கூறுகிறது. ஏன், இருக்கிற அதிகாரிகளும் அமைச்சர்களுமே உள்ள நிலைமையை அபிவிருத்தி செய்யக்கூடாதா? அதற்குரிய ஆற்றல் இவர்களுக்கு இல்லையா? புதிய ஏஜென்ஸி எதற்கு? இந்தப் புதிய இலாகாவுக்குக் காரியாலயக் கட்டடங்கள், அப்புறம் தலைவர், அதிகாரிகள், எழுத்தர்கள், டைப்பிஸ்ட்டுகள் என்று நியமனமாகிக் கோப்புக்கள், கடிதங்கள் என்று காகித வேலையும் செலவினங்களும் ஏகமாக அதிகரித்துக் கொண்டு போவதுதான் நிகர லாபமாய் இருக்கும். மக்களின் வரிப் பணம் இதிலும் வீணடிக்கப்படும்.

மத்திய அரசுத்துறை நிறுவனங்கள், லாபகரமாக இயங்க வேண்டும் என்று, ராஜீவ் படித்தபாடத்தைத்தமிழக அரசும் ஆளுனர் உரையில் திரும்பப் படித்திருக்கிறது. தமிழக அரசின் எத்தனை நிறுவனங்கள் எத்தனை கோடி நஷ்டமடைந்து வருகின்றன என்று பார்த்தால் திகைப்பாக இருக்கும். ஆளுனரின் உரை காரணமாக இந்த நிலைமையில் திடீர் மாற்றம் ஏதும் ஏற்பட்டுவிடாது. நஷ்டம் எதனால் வருகிறது என்று கண்டறிந்து நிலைமையைச் சீர்திருத்துகிற உறுதி வேண்டும். இது இல்லாத பட்சத்தில் மேல் நாடுகள் பல சமீபத்தில் செய்ததுபோல் பங்குகளைப் பொது மக்களுக்கு விற்று இந்த நிறுவனங்களைத் தனியார் துறை நிர்வாகத்துக்கு மாற்றிவிடலாம்.

ஆளுனர் உரை ஆசை காட்டுவது போல் காவிரி நீர்ப் பிரச்னை சுலபத்தில் தீரக் கூடியது அல்ல. 'எங்களுக்கு மின்சாரம் கொடுங்கள். நாங்கள் தண்ணீர் தருகிறோம்' என்கிறது கர்நாடக அரசு. தமிழகமோ, வருடத்தில் பத்து மாதம் மின் வெட்டில் தடுமாறிக் கொண்டிருக்கிறது.

நம்மிடம் மின் உற்பத்தியை மேலும் அதிகரிக்க உதவக் கூடிய ஆறுகளும் இல்லை; நிலக்கரியும் இல்லை. இருப்பினும் கப்பல் மூலமாக நிலக்கரி கொண்டு வந்தேனும் நாம் இந்த அடிப்படைப் பிரச்னையைச் சமாளித்தாக வேண்டும். இரண்டாவதாக, அதிகரித்துக் கொண்டே போகும் வேலையில்லாத் திண்டாட்டத்தைச் சமாளிக்கத் தொழிலாளர்களை அதிகம் பயன்படுத்தும் தொழில்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும். மூன்றாவதாக, கிடைக்கிற காவிரி நீரை எவ்வளவுக்கெவ்வளவு சிக்கனமாகப் பயன்படுத்தி அதிகபட்ச மகசூல் காணலாம் என்பதற்கான ஆராய்ச்சிகள் நடத்தி அதன் முடிவுகளை விவசாயிகளுக்குத் தெரிவித்து உணவு உற்பத்தி பாதிக்கப்படாமல் காக்க வேண்டும். நான்காவதாக செலவாகிற ஒவ்வொரு பைசாவும் மக்களின் பணம் அது மக்களுக்கே பயனாக வேண்டும் என்ற கருத்து மேலோங்கி தமிழக அரசில் ஒவ்வொருவரும் சுய நலத்திலிருந்தும் மெத்தனத்திலிருந்தும் விடுபட வேண்டும். இந்த நான்கு அம்சங்களிலும் வெற்றி பெறாத வரை தமிழகத்தின் ஒளிமயமான எதிர்காலம் ஆளுனரின் பேருரையில் மட்டுமே இருக்கும்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.

சம்பளத்தைக் கேட்டால்



—ஒரு கல்லூரி நிர்வாகத்தின் அடக்குமுறை

"வாத்தியாருங்க எல்லாம் வந்தாச்சா?"

— திண்டிவனம் அருகிலுள்ள மைலம் தமிழ்க் கல்லூரி முதல்வர் கார்த்திகேயன் அறைக்குள் நுழைந்த ஓர் ஆள் இப்படிக் கேட்டதும்முதல்வருக்குஒன்றும்புரியவில்லை.

"யாரப்பா நீ?" ஆச்சரியத்தோடு கேட்டார்.

"என்ன? யாரா? தெருவுல போறவன், வர்றவனுவந்துகேட்பான்?என்னையாருன்னு நினைச்சே?"

அந்த ஆள் இப்படிக் கேட்டதும் உண்மையிலேயே குழம்பிப் போன முதல்வர், அந்த ஆள் யார் என்று தெரிந்து கொள்வதற்காக அருகில் இருந்த பியூனை விசாரிக்கிறார்.

பியூன் மைலாசலத்திற்குத் திக்குவாய். எனவே, "ரா... ரா... ராமலிங்கம். கோயில் ஆள்...." என்று சொல்லி முடிப்பதற்குள் ராமலிங்கம் மறுபடியும் சில தகாத வார்த்தைகளை முதல்வரிடம் உபயோகப்படுத்துகிறார்.

ஏற்கெனவே முதல்வருக்கும் கல்லூரி நிர்வாகியான சிவஞான பாலய்ய சுவாமிகளுக்கும் இடையே உறவு நிலை சகஜமானதாக இல்லையென்பதால், இந்தச் சம்பவம் சுவாமிகளிடம் திரித்துக் கூறப்பட்டு விடுமோ என்று அஞ்சிய முதல்வர், சுவாமிகளுக்கு மிகவும் நெருக்கமான கிளார்க் நக்கீரனைக் கூப்பிட்டு நடந்ததை விளக்குகிறார்.

நக்கீரனுக்கு அடுத்தபடியாகப் பேராசிரியர் பழ. முத்தப்பன் முதல்வர் அறைக்குள் வருகிறார். நடந்ததைக் கேள்விப்பட்டு ராமலிங்கத்தை முதல்வரிடம் மன்னிப்புக் கேட்கச் சொல்கிறார். ராமலிங்கமோ யாரையும் லட்சியம் செய்யாமல் சென்றுவிடுகிறார்.

கோயிலில் வேலை செய்யும் யாரோ ஓர் ஆள் வந்து இப்படித் தங்கள் முதல்வரை அவமானப்படுத்திவிட்டார் என்பதைக் கேள்விப்பட்ட மாணவர்கள், அந்தச் சம்பவத்திற்கு விசாரணை தேவை என்று டிசம்பர் 3ம் தேதியன்று ஸ்டிரைக் செய்யவே, முதல்வரும் மற்ற பேராசிரியர்களும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதன் பேரில் ஸ்டிரைக்கை வாபஸ் பெற்றுக் கொண்டு வகுப்பறைகளுக்குச் செல்கின்றனர். ஆனாலும் மாணவ மாணவிகள் பெஞ்சுகளில் அமராமல் தரையில் அமர்ந்து உண்ணாவிரதம் இருக்கின்றனர்.

இந்த நிலையில், பஸ் ஸ்டாண்டு அருகில் 'சிலர்' ஒரு மாணவரை அடித்துவிடவே தகராறு வலுவடைந்து கல்லூரியில் பதற்ற நிலை உருவாகிறது. பதற்ற நிலையைத் தணிப்பதற்காகத்திருச்சியிலிருந்து டெப்டி டைரக்டர் வருகிறார்; மாணவர்களை அழைத்து, "பாரம்பரியம் மிக்க மைலம் தமிழ்க் கல்லூரியின் பெயர் வீணாகக் கெட்டுப் போய்விடக் கூடாது...." என்று அறிவுரை வழங்குகிறார்.

"நீங்கள் சொல்வது சரிதான்! முதல்வரை அவமானப்படுத்தியது எங்களை அவமானப்படுத்தியது போலல்லவா? எங்கள் முதல்வருக்கே இந்த நிலைதான் என்றால் மாணவர்களான எங்கள் கதி என்ன?" என்கிறார்கள் மாணவர்கள்.


இந்தப்பிரச்னையோடு, பேராசிரியர்களின் சம்பளப் பிரச்னையும் சேர்ந்து கொண்டது. அதையும் விசாரித்து உடனடியாகச் சம்பளம் தர வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்து விட்டுச் சென்றுவிட்டார் டெபுடி டைரக்டர்.

கல்லூரி முதல்வரும், மாணவ, மாணவிகளும் முதல்வர் அறையில் நடந்த சம்பவத்துக்கு நீதி விசாரணை தேவை என்று கல்லூரி நிர்வாகத்திற்குக் கடிதம் அனுப்புகின்றனர்.

அதற்கு நிர்வாகத்திடமிருந்து எந்தவிதமான பதிலும் வரவில்லை. அதற்கு மாறாக மாணவர்கள் ராமலிங்கம் வீட்டிற்குச் சென்று அவரை அடிக்க முயன்றதாகவும், அதை விசாரிக்கும்படியும் முதல்வருக்கு நிர்வாகம் கடிதம் அனுப்புகிறது.

முதல்வரும் விசாரிக்கிறார். மாணவர்கள் 'நிர்வாகம் கூறியிருப்பதுபோல் எதுவும் நடக்கவில்லை!' என்று சத்தியம் செய்கிறார்கள். அது நிர்வாகத்திற்குத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் டிசம்பர் 19ம் தேதியன்று பிரச்னையை உருவாக்கிய கோயில் ஆளான அந்த ராமலிங்கம் மறுபடியும் கல்லூரி



* மைலம் தமிழ்க் கல்லூரி.



* சந்திரமௌலி.



* டீக்கடைக்காரர்.



* பழ. முத்தப்பன்.

அலுவலகத்திற்கு வருகிருர். மாண வர்கள் அவரை அழைத்து, "உங்கள் மீது நீதி விசாரணை வேண்டுமென்று நாங்கள் கேட்டுள்ளபோது, எதற் காகக் கல்லூரிக்குள் நுழைந்து வீண் குழப்பங்களை உருவாக்குகிறீர்கள்?" என்று அவரிடம் சமாதானமாகப் பேசி அவரை அனுப்பி வைக்கின்றனர்.

மறுநாள், நெய்வேலி நிலக்கரிச் சுரங் கத்தில் ஃபிட்டராக வேலை பார்க்கும் ராமலிங்கத்தின் அண்ணனுன பன்னீர் என்பவர் கல்லூரிக்கு வருகிருர்.

பேராசிரியர் பழ.முத்தப்பனிடம் வந்து, "என் தம்பியைக் கல்லூரிக்குள் வரக் கூடாதுன்னு எவன் சொன்னுன்? அடை யாளம் காட்டுங்க...." என்று திமிராகக் கேட்கிருர்.

அவரைப் பேராசிரியர் சமாதானப்படுத்திக் கொண்டிருக்கும்போதே, இடைவேளைக்காக வெளியே வந்த மாணவர்களைக் கண்டதும் வாய்க்கு வந்தபடி திட்டிச் செருப்பைக் கழற்று கிருர் பன்னீர். மாணவர்களும் ஆத்திரப்பட் டுக் கூட்டம் சேரவே, தகராறு முற்றுகிறது. கடைசியில் ஒருவழியாகப் பொது மக்களும், பேராசிரியர்களும் இருபுறமும் சமாதானப் படுத்தி நிலைமையைச் சீராக்குகின்றனர்.

ஆனல், கல்லூரி முடிந்து மாணவர்கள் திரும்பிக்கொண்டிருந்த சமயத்தில், சவுக்குக் கட்டைகளோடு வந்த ஆறேழு பேர் மாண வர்களைத் தாக்குகின்றனர்; மாணவிகள்



* சிவசேகரன்.



* பழனியின் பாட்டி.

அலறியடித்துக் கொண்டு ஓடுகின்றனர். சரியாக அகப்பட்டுக் கொண்ட பழனி என்ற மாணவரை மண்டையில் அடித்துக் கீழே தள்ளி மிதிக்கின்றனர். மாணவர்களில் பலருக்குச் சரியான அடி. தப்பித்தோம் பிழைத்தோம் என்று மாணவர்களும் ஓட்டம் பிடிக்கின்றனர்.

இத்தனை ரகளைகளையும் நிர்வாகம் கண்டு கொள்ளாமல் இருக்கவே வேறு வழியின்றி முதல்வர் போலீஸில் புகார் செய்யவே, ராமலிங்கத்தோடு சேர்த்து சேகர், ராமு ஆகிய இருவரையும் போலீஸார் கைது செய்கின்றனர்.

இத்தனை பிரச்னைகளுக்கும் பதற்றங்களுக்கும் என்னதான் காரணம்?

சுவாமிகளுக்கு மிகவும் வேண்டியவரான கிளார்க் நக்கீரனிடம் விசாரித்தபோது, ''தகராறு நடந்ததெல்லாம் உண்மை. ராமலிங்கம் முதல்வர் அறைக்குள் நுழைந்து தகாத முறையில் நடந்து கொண்டதைக் கேள்விப்பட்டுச் சென்று நான்தான் சமாதானப்படுத்தினேன். முதல்வருக்கும், நிர்வாகத்திற்கும் பிரச்னைகள் ஏற்படும்போதெல்லாம் சண்டை வராமல் சமாதானம் செய்து வைப்பது நான்தான். இந்தக் கலவரத்திற்குக் காரணம், முதல்வரோ, மாணவர்களோ அல்ல. அவர்களைத் தூண்டி விடும் பேராசிரியர் பழ. முத்தப்பன்தான் காரணம். அதற்கு மேல் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை'' என்று சொல்லிவிட்டார்.

பேராசிரியர் பழ. முத்தப்பனைச் சந்தித்து, ''உங்களின் தூண்டுதல்தான் இத்தனை கலவரங்களுக்கும் காரணம் என்கிறார்களே?'' என்று கேட்டோம்.

''மயிலம் கல்லூரியில் பணியாற்றும் ஆறு பேராசிரியர்களையும் ஒன்றிணைத்து அசோஷியேஷன் ஆரம்பித்தேன். எங்களுக்கு எப்போதும் முதல் தேதியன்று சம்பளம் கொடுக்கப்பட்டதேயில்லை. எந்தத் தேதியில் கொடுப்பார்கள் என்றும் தெரியாது. இதை நான் அசோசியேஷன் மூலமாகக் கேட்டேன். அது பற்றி டெபுடி டைரக்டர், கல்வி அமைச்சர்வரை புகார் செய்தேன். இதெல்லாம் நிர்வாகத்திற்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் என்னை எப்படியாவது பழி வாங்க வேண்டுமென்று நிர்வாகம் துடிக்கிறது. அப்படித்தான் ஏழு ஆண்டுகளுக்கு முன்பு நிர்வாகம் என் சீனியாரிட்டியில் கை வைத்தது. கோர்ட்டுக்குச் சென்றபோதுதான் நீதி கிடைத்தது.

''நிர்வாகத்தின் நோக்கமெல்லாம் எங்கள் அனைவரையும் அடிமையாக வைத்திருக்க வேண்டும் என்பதுதான். இன்னமும் நாங்கள் சுவாமிகளைப் பார்க்கச் சென்றால், பேராசிரியர்களான நாங்களே அவர் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கிக் கைகட்டி, வாய் பொத்தி, மணிக் கணக்கில் நின்று கொண்டுதான் பேச வேண்டும். அவர் முன்னால் உட்கார முடியாது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.... அப்படிப்பட்டதொரு அவல நிலைதான் எங்களுக்கு. இவற்றோடு, மாநிலம் முழுவதும் நடந்த ஆசிரியர் போராட்டத்திற்குக்கூட எங்களால் ஆதரவு தரமுடியவில்லை. அந்த அளவுக்கு நிர்வாகம் எங்களை அடிமைப்படுத்துகிறது.

''இதையெல்லாம் கேட்டால் நிர்வாகத்திற்கு வேண்டாதவனாகிவிடுகிறேன். உண்மையில் நடந்த கலாட்டாக்களையெல்லாம் நிர்வாகம்தான் தூண்டிவிட்டுச் செய்திருக்கிறது!'' என்றார் பேராசிரியர் பழ. முத்தப்பன்.

அங்கு அடிதடிகளை நேரில் பார்த்த சாட்சியான சந்திரமௌலி என்பவரைச் சந்தித்தபோது, அவர் பயந்து போய்க் காணப்பட்டார். ''அப்போ நான் பார்த்ததை எழுதிக் கொடுத்தேன். இப்போ பிரச்னை பெரிசாயிடுச்சு. நான் ஏதாவது சொல்லப் போனால், சுவாமி ஏதாவது கூப்பிட்டுக் கேட்பார். வம்பு.... விட்டுடுங்க!'' என்று சொல்லிவிட்டார்.

அடிபட்ட பழனியைச் சந்திப்பதற்காக அவர் வீட்டிற்குச் சென்றோம். அப்போது அவர் அங்கே இல்லை. அங்கிருந்தால் பிரச்னை என்று வெளியூர் சென்றுவிட்டதாகச் சொன்னார்கள். அவருடைய மைத்துனர் சிவசேகரனும் பாட்டியும்தான் இருந்தார்கள்.

''பழனி ரொம்பவும் சாது. எந்த வம்பு தும்புக்கும் போகமாட்டான். என்னதான் சாமியாக இருந்தாலும் இப்படியா ஆள் வைச்சு அடிக்கிறது? அடிச்சவங்களைப் போலீஸ் பிடிச்சுக்கிட்டுப் போனாலும், சாமியார் அவர்களை ஜாமீனில் வெளிவர ஏற்பாடு செய்துவிட்டாரே!'' என்றார் சிவசேகரன்.

அதற்குள் பழனியின் பாட்டி, அடிதடியின் போதுகிழிக்கப்பட்ட பழனியின் சட்டையைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு கதற ஆரம்பித்துவிட்டார்.

மாணவர்களைச் சந்தித்தபோது, ராமலிங்கத்தின் அண்ணன் நெய்வேலியிலிருந்து வந்து அடித்து விட்டுச் சென்றது திட்டமிட்ட செயல் என்றே பலரும் சொன்னார்கள். ''1980ம் ஆண்டு இந்தக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போஜன், வசந்தா ஆகிய இருவரும் ஒருவரையொருவர் காதலித்ததைக் குற்றமாகக் கருதி டி.சி. கொடுத்து அனுப்பிவிட்டார்கள்; பிறகு அவர்கள் தனியாகத் தேர்வு எழுதி, வெற்றி பெற்றுத் தம்பதிகளாக மாறியிருக்கிறார்கள். தற்போது புதுவை கல்லூரியில் பேராசிரியராக இருக்கும் இளங்கோ மைலத்தில் படித்தபோது, விடுதியில் இலவசமாக உணவு தருவதாய்க் கையெழுத்து வாங்கிக் கொண்டு, நூற்றியெழுபது ரூபாய் கட்டணம் கேட்டது நிர்

இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் பால் பண்ணை நடத்துகிறார். சுமார் நூறு பசுக்களை வாங்கி, அவர் பால் வியாபாரம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்! ஒவ்வொரு பசுவும் ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் லிட்டர் பால் கொடுக்கும்.

— தகவல்: சேலம் சக்தி.



சலவை தோறும் பொலிவு...சலவைக்கு சலவை...பவர் பேக்டு ஸர்ஃப் புத்தாடைபோல் வெண்மை பொலிய வெளுக்கிறது!


வெளுக்கும் ஒவ்வொரு சட்டைக்கும், ஒவ்வோர் ஆடைக்கும் வெண்மை மிடுக்கு, புதுமைக் கருக்கு-அளிக்குது பவர் பேக்டு ஸர்ஃப். அன்றன்றே வாங்கி அணிவது போல் என்றென்றும்...கோடித் துணிபோல் கோலப் புதுமை.

இதுவரை இல்லாத ஏற்றமான சக்தி செறிந்து வருகுது பவர் பேக்டு ஸர்ஃப்... போராற்றல் மிகுந்தது. பேணிக் காப்பதில் உயர்ந்தது. ஆழ ஊடுருவித் துப்புரவாக்கும் சக்திபடைத்தது! அடைந்திராத அமோகமான நுரைவளம் மிகுந்தது.

விடாத அழுக்கையும் விரட்டியடிக்கும், வெண்மையினை வாழ்விக்கும், காலமெல்லாம் துணிப் புதுமை காக்கும்.

வெண்ணிறமோ, வர்ணமோ...விசேஷத் துணிகள், அன்றாடத் துணிகள் எல்லாமே ஒளிமிளிரும் ஒப்பற்ற வெள்ளைவெளேர்... ஸர்ஃப் சலவையிலே...நித்தமும் நிலைபெறுமே புத்தாடைக் களையுடனே.


சலவைப் பவுடர்கள் பலநூறு இருக்கலாம், ஆனால் உங்கள் குடும்பத் துணிகளுக்கு நம்பிக்கையானது ஸர்ஃப் ஒன்றுதான்... ஸர்ஃப் அன்றி வேறில்லை.



ஸர்ஃப் சலவை: ஒப்பற்ற வெள்ளைவெளேர், சகல துணிகளுக்கும் புதுமை ஜோ

LINTAS SU 331 2517 T

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.



ஒரு வழக்கு ஆறு மொழிகள்

அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் நடந்த ஒரு வழக்கைப் பற்றிய சுவையான செய்தி இது.

தமிழ்நாட்டில் இருந்து அலகாபாத்தில் குடியேறிய ஒரு வீட்டுச் சொந்தக்காரருக்கும் அவர் வீட்டில் குடியிருக்கும் ஈரான் நாட்டைச் சேர்ந்த மாணவர் ஒருவருக்கும் தகராறு ஏற்பட்டு விஷயம் உயர்நீதி மன்றம்வரை சென்றது.

தன் தாய்மொழியான பாரசீக மொழியில்தான் தன்னால் கோர்ட்டில் தெளிவாகப் பேச முடியும் என்று கூறியதால் ஈரானிய மாணவர் பாரசீக மொழியில் பேச அனுமதிக்கப்பட்டார்.

அவருடைய சாட்சியாக ஸ்ரீலங்காவில் இருந்து வந்து தற்காலிகமாகத் தங்கியுள்ள நண்பரை விசாரிக்கச் சொன்னார். அந்த நண்பருக்குத் தெரிந்ததோ சிங்கள மொழி. எனவே அம்மொழியும் கோர்ட்டில் ஏற்கப்பட்டது.

வீட்டுச் சொந்தக்காரர் தன்னுடைய சாட்சியாக ஒரு கிறித்தவப் பாதிரியாரை விசாரிக்க வேண்டும் என்றார். அப்பாதிரியாரோ தாம் கற்ற மத போதனை முழுவதும் லத்தீன் மொழியில் என்றும் எனவே லத்தீன் மொழியில் பேச அனுமதிக்குமாறும் கேட்டார். அதுவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதனிடையே ஈரானிய மாணவர் தன்னுடைய வழக்கறிஞருக்கு உதவி செய்ய ஒரு ஜூனியர் வேண்டுமெனவும் அவருக்கு அராபிய மொழிதான் தெரியும் என்றும் கூற அதுவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தான் அவருக்குச் சளைத்தவரில்லை என்று காட்ட வீட்டுச் சொந்தக்காரரும் தம்முடைய வழக்கறிஞருக்கும் ஒரு ஜூனியர் வேண்டுமென்றும் அவருக்குச் சிந்தி மொழிதான் தெரியும் என்று கூற அதுவும் அனுமதிக்கப்பட்டது.

தீர்ப்பு வாசிக்கப்படும் அன்று நீதிமன்றத்தில் பல்வேறு மொழியறிஞர்கள் கூட்டம் காணப்பட்டது.

நீதிபதி முப்பத்தேழு பக்கம் அடங்கிய தன் தீர்ப்பைப் படித்தார், சமஸ்கிருத மொழியில்!

ஆதாரம்: டெக்கான் கிரானிகல்.

தகவல்: வி. ந. ஸ்ரீதரன்.

வாகம். அதைத்தட்டிக்கேட்டதற்காக அவரை சஸ்பெண்டு செய்து அலைக்கழித்திருக்கிறது நிர்வாகம்!'' என்று மிகவும் வருத்தத்தோடு பேசினார்கள் மாணவர்கள்.

இவற்றோடு, சுவாமிகளைப் பார்க்க வேண்டுமென்றால், மாணவிகள் எதிரிலேயே மாணவர்கள் சட்டையைக் கழற்றி விட்டு வெற்றுடம்போடுதான் பார்க்க வேண்டும் என்பதில் அனைவரும் மனம் புழுங்குகிறார்கள்.

இதுபற்றி நிர்வாகத் தரப்பில் என்ன சொல்லப்படுகிறது என்பதை அறிந்துகொள்வதற்காக, கல்லூரி நிர்வாகியான சிவஞான பாலய்ய சுவாமிகளைச் சந்தித்தபோது, சுவாமிகள் நம்மிடம் எதுவும் சொல்ல மறுத்துவிட்டார். வழக்கறிஞரான அவருடைய மகன்தான், ''இதைப் பற்றிப் பத்திரிகைக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அதுவும் இப்போது ச.'யாகிவிட்டது. உங்களுக்கு யார் நியூஸ் தந்தது? பேரைச் சொல்லுங்கள்....'' என்று நம்மையே புலன் விசாரித்தார்!

அந்தப் பகுதி சப்—இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமாச்சாரியைக் கேட்டதற்கு, ''ராமலிங்கத்தைப் பழனி என்ற மாணவர் கிண்டல் செய்ததால்தான் சிறு தகராறு ஏற்பட்டுவிட்டது. நான்தான் கல்லூரியைச் சில நாட்களுக்கு மூடி வைத்தால் சரியாகிவிடும் என்று அட்வைஸ் செய்தேன்!'' என்று சுருக்கமாக முடித்துக் கொண்டார்.

ஊர்ப் பொதுமக்களைச் சந்தித்துக் கேட்டபோது, ஒருவரும் பேசவே முன்வரவில்லை. ஆனாலும் முதல்வரை ராமலிங்கம் தரக்குறைவாகப் பேசியதற்கும் சில நாள் கழித்து, செல்வம் டீ ஸ்டாலில் டீ குடிக்கச் சென்ற சாமுவேல் என்ற மாணவரைக் கோயில் ஆட்கள் சட்டையைப் பிடித்து அடிக்கப் போனதும், ஊர் மக்கள் தடுத்துச் சமாதானப்படுத்தியதும் உண்மை என்று அந்த டீக்கடைக்காரரே சொன்னார்.

எது எப்படியோ, பாரம்பரியம் மிக்க மைலம் தமிழ்க் கல்லூரி மூடிக் கிடப்பது இதுவே முதல் முறை. அங்கு பயிலும் அறுபத்தைந்து மாணவ, மாணவிகளும் கல்லூரிக்குள் நுழையவே அச்சப்படும் சூழ்நிலை. இதற்கு நிர்வாகமும் அரசும் என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றன என்பதுதான் நமது கேள்வி.

— ராசி. அழகப்பன்

படங்கள்: ஐகோ ஸ்டுடியோ.



• நேரு: "எதிரானவரின் கருத்துக்களை வெறுத்தவர்" ராஜாஜி

ஸி. ஆருக்கு எதிராக வாக்களித்தார். ஆனால் தாம் சிறுபான்மையினருள் ஒருவராக இருப்பதை உணர்ந்தார். ஸி. ஆரின் கருத்தை நிராகரித்து சிறுபான்மையினருடன் சேர்ந்த மற்றொருவர் கஃபார் கான். காந்தியின் கருத்துக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக அவர் செயற்

நேருவின் எதிர்ப்பு ஆதரவாக மாறியது

6

பிரிட்டிஷ் அரசுடன் ஸி. ஆர். பேரம் பேச முயன்றது பிரயோஜனமற்ற தவறான காரியம் என்று காந்தி நினைத்ததற்குக் காரணம் அவரது அஹிம்சைக் கொள்கை மட்டும் அல்ல. ஜூன் இறுதியில் காந்தி வைஸ்ராயுடன் மூன்று மணி நேரம் பேசியிருந்தார். அதன் விளைவாக இரண்டு முடிவுகளுக்கு அவர் வந்திருந்தார். முதலாவது, பிரிட்டன் உலகப் போரில் ஒரு ஆபத்தான நிலையில் சிக்கியிருந்தபோதிலும் இந்தியாவிடம் அது கௌரவமாக நடந்து கொள்ளப் போவதில்லை. இரண்டாவது, காங்கிரஸின் திட்டங்களை முறியடிப்பதில் பிரிட்டிஷ் ஆட்சி பீடமும் முஸ்லீம் லீகும் ஒருவரோடு ஒருவர் ஒத்துழைக்கும் போக்கு வளர்ந்து வந்தது.

மகாத்மாவின் அறிவுரையைப் புறக்கணித்த காங்கிரஸ் நிர்வாகக் குழு ஸி. ஆரை ஆமோதித்தது. இதற்கும் இரண்டு காரணங்கள் இருந்தன. காந்தியும் வைஸ்ராயும் பேச்சு வார்த்தைகள் நடத்திய சில நாட்களுக்குள் பாரீஸ் வீழ்ந்தது. இதனால் காங்கிரஸுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள பிரிட்டனுக்குஒருபுதியநியாயமான காரணம் இருந்தது என்று பலர் எண்ணினர். இரண்டாவது காரணம், ஸி. ஆரின் வாதத் திறமை. இதனால் அவர் பக்கம் பலர் சாய்ந்ததை காந்தி ஒப்புக் கொண்டு கூறினார்: "விடா முயற்சி, அச்சமின்மை, திறமை, எதிராளிகள் உட்பட பிறர் உணர்வுகளை மதித்தல்—யாவும் ஸி. ஆரிடம் உள்ள பண்புகள்". ஸி. ஆருக்கு முதன் முதலாக ஆதரவு அளித்தவர்களுள் ஒருவர் காங்கிரஸ் அக்கிராசனர் மௌலானா ஆசாத். ஆனால் மகாத்மா கூறியது போல், "சர்தார் படேலின் ஆதரவு தான் ஸி. ஆருக்குக் கிடைத்த மகத்தான பரிசு!" செயற் குழுவில் ஜவஹர்லால்

குழுவிலிருந்து ராஜினாமா செய்தார். ஜய பிரகாஷ் நாராயண் சிறையிலிருந்தபடி நேருவிடம் வேண்டினார்:

"ராஜாஜி நம்மை முதுகில் குத்திவிட்டார். நீங்கள் இந்த மாபெரும் தவறை எதிர்த்தீர்கள் என்று தெரிந்ததும் பெரிய நிம்மதி ஏற்பட்டது. ஆனால் அது போதுமா? நீங்கள் செயற்குழுவில் உங்கள் பதவியைத் துறக்க வேண்டும். பிரிட்டனுடன் ஒப்பந்தம் என்று ஒன்று ஏற்படுமானால் நீங்கள் காங்கிரஸிலிருந்து விலகிப் போய் வேறு அரசியல் அமைப்பை ஆரம்பிக்க வேண்டும். வல்லபாயும், ராஜாஜியும் காந்திஜியுடன் முறித்துக் கொள்ளத் தயங்கவில்லை. உங்கள் முன் நிதர்சனமாயுள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பணியை மேற்கொள்ள நீங்கள் தயங்கலாமா?"

1940, ஜூலை 28. பூனாவில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடியது. செயற்குழுவின் தீர்மானங்களை அலசியது. இந்தப் பெரிய சபையிலும் ஸி. ஆர். மகாத்மாவின் அறிவுரையைப் புறக்கணிக்குமாறு வேண்டினார். ஸி. ஆரின் இந்தக்கடினமான பணி காந்தியின்

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — II
ராஜ்மோகன் காந்தி



• ஜே.பி: "முதுகில் குத்திவிட்டார் ராஜாஜி"

ஒரு விமர்சனம் காரணமாகச் சற்று எளிதாயிற்று. "என்னுடைய கருத்து ஏற்புடையதல்ல என்றால் மாற்று வழி ஒன்றே; ராஜாஜி கூறுவது மட்டுமே" என்று அவர் கூறியிருந்தார். "காந்திஜியின் அஹிம்சைக் கொள்கைக்கும் விதிவிலக்கு உண்டு" என்று சுட்டிக் காட்டினார் ராஜாஜி. அவர் முதல் உலகப் போரின்போது படை வீரர்களைத் திரட்டித் தந்ததை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு நினைவூட்டினார். "சுதந்திர இந்தியா படைக் கலங்கள் வைத்துக் கொள்ளாமலே காலந் தள்ளும் என்று காங்கிரஸ் என்றுமே எண்ணியது கிடையாது" என்றார். "பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற அஹிம்சா மார்க்கத்தையே கையாள வேண்டும் என்றுதான் என்னை எதிர்ப்பவர்களைப் போலவே நானும் எண்ணுகிறேன். ஓர் அமைதியான உலகையே விரும்புகிறேன். ஆனால் அதே நேரத்தில் நாம் யதார்த்த நிலைமைகளைச் சந்தித்தே ஆக வேண்டும். அதை விட்டுவிட்டு ஓடிவிட முடியாது. உலகில் ஒரு புதிய சூழ்நிலை உருவாகியுள்ளது. பிரிட்டன் நம் விருப்பம்போல் நடந்து கொண்டால் தார்மீக ரீதியிலும் ராணுவ ரீதியிலும் இந்தியாவின் ஒத்துழைப்பை அது பெறும் என்று கூறுவதில் முரண்பாடோ தவறோ இல்லை."

"பிரிட்டனிடமிருந்து பதில் வர எத்தனை நாட்கள் காத்திருப்பீர்கள்? அந்த பதில் சாதகமாயில்லாவிட்டால் என்ன செய்வீர்கள்?" — நேரு கேள்விகள் எழுப்பினார். "எதிராளி சரியாகச் செயல்படுவான் என்று நம்ப வேண்டியதுதான்" என்றார் ஸி. ஆர். "ஆனால் நாம் நல்லெண்ணத்துடன் அளிப்பதை பிரிட்டன் ஏற்கும் என்று எதிர்பார்த்துக் காலவரையறையின்றிக் காத்திருக்கவும் முடியாது."

ஜெயப்பிரகாஷின் அறிவுரையைப் புறக்கணித்து ஜவாஹர்லால் தம் கருத்தை மாற்றிக் கொண்டு ஸி. ஆரின் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தார். 47 வாக்குகளுக்கு எதிராக 95 சாதகமான வாக்குகளைப் பதிவு செய்து அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டி ஸி. ஆரின் தீர்மானத்தை அங்கீகரித்தது. இத்தருணத்தில் ஸி. ஆர். எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பிற்காலத்தில் விமர்சித்த நேரு கூறினார்: "அமைதியாகத் தம் குரலை உயர்த்தாமல் ஸி. ஆர். தம் கருத்துக்களுக்காக வாதாடுவார். படிப்படியாகத் தம்மை எதிர்ப்பவர்களின் கருத்துக்களை வீழ்த்துவார்."

காங்கிரஸுக்கும் பிரிட்டிஷ் அரசுக்குமிடையே ஒப்பந்தம் தேவைதான் என்று ஸி. ஆர். எண்ணினாலும் அது எளிதில் நடக்கக்கூடிய காரியம் அல்ல என்றும் உணர்ந்திருந்தார். ஸி. ஆர். சொன்னதுபோல் பிரிட்டிஷ் வர்த்தகர்கள் ஆபத்தான நிலைமையைப் புரிந்து கொண்டு காங்கிரஸுடன் சமரசம் செய்து கொள்ளுமாறு அரசுக்கு வேண்டுகோள் விடுத்தனர். ஆனால் வைஸ்ராய்க்கும் அயல் விவகார அமைச்சருக்கும் அறிவுரை கூறி வந்த ஐ. ஸி. எஸ். அதிகாரிகள் காலத்தோடு பொருந்தாத பிற்போக்குவாதிகளாக இருந்தனர். இதையும் ஸி. ஆர். புரிந்து வைத்திருந்தார். பூனா கூட்டத்துக்குச் சில தினங்கள் முன்னதாக அவர் கூறியிருந்தார்: "மோசமான ராஜ தந்திரமும் தவறான முடிவுகளும் பிரிட்டனை ஒரு சாபக்கேடாகப் பற்றிக் கொண்டு ஆட்டி வைக்கின்றன." ஜி. ஏ. நடேசனுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் அவர், காங்கிரஸின் நிபந்தனையுடன் கூடிய ஒத்துழைப்பைப் பிரிட்டிஷ் அரசு புறக்கணிப்பதால் நேரக் கூடியவைகளைக் குறிப்பிட்டார். ஒரு போராட்டம் நடப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன என்றார்:

"நான் நியாய உணர்வோடு சிந்திப்பவன். யதார்த்தவாதி; அமைதியை விரும்புகிறவன்; மிதவாதி; ஏழை மக்களின் வாழ்க்கையை பணயம் வைக்க விரும்பாதவன். ஆனால் நான் பிரிட்டனின் ஆணவத்துக்குப் பணிந்து போக முடியாது. தன்மானத்துடன் எவ்வளவு விட்டுக் கொடுக்க முடியுமோ அவ்வளவு செய்துள்ளேன். இதற்கு மேல் சரணாகதி அடைய முடியாது. இனிமேல் என்ன நடந்தாலும் சந்திக்கத் தயாராக உள்ளேன். பிரிட்டன் தற்போது இந்தியாவிடம் நடந்து கொள்ளும் விதம் அதற்குப் பெருமை அளிப்பதாக எனக்குத் தோன்றவில்லை."

ஆகஸ்ட் ஆரம்பத்தில் வைஸ்ராயின் ஓர் அறிக்கை மூலமாக பிரிட்டன் காங்கிரஸுக்குத் தன் பதிலை அளித்தது. பிரிட்டிஷ் அரசும், காங்கிரஸும், லீகும், சமஸ்தான மன்னர்களும் ஒரு ஒப்பந்தத்திற்கு வர முடியுமானால் ஒரு சில அரசியல்வாதிகளைச் சேர்த்துக் கொண்டு வைஸ்ராயின் ஆலோசனைக் குழு விரிவுபடுத்தப்படும். ஆனால் அதன் ஆலோசனைகளை நிராகரிக்கும் வைஸ்ராயின் 'வீடோ' அதிகாரத்தை அகற்ற முடியாது. (லின்லித்கோ பஞ்சாப் கவர்னருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் "பெரும்பான்மையினரின் விருப்பப்படி நடக்கவேண்டும் என்ற கட்டுப்பாட்டுக்கு நான் என்னை உட்படுத்திக் கொள்ள முடியாது" என்று கூறினார்.) யுத்தம் முடிந்ததும் இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கப்பட மாட்டாது. ஆனால் புதிய அரசியல் நிர்ணயச் சட்டத்தை உருவாக்க ஒரு குழு அதிகத் தாமதமின்றி நியமிக்கப்படும். இவ்விதமாகப் பூனா பரிசு நிராகரிக்கப்பட்டது-ஒரு அருமையான வாய்ப்பை பிரிட்டன் வீணடித்தது.

"வைஸ்ராயின் அறிக்கை எனக்குத் திருப்தி அளிக்கவில்லை" என்று எல்லூர் பொதுக் கூட்டத்தில் பேசினார் ஸி. ஆர். "அது எனக்குக் கோபம் ஏற்படுத்தியிருக்கிறது. நீங்களும் கோபப்பட வேண்டும்". பிரிட்டனின் போக்கு குறித்து ஸி. ஆர். முற்றிலும் ஏமாற்றமடைந்திருப்பதைக் கண்ட நேரு கூறினார்: "பிரிட்டனிடம் சமரசம் செய்து கொள்ளும் முயற்சியில் முன்னின்றவர் ஸி. ஆர். தான். இதற்காகக் காந்திஜியிடம் கூடக் கருத்து மாறுபாடு கொள்ளும் தியாகத்துக்கும் துணிந்தார். எனவே இந்தத் தோல்வி மற்ற எல்லோரையும்விட அவரையே அதிகமாக பாதித்துள்ளது.

(தொடரும்)

தமிழாக்கம்: சீதாரவி.

அவள் விஷயம் தெரிஞ்ச கொடுக்கு

நர்சரி படிக்கும் ஹேமலதாவுக்குப் பள்ளிக் கட்டணம் நாற்பது ரூபாய்; இன்று செலுத்த வேண்டும்.

கையிருப்பு காலி.

பாங்கில் எடுத்துக் கட்ட பாஸ் புத்தகத்தைத் தேடினான், நாராயணன்.

கப்போர்டு லாக்கரில்தான் பாஸ் புத்தகம் இருக்கும். ஆனால், அங்கு காணோம்.

டிரங்க் பெட்டி, அலமாரி... எதிலும் கிடைக்கவில்லை.

''எங்கே போச்சுது?'' தலையைப் பிய்த்துக் கொண்டான், அவன்.

''எல்லா இடத்திலும் நன்றாய்த் தேடிப் பார்த்தாயோ...?'' என்றாள், அம்மா.

''இருப்பதோ, ஓர் அறை. இதிலே நன்றாய்ப் பார்க்க என்ன இருக்கு...?''

பாஸ் புத்தகம் கிடைக்காத ஆத்திரம், பெற்றவளிடம் பாய்ந்தது.

''ஒருவேளை... கவனப்பிசகாய் மைதிலி எடுத்துப் போய் இருப்பாளோ?'' புருவத்தைச் சுருக்கினாள், தாய்.

''கரெக்ட்!''

தாடையை உருவிக் கொண்டிருந்த நாராயணன், தாண்டவராயனைப் போல் துள்ளினான். ''அவள்தான்... அவளேதான் எடுத்துப் போய் இருக்கிறாள். ஆனால், கவனப்பிசகாக அல்ல. வேண்டுமென்றே... திட்டம் போட்டே எடுத்துப் போய் இருக்கிறாள். இப்போதுதான் அது எனக்கு ஞாபகம் வருகிறது...''

''என்ன?''

சென்ற வாரம்.

வைகுண்ட ஏகாதசிக்கு மைதிலியின் அப்பாவும், அம்மாவும் இங்கு வந்திருந்தார்கள். திருவரங்கநாதனைத் திவ்யமாய்ச் சேவித்துவிட்டுத் திரும்ப இருந்த அவர்களிடம்,

''மைதிலிக்கு மாசம் நெருங்கிவிட்டதே!'' என்று சாதுர்யமாகப் பேச்சை ஆரம்பித்தான், நாராயணன்.

இது இரண்டாவது குழந்தை; ஏழாவது மாதம்.

''ஆ... ஆமாம்... ஆமாம்...'' யதார்த்தப் புன்னகையுடன் தலையசைத்து விட்டு, கையிலிருந்த தினசரியில் கவனம் செலுத்த முயன்றார் வாசுதேவன் — மைதிலியின் அப்பா.

நாராயணன் விடவில்லை. ''எதற்குச் சொல்ல வந்தேன் என்றால்... இப்போதே மைதிலியை அழைத்துக் கொண்டு போவீர்களோ, அல்லது அப்புறம் இன்னொரு பயணம் வைத்துக் கொள்வீர்களா?''

வாசுதேவன் இதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில், இரண்டாம் பிரசவத்தைப் புக்ககத்திலேயே பார்ப்பார்கள் என்பது அவரது யூகம்.

ஆனால் —

நாராயணன்தான் அவரைத் திடீரென்று மடக்கி விட்டானே!

கணப்பொழுது, அவருக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. பிறகு,

தமிழினியன்

சமாளித்துக் கொண்டவராய், ''இப்போதே அழைத்துப் போய் விடுகிறேன்'' என்றார்.

அவர்கள் புறப்படுவதற்கு முதல் நாள்.

''செக் புத்தகத்தில் எப்போதும் எக்ஸ்ட்ராவாக ஒரு கையெழுத்துப் போட்டு வைப்பீர்களே, போட்டிருக்கிறீர்களா?'' என்றாள், மைதிலி.

''ஓ.... போட்டிருக்கிறேனே!'' என்றான், நாராயணன்.

அப்போது அதைத் 'தற்செயலான கேள்வி' என்று எண்ணினான் அவன். ஆனால் இப்போது....?

அக்னிப் பிழம்பானான் நாராயணன்.

''என்னை ஏமாற்ற வேண்டும் என்றே எடுத்துப் போய்விட்டாள் இராதகி.''

''அதைக் கொண்டு போய்த்தான் அங்கு என்ன செய்யப் போகிறாள் அவள். பாங்கு இங்கே அல்லவா இருக்கிறது!'' என்றாள், அம்மா.

''உன்னை மாதிரி பழைய பஞ்சாங்கம் இல்லை, அவள் விஷயம் தெரிஞ்ச கொடுக்கு. அங்கு வேறு யாருடைய அக்கவுண்டிலே யாவது போட்டுப் பணம் வாங்கிக் கொள்வாள்.''

''சேச்சே..., மைதிலி அந்த மாதிரி அச்சானியம் இல்லேடா.''

''போம்மா. அவளைப் பற்றி உனக்கொண்ணும் தெரியாது.''

''போனால் போகிறது, விடு. உனக்குப் பணம்தானே வேண்டும். நான் தருகிறேன்.'' பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைத்தாள், அம்மா.

ஆனால், நாராயணன் பிடிவாதமாய்ப் பேசினான். ''நீ பணம் தருவது பெரிசில்லே, அம்மா. என்னோட பாஸ் புத்தகத்தை என்னைக் கேட்காமல் எடுத்துப் போய் இருக்கிறாளே, அதுக்கு என்னம்மா அர்த்தம்? உடம்பிலே எவ்வளவு கொழுப்பிருந்தால், மனசிலே என்ன ஒரு தைரியம் இருந்தால் அவள் இப்படிச் செய்திருப்பாள்.

''டேய்.... டேய்.... பிள்ளைத்தாய்ச்சி. வாயும் வயிறுமா, பிரசவத்துக்காகத் தாய் வீட்டுக்குப் போய் இருக்கிறாள். இந்த நேரத்திலே அவளை அனாவசியமாய்க் கரித்துக் கொட்டாதே, பாவம்.'' பெண்மைக்கே உரிய பச்சாதாபத்துடன் பரிந்துபேசினாள், அம்மா.

''பாவமோ.... புண்ணியமோ. உனக்கு இன்னொரு விஷயம் தெரியுமா, அம்மா.''

''என்ன?''

''மைதிலிக்கு இந்தப் பிரசவத்தை நம் தலையிலே கட்ட வேண்டும் என்றுதான் ஆசை.''

''அது நியாயம்தானே. கட்டறதுக்கோ, காயப்படுத்தறதுக்கோ அதிலே என்ன இருக்கு? முதல் பிரசவம்தான் பிறந்தகத்திலே பார்ப்பா. இரண்டாவதை நாம்தானே பார்க்கணும். ஆனாலும், நீ செய்தது அபத்தம். எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கலே.''


''ஏன் சொல்ல மாட்டாய்? ஒரு நார்மல் டெலிவரிக்குக்குறைந்தது ஆயிரமாவது செலவாகும். தெரியுமில்லே.''



''ஆகட்டுமே. பிள்ளை வேண்டுமானால் செலவும்தான் வரும். அதைப் பார்த்தால் முடியுமோ!''

''நானா அவளைப் பெற்றுக்கச் சொன்னேன்.''

''மூடுடா வாயை..... கொஞ்சம்கூட விவஸ்தை இல்லாமல்....''



''மூடுறேன். ஆனால், என் பாஸ் புத்தகம். அதுக்கு என்ன வழி? வெண்ணையை வச்சுண்டு நெய்க்கு அழுத கதையாய் என் முகத்தில் கரி பூசிட்டுப் போயிட்டாளே, படுபாவி'' பற்களை நறநறத்தான் நாராயணன். ''எல்லாம் அந்த தத்து வாய்த் தரகராலே வந்த வினை. போயும் போயும்.... இந்தக் கழிசடையை என் தலையில் கொண்டு வந்து கட்டினான், பார்....''

''ஜென்னை.

''அவர் எனக்குக் கணவனாய் வரக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் அப்பா.''

சூல் கொண்ட வயிறு அதிர்ந்து அசைய ஆவேசத்துடன் பேசினாள், மைதிலி.

''ஹி.... ஹி....'' என்று அசடு வழியச் சிரித்தார், வாசுதேவன். ''ஒரு விளையாட்டுக்குச் சொன்னேம்மா. இவ்வளவு பெரிசாய்க் கோபித்துக் கொண்டாயே.''

''விளையாட்டோ, வினையோ, நீங்கள் அப்படிப் பேசி இருக்கக் கூடாது அப்பா. என் கணவன் ஒரு பக்கா ஜெண்டில்மேன். இந்த மாதிரி பேச்செல்லாம் அவருக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்காது. சொல்லப் போனால் பிரசவத்துக்கு என்னை இங்கு அனுப்பும் உத்தேசமே அவருக்கு இல்லை.''

''இஸிட்?''

''சர்ட்டன்லி. ஒரு முதல்தரமான நர்ஸிங் ஹோமிலே என்னை அட்மிட் பண்ணிப் பிரசவம் பார்க்கணும் என்றுதான் ஆசைப்பட்டார். ஆனால் எனக்குத்தான் இங்கு வந்து பார்த்துக்கணும் போல இருந்தது. என் விருப்பத்துக்காக அவரோட முடிவை மாற்றிக் கொண்டு அனுப்பி வைத்தார்.''

''நம்ப முடியல்லையே....'' தலையைச் சொறிந்தார், வாசுதேவன்.

''நீங்கள் நம்பமாட்டீர்கள் என்று எனக்கும் தெரியும். அதற்குத்தான் அத்தாட்சியாக இதைக் கையோடு கொண்டு வந்தேன்'' என்று பெட்டியிலிருந்து எடுத்துக் கொடுத்தாள், மைதிலி.

''இதென்ன செக்கும், பாஸ் புத்தகமும்.''

''ஆமாம். என் பிரசவச் செலவுக்காக பாங்கில் அவர் இரண்டாயிரம் ரூபாய் வைத்திருக்கிறார். அது மட்டும் இல்லை. அவருக்கு அடிக்கடி வெளியூர் காம்ப் வரும். அதனால் அவசரத்துக்கு வேண்டி ரெடியாய் செக்கிலும் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறார். பார்த்தீர்களா?''

வியப்பில் இமையாடவில்லை, வாசுதேவனுக்கு.

''இப்படிப்பட்ட என் கணவரை அடுத்த

வன் தலையில் மிளகாய் அரைப்பதில் சாமர்த்தியசாலி என்கிறீர்களே. அம்மாதிரிப் பேச உங்களுக்கு எப்படி தைரியம் வந்தது? அது தப்புன்னு உங்களுக்குத் தோணல் லையா?''

''தப்புத்தான்.... தப்புத்தான்.... மைதிலி. என்னை மன்னிச்சுடு அம்மா. ஏதோ அறியாமல் உளறிட்டேன். இனி மறந்தும் உன் வீட்டுக்காரரை மதிப்புக் குறைவாய்ப் பேச மாட்டேன். மனசிலே எதுவும் வச்சுக்காதேம்மா'' கெஞ்சினார் வாசுதேவன்.

''ஆமாம்மா மைதிலி. இந்த மாதிரி சமயத்திலே மனசிலே விசனம் இருக்கப்படாது. அப்பா அப்படிச் சொன்னது தப்பு என்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன். அதை மறந்து மன்னிச்சுடும்மா'' அம்மாவும், அப்பாவுக்காக மன்றாடினாள்.

இரண்டாம் நாள்.

நாராயணனுக்கு ஒரு கடிதம் கனமான உறையுடன் வந்தது. அவசரமாகப் பிரித்துப் படித்தான்.

'தேவரீர் அத்தானுக்கு, தங்கள் மைதிலி நமஸ்காரம். உபய க்ஷேமம்.

'இரண்டாவது வயிற்றில் வந்த போதே உங்களுக்கு அந்த எண்ணமும் வந்துவிட்டது. இந்தப் பிரசவத்தையும் எங்கள் வீட்டிலேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பினீர்கள். சமயம் கிடைக்கும் போதெல்லாம் அதை வெளியிட்டு, கடைசியில் வெற்றியும் பெற்றுவிட்டீர்கள். அதை நான் தவறு என்று சொல்ல மாட்டேன்.

'ஆனால், மனுஷாள் மனம் விசித்திரமானது. என் பெற்றோர்கள் அதை இகழ்ச்சியாய் எண்ணுவார்களோ, கேவலமாகப் பேசுவார்களோ.... இப்படி ஓர் அச்சம் என்னை உறுத்தியது. ஆகவே ஓர் எச்சரிக்கையாக ஒரு காரியம் செய்தேன். உங்கள் பாஸ் புத்தகத்தையும், செக்கையும் உங்களிடம் சொல்லாமல் எடுத்து வந்துவிட்டேன்.


'ஏன் தெரியுமா? அதைக் கொண்டு தங்களது மேன்மையையும், கௌரவத்தையும் காப்பாற்றக் கூடிய நிலைமை ஏற்படும் என்று எதிர்பார்த்தேன். என்ன ஆச்சரியம். நான் பயந்தது போலவே ஒரு சம்பவம் நேற்று நடந்தேவிட்டது.

கடவுள் கிருபையால் உங்கள் மதிப்பையும், மரியாதையும் காப்பாற்றிவிட்டேன். மேல் விவரம் நேரில் பேசலாம். இப்போதுள்ள உடம்பில் இதற்கு மேல் என்னால் எழுத முடியவில்லை. மன்னிக்கவும்.

'செக், பாஸ் புத்தகம் இரண்டையும் இத்துடன் அனுப்பியுள்ளேன். அத்தைக்கு என் நமஸ்காரம். தங்கள் ஆசிர்வாதத்துடன்,

— மைதிலி.'

படித்து முடித்த நாராயணன் வெட்கிப் போனான்.



வேண்டாம் இன்னும் ஒரு தங்கப் பதக்கம், இன்னும் ஒரு வெள்ளிக் குத்துவிளக்கு, இன்னும் ஒரு பிரீஃப் கேஸ், இன்னும் ஒரு எதுவுமே...

இது போன்ற எண்ணம் எதுவும் நீங்கள் எங்களது புதிய குருப்களில் சேரத் தடையாக அமைய வேண்டாம்.

உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான
இந்துவிலிருந்து உற்சாகம் ஊட்டும்
ஒரு பரிசுத் திட்டம்.



ஒரே மாதிரிப் பொருளைப் திரும்பத் திரும்பப் பரிசாக அளிக்கும் வழக்கத்திற்கு இந்து முடிவு கட்டுகிறது. நீங்களே உங்களுக்கு வேண்டிய பரிசுகளைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பு அளிக்கும் புதிய சகாப்தத்தைத் துவக்குகிறது. புதுமையான, பரிசுக்கு உறுதி அளிக்கும் சீட்டு—கிஃப்ட் வவுச்சர்—திட்டத்தில் நீங்கள் அடியிற்குறிப்பிடப் பட்டுள்ள கடைகளிலிருந்து உங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொள்ளலாம்.

- தங்க மாளிகை, தி.நகர், சென்னை-17
- லக்ஷ்மி மியூசிக்கல்ஸ், தி.நகர், சென்னை-17
- குமரன் சில்க்ஸ், தி.நகர், சென்னை-17

இந்துவின் புதிய சீட்டு குருப்கள் பற்றிய விவரங்கள்:

மாதத்தோறும் கட்ட வேண்டிய தொகை	மாதங்களின் எண்ணிக்கை	மொத்தம்
ரு.		ரு.
125	40	5.000
250	20	5,000
500	20	10,000
500	40	20,000
1,000	20	20.000
1,000	50	50,000
2,000	50	1,00,000
5,000	20	1,00,000
5,000	50	2,50.000



இந்து சிட் பண்ட்ஸ் (எம்) பிரைவேட் லிமிடெட்
155, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர்,
சென்னை-600 017. போன்: 445529, 447333


கிளைகள்:
32, ரங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை-600 017.
போன்: 447888
220, என்.எஸ்.ஸி. போஸ் ரோடு, ஜார்ஜ் டவுன்,
சென்னை-600 001. போன்: 25901
24, வடக்கு மாட வீதி, பூந்தமல்லி, சென்னை-600 056.
போன்: 69566
22, வணிகர் தெரு, காஞ்சிபுரம்-632 201. போன்: 3048
194, வக்கீல் புது தெரு, மதுரை-625 001.
போன்கள்: 34940 & 31351
106, பெரிய தெரு, திருவண்ணாமலை-606 601. போன்: 681
41, தொப்ப முதலியார் தெரு, பெங்களூர்-560 001.
போன்: 570585

பெரிய தொகை சேர்க்க வழி சிறிய முதலீடுகளே!

போனவாரத்துக் கதை

எந்த நிமிஷமும் மழை பெய்யக் கூடிய ஒரு மழைக்கால காலை நேரத்தில் — 'இண்டர்வியூ' ஒன்றுக்காக கிளம்புகிறாள் யாமினி. 20 வயது அழகான யாமினிக்கு வேலை கிடைக்காத காரணத்தால் நிச்சயதார்த்தம் நடந்தும் கல்யாணமாகாத நிலைமை. அப்பா திருஞானமும், அம்மா ஆனந்தியும் அவளுக்கு வேலை கிடைத்து, கல்யாணம் நடக்க வேண்டுமே என்று கவலைப்படுகிறார்கள். வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு, இண்டர்வியூ போக பஸ் ஸ்டாண்ட் வருகிறாள் யாமினி. பஸ் ஸ்டாண்டில் அவளுக்கு நிச்சயம் செய்யப்பட்ட வரன் அவளைச் சந்திக்கிறான். வேலை கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் அடுத்த மாதம் நம் கல்யாணம் என்று அவன் சொல்ல, யாமினி சந்தோஷப்படுகிறாள். இண்டர்வியூவின் முடிவு என்னவாயிற்று என்பதை, மாலை ஃபோன் பண்ணிச் சொல்லும்படியாக அவன் யாமினியிடம் கேட்டுக் கொள்கிறான். ஆனால் யாமினி அன்றைக்குச் சாயந்தரம் ஃபோன் பண்ணப் போவதில்லை என்பதும், அவன் அவளை உயிரோடு பார்ப்பது அதுவே கடைசித் தடவை என்பதும் அவனுக்குத் தெரியவில்லை.

யாமினி போக வேண்டிய பஸ் வந்து கொண்டிருக்கிறது. இனிமேல் படியுங்கள்......



A ஃபார் ஆப்பிள்

ராஜேஷ்குமார்



M ஃபார் மர்டர்

2

இரண்டு பஸ் மாற்றி பல்லாவரம் பஸ் டெர்மினலைத் தொட்டபோது, ஆகாயம் சிணுங்க ஆரம்பித்து நசநசவென்று தூறியது.

மணிக்கட்டில் இருந்த பேவர்லூபா கடிகாரத்தைப் பார்த்தாள் யாமினி.

மணி 9.50.

வானிடி பேக்கை தோளில் சரியாய் ஏற்றிக் கொண்டு, ஊதா நிறக் குடையை விரித்துத் தலைக்கு மேல் உயர்த்தினாள். மெதுவாய் நடக்க ஆரம்பித்தாள்.

அந்த 'கிட் புட்ஸ்' கம்பெனி எங்கே இருக்கிறது? இண்டர்வியூ கார்டில் இருந்த அட்ரஸை மனசுக்குக் கொண்டு வந்து படித்தாள் யாமினி.

'நெம்பர் பைவ் ஃபர்ஸ்ட் ரோடு, தேர்ட் க்ராஸ் கட், பல்லாவரம் எக்ஸ்டென்ஷன்.'

யாமினி மகாபலிபுரத்துக்கு எத்தனையோ தடவை பல்லாவரம் வழியாகப் போயிருக்கிறாள். ஆனால் இங்கே இறங்குவது இதுதான் முதல் தடவை.

எக்ஸ்டென்ஷன் எங்கேயிருக்கிறது?

மழைக் கோட்டோடு நின்று போக்குவரத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த ட்ராபிக் கான்ஸ்டபிளை நெருங்கிக் கேட்டாள். ''பல்லாவரம் எக்ஸ்டென்ஷனுக்கு எந்தப் பக்கமாய்ப் போகணும்?''

நேர் கிழக்கைக் காட்டிய ட்ராபிக் கான்ஸ்டபிள் மெல்லிய குரலில் கேட்டார். ''நடந்தா போறீங்கம்மா....? ரொம்பதூரம் இருக்குமே?''

''எவ்வளவு தூரம் இருக்கும்?''

''ரெண்டு கிலோ மீட்டர்.... எக்ஸ்டென்ஷன்ல எங்கே போகணும்?''

'''கிட் புட்ஸ்'ன்னு ஒரு கம்பெனி.''

''ஓ... பால் பௌடர் தயாரிக்கிற கம்பெனியா?''

''ஆமா.''

''ஆட்டோவில போயிடுங்கம்மா. இன்னிக்கு அங்கே என்ன விசேஷம்? நிறைய பொண்ணுங்க ஆட்டோ புடிச்சு போறாங்க.''

''இண்டர்வியூ.''

''ஓ....'' என்றவர் பஸ் டெர்மினஸ் ஷெல்டர் ஓரமாய் நின்றிருந்த ஆட்டோ ஒன்றைக் கைதட்டிக் கூப்பிட்டுவிட்டார்.

''மினிமம் சார்ஜ்தான் ஆகும். போங்கம்மா.''

ட்ராபிக்கான்ஸ்டபிளுக்கு ஒரு தேங்க்ஸை உதிர்த்துவிட்டு, அருகே வந்து நின்ற ஆட்டோவில் ஏறிக் கொண்டாள் யாமினி. ஆட்டோ நகர, மழை சின்ன தூறலோடு ரோட்டை நனைத்துக் கொண்டிருந்தது. காலை பத்து மணியாகியும் வெளிச்சத்தைச் சிந்தவிடாமல்

சூரியனை அழுத்திக் கொண்டிருந்த கனமான சிமெண்ட் நிற மேகங்கள் எல்லாத் திசைகளிலும் தெரிந்தது.

ஆட்டோ ஐந்து நிமிஷம் ஓடியதும்—
எக்ஸ்டென்ஷன் வந்தது.

ஹைவேஸ் ரோட்டை வெட்டிக்கொண்டு இடது பக்கமாய் பிரிந்த, கப்பி ரோட்டில் ஐம்பது மீட்டர் தள்ளி அந்த வெண்ணிறக் கட்டிடம் தெரிந்தது.

KID FOODS

ரோட்டோரமாய் அம்புக் குறியிட்டு போகச் சொன்ன போர்டைப் பார்த்தாள், யாமினி. ஆட்டோ கப்பி ரோட்டில் ஓடி க்கட்டிடத்தின் காம்பௌண்ட் கேட் அருகே வந்தது.

''ஆட்டோ இதுக்கு மேலே உள்ளார போகாதம்மா..... நீங்க இங்கியே இறங்கிக் கிங்க'' ஆட்டோ டிரைவர் சொல்ல, காசைக் கொடுத்து அவனை அனுப்பிவிட்டு தூறுகிற மழையில் நனையாமல், மறுபடியும் குடையை விரித்துக் கொண்டு கேட்டை நெருங்கினாள்.

காம்பௌண்ட் கேட்டில், அதன் மையத்தில் சின்னதாய் ஒரு சதுர இடைவெளி தெரிய, காக்கி யூனிபார்ம் அணிந்த செண்ட்ரி ஒருவன் எட்டிப் பார்த்து விட்டுக் கதவைத் திறந்தான்.

''என்னம்மா.... இண்டர்வ்யூவா?''

''ஆமாம்.''

''அதோ, அந்த விசிட்டர்ஸ் நோட் புக்குல உங்க பேரையும் அட்ரஸையும் எழுதி வந்த நேரத்தையும் குறிச்சுடுங்க.....''

யாமினி செண்ட்ரி கூண்டுக்குள் நுழைந்து, ஸ்டூலின் மேலிருந்த தடிமனான லெட்ஜரைப் புரட்டி அன்றையத் தேதிக்கு வந்தாள். இரண்டு பக்கம் கொள்ளும் அளவிற்கு ஏராளமான பெயர்கள். எல்லாமே பெண்கள் பெயர்கள்.

வெகு சிரத்தையாய் பெயரையும் அட்ரஸையும் எழுதி, வந்த நேரத்தைக் குறிப்பிட்டுக் கையெழுத்து போட்டிருந்தார்கள்.


யாமினிக்கு வேலை கிடைக்கும் என்கிற நம்பிக்கை நீரில் விழுந்த சோப்பாய் கரைய ஆரம்பித்தது. கடவுளே! இந்த இண்டர்வியூவும் ஏமாற்றம்தானா?

''எங்க மானேஜர் ரொம்ப மோசம்.''

''என்ன?''

''யாராவது தலைவலி, ஜுரம் என்று பர்மிஷன் கேட்கப் போனால் மருந்து கொடுத்து பர்மிஷன் இல்லேன்னு சொல்லிடுவார்.''

—ஜோ. அ. கதிர்வேல்.



''உள்ளார நின்னுகிட்டு என்னம்மா யோசனை பண்ணிட்டிருக்கீங்க....? சீக்கிரமா எண்ட்ரி போட்டுட்டு இண்டர்வியூ ஹாலுக்குப் போங்கம்மா....'' செண்ட்ரி கூண்டுக்குள் எட்டிப் பார்த்துவிட்டுக் கத்த, அதிர்ச்சியிலிருந்து மீண்ட யாமினி எண்ட்ரி போட்டுவிட்டு வெளியே வந்தாள். மழை அதே தூறலோடு தெரிய, குடையை பரப்பிக் கொண்டாள்.

''இண்டர்வியூ ஹாலுக்கு எப்படிப் போகணும்?''

''அதோ.... அந்தப் புல்தரைக்குப் பக்கத்துல ப்ளூ கலர் டிஸ்டம்பர் அடித்த கட்டிடம் தெரியுதே, அதுதான். சீக்கிரமா போங்கம்மா. பத்து மணிக்கு இன்னும் ரெண்டு மூணு நிமிஷந்தான் இருக்கு. லேட்டாப் போனா உள்ளார விடமாட்டாங்க. எம்.டி. ரொம்பவும் கண்டிஷனான ஆளு'' செண்ட்ரி ஆள் பயம் காட்டினான்.

யாமினி சொத சொதத்துப் போன ஈரமான பூமியில் சேலை உராய்ந்து நாசமாகிவிடப் போகிறதே என்ற பயத்தில் சேலையை லேசாய் உயர்த்திப் பிடித்துக் கொண்டு அந்த நீல நிற டிஸ்டெம்பர் கட்டிடத்தை நோக்கி வேகவேகமாய்ப் போனாள்.

உண்மையிலேயே Kid Foods கம்பெனி பிரும்மாண்டமாய் இருந்தது. கார் பார்க்கிங் ப்ளேஸில் நான்கைந்து மாருதிகள் தெரிந்தன. கம்பெனியைச் சுற்றிலும் வளர்ந்திருந்த அசோக மரங்களில் மழை நீர் சொட்டிக் கொண்டிருந்தது. சைக்கிள் ஷெல்டரில் ஒரு ராணுவ ஒழுங்கோடு நூற்றுக் கணக்கான சைக்கிள்கள் நின்றிருந்தன.

குடையை மடித்து இண்டர்வியூ ஹாலுக்குப் போனாள் யாமினி. லேசாய் மலைப்புத் தட்டியது. ஹாலின் சுவரோரமாய்ப் போட்டிருந்த ஏராளமான நாற்காலிகளில் பெண்கள் சாய்ந்திருந்தார்கள். நிறைய சளசளப்புடன் பேசிக் கொண்டிருந்தார்கள். யாமினியைப் பார்த்ததுமே சில பேர் பேச்சை நிறுத்திவிட்டு அவளை ஒருவித சுவாரஸ்யத்தோடு கவனித்தார்கள்.

யாமினி பார்வையைச் சுழற்றினாள்.


மிடி, சுடிதார்களுக்கு மத்தியில் சேலைகள் சொற்பமாய்த் தெரிந்தது. அந்தச் சொற்பச் சேலைகளும் தொப்புள்களைக் காட்டியது. வலுக்கட்டாயமாய் உயர்த்திக் கட்டப்பட்டிருந்த மார்புகள், செயற்கைத்தனத்தை வெளிச்சம் போட்டது. உதடுகளில் தீட்டியிருந்த லிப்ஸ்டிக் கண்களை உறுத்தியது.

டை கட்டி உயரமாய் தெரிந்த ஒருத்தன், கையில் பேடோடும், டைப் அடித்த லிஸ்ட்டோடும், ஒரு இன்ஸ்டண்ட் புன்னகையோடும் யாமினியை நெருங்கினான்.

''யுவர் நேம் ப்ளீஸ்?''

''யாமினி.''

''யா.... மி.... னி....'' என்று வாய்க்குள் முனகியவர், விரலிடுக்கில் இருந்த பால் பாயிண்ட் பேனாவை பிதுக்கிக் கொண்டு




Rag Deepak - the melody that brings flames to the lamp

His name is Sukumar Prasad. And he's been tuning in on an old note – with a new key
Carnatic music on the electric guitar.

How does it sound? It's yours to explore.And to find out that the best thing about tradition is that you can add to it.

Hear your favourite ragas with a new dimension that only proves that the beauty of carnatic music is infinite.

The music is available exclusively on Encore Cassettes manufactured by Lynx corporation.
Recorded on multi-track recorders using the latest digital sound processing devices.



Brought to you by
Lynx Corporation
311 Parsn Complex
Madras 600 006

Available at leading cassette shops.



"என் மகன் முன்னால் நான் தலைநிமிர முடியாத படிக்கு ஆயிடுச்சு..."

"ஏன், என்னாச்சு...?"

"அவன் பெயிலானப்ப நான் அவனைத் திட்டு திட்டுனு திட்டினேன். இப்ப ஆபீஸ் பரீட்சையில் நான் பெயிலாயிட்டேன்!

பெயரைத்தேடி..... கடைசியில், "டி.யாமினி" என்று சொல்லி டிக் அடித்தார்.

"யு வில் பி த லாஸ்ட் பர்சன் மிஸ் யாமினி. யுவர் டோக்கன் நெம்பர் சன் ஒன் தர்ட்டி செவன்...."

யாமினிக்கு மயக்கம் வரும் போலிருந்தது.

டை கட்டிய பேர்வழி யாமினியைப் பார்த்துச் சிரித்தான். "யாமினின்னு பேர் வெச்ச உங்க பேரண்ட்ஸைத் திட்டுங்க மிஸ்... ஆல்பபட் படி நாங்க டோக்கனை ஃபிக்ஸ் பண்றோம். அதன்படி பார்த்தா... இந்த இண்டர்வியூவிலே நீங்கதான் லாஸ்ட் காண்டிடேட்."

சொல்லிக்கொண்டே நகர முயன்றவனை, "எக்ஸ்க்யூஸ்மி ஸார்" என்று கூப்பிட்டு நிறுத்தினாள்.

"எஸ்."

அவன் புன்னகை மாறாமல் திரும்பினான்.

"இண்டர்வியூ எவ்வளவு நேரம் நடக்கும் ஸார்....?"

"எப்படியும் ஒரு காண்டிடேட்டுக்கு அஞ்சு நிமிஷமாயிடும் மிஸ். இண்டர்வியூ முடிந்ததுமே நெக்ஸ்ட் ரூம்லெ மெடிக்கல் செக்–அப் இருக்கு. லேடி டாக்டர் ஒருத்தர் எல்லா காண்டிடேட்ஸையும் செக்–அப் பண்ணி மெடிகல் ரிப்போர்ட் கொடுப்பார். குழந்தைகளுக்கான புட்ஸ் தயாரிக்கிற கம்பெனியில வேலை செய்யற ஒவ்வொருத்தரும் ஹெல்த்தியா, ஹைஜீனிக்கா இருக்கணுங்கறது கம்பெனி எம்.டி. யோட உத்தரவு."

"குட் பாலிஸி" என்றாள் யாமினி.

"ஸோ.... எம்.டி. உங்களை இண்டர்வியூ பண்ணும்போது சாயந்தரம் நாலு மணியாயிடும். லஞ்சைப் பத்திக் கவலைப்படாதீங்க. அருமையான கம்பெனி கான்டீன் இருக்கு. இண்டர்வியூவுக்கு வந்த காண்டிடேட்ஸுக்கெல்லாம் ஃப்ரீ லஞ்ச் பாக்கெட்ஸ் ப்ரொவைட் பண்ணுவோம்."

"தேங்க்யூ...."

"டேக் யுவர் ஸீட் ப்ளீஸ்."

அவன் நாற்காலியைக் காட்ட, காலியாய்த் தெரிந்த பாலிமர் நாற்காலியில் போய் உட்கார்ந்தாள், யாமினி.

வெளியே —

தூறலாய் இருந்த மழை, சூறாவளி சண்டைக்காரியாய் மாறி, சத்தம் போட்டுப் பெய்ய ஆரம்பித்தது. அப்பாவுக்குத் தகவல் தெரிவிக்க வேண்டுமே என்கிற கவலையோடு மழையை வேடிக்கை பார்த்து நிமிஷங்களை ஓட்டினாள் யாமினி.

'கிட் புட்'டின் மானேஜிங் டைரக்டர் பிரபு, நீளமான கண்ணாடி டம்ளரில் இருந்த சாத்துக்குடி ரசத்தை ஒரு சொட்டு விடாமல் உறிஞ்சிவிட்டுத் தலையை உயர்த்தினார்.

பிரபு நாற்பது வயதின் கடைசிகளில் இருந்தார். வட்ட முகம். முன் மண்டையில் ரோமம் கொட்டிப் போய், சில நாட்களில் 'வழுக்கை' என்று பெயர் வாங்கக் காத்திருந்தது. ஜப்பானியத்தனமான கண்களுக்கு மேல் புருவம் மெலிதாய்த் தெரிந்தது. லேசான மினுமினுப்போடு கூடிய உப்பலான கன்னங்கள். நாசியின் கூர்மைக்குக் கீழே பிரிபிரியாய் நரையும் கறுப்பும் கலந்த மீசை. சிகரெட் நிகோடின் கறை ஏறிய ஊதா நிற உதடுகள். வெளிர் நீல நிற ஸூட்டில் இளமையாய் இருக்கக் காண்பித்துத் தோற்றுப் போயிருந்தார்.

டம்ளரை ஒற்றை விரலால் நகர்த்தி வைத்துவிட்டு, இடது கையை நீட்டி இண்டர்காமை எடுத்து, ரிஸீவரைத் தூக்கிப் பட்டனைத் தட்டினார். மெல்லிய குரலில் கேட்டார்.

"சந்திரபோஸ்?"

"எஸ் ஸார்."

"ரூம் வரைக்கும் வந்துட்டுப் போ" ரிஸீவரை வைத்துவிட்டு, கண்ணாடி மேஜையின் பரப்பில் பேப்பர் வெயிட்டைக் கரகர வென்று சுழற்றினார்.

அது ஓய்ந்து நிற்பதற்குள் —

அந்த டை கட்டிய உயரமான பேர்வழி உள்ளே வந்தான். ஒரு நாய்க் குட்டி மாதிரி பவ்யம் காட்டினான். "ஸார்."

"சந்திரபோஸ் எல்லாம் ரெடியா?"

"ரெடி ஸார்."

"டாக்டர் கமலவேணி?"

"மெடிகல் செல்லில் இருக்காங்க."

"காமிரா ஓடற சத்தம் தப்பித் தவறிக் கேட்டுடக் கூடாது சந்திரபோஸ்?"

"கேட்காது ஸார். காமிரா ஓடற சத்தம் அமுங்கிப் போற மாதிரி சீலிங் ஃபேனோட சத்தத்தை அதிகப்படுத்தியிருக்கேன்."

"தட்ஸ் குட்."

"மொத்தம் எத்தனை பேர் வந்திருக்காங்க."

"நூத்தி முப்பத்தியேழு பேர் ஸார். நாம இண்டர்வியூ கார்டு அனுப்பினதுல இருபத்தி மூணு பேர் மட்டும் வரலை ஸார்."

"டயம் எவ்வளவு?"

"பத்து அஞ்சு."

"இண்டர்வியூவை ஆரம்பிச்சுடலாமா?"

சந்திரபோஸ் புன்னகையோடு தலையாட்டினான்.

(தொடரும்)

25. காஷ்டானனுக்குப் புதிய பதவி!

நாகபாணன் தன்னிடம் சிறையிருப்பதாகச் சொன்ன பூஜாரி கோவிலில் பூஜை செய்து கொண்டிருப்பதையும், அர்ச்சனை மந்திரங்களை மிக தாஷ்டீகமான குரலில் உச்சரிப்பதையும் கண்ட காஷ்டானன், தனக்கு அந்தச் சமயத்தில் ஏற்பட்டது அதிர்ச்சியா வியப்பா என்று நிர்ணயிக்க முடியாத நிலையை அடைந்ததால் அவன் குழப்பம் மிக அதிகமாயிற்று. பூஜாரி தன் கண்முன்னே இருந்ததால் நாகபாணன் செய்தி எத்தனை அனர்த்தமாகிவிட்டதென்பதை உணர்ந்தான் காஷ்டானன். கௌதமி புத்ரன் மறுநாள் இரவில் மரக்கலத்துக்குச் செல்லும்போது வேறு யாரையாவது துணை கொண்டு வந்தால் பூஜாரி தூக்கிலிடப்படுவாரெனக் கூறுமாறு நாகபாணன் சொன்னதை எப்படிச் சொல்வது, எதற்காகச் சொல்வது, என்று திண்டாடினான் காஷ்டானன். அவன் திண்டாட்டத்தைக் கவனித்துப் புன்முறுவல் கொண்ட கௌதமிபுத்ரன் "காஷ்டானா! முதலில் பூஜாரியிடம் பிரசாதம் வாங்கிக் கொள். பிறகு நாகபாணன் தூது விஷயத்தைச் சொல்லலாம்" என்று ஆறுதலாகப் பேசினான்.

அந்த ஆறுதலே தன் இதயத்தைக் குத்துவது போலிருந்ததால், "சாதவாகனரே! பூஜாரி....." என்று இழுத்தான்.

"அவருக்கென்ன?" ஏதுமறியாதது போல் கேட்டான் சாதவாகனன்.

காஷ்டானன் தனது முகத்தில் மேலும் குழப்பத்தைக் காட்டினான். "இங்கு எப்படி வந்தார்?" என்று வினா ஒன்றை விடுத்தான் காஷ்டானன் குரலிலும் குழப்பம் தெரிய.

"இதுதானே தாபிலேசுவரர் கோவில்" என்றான் சாதவாகனன்.

"ஆம்."

"இங்குதானே அவர் பூஜை செய்யும் வழக்கம்?"

"ஆம்."

"அவர் இங்கு வருவதிலோ பூஜை செய்வதிலோ என்ன விசித்திரமிருக்கிறது?"

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்பதை அறியாததால் காஷ்டானன் கேட்டான். "நீங்கள் பூஜை செய்தீர்களே நடுவில் சில நாட்கள்?" என்று.

"செய்தேன் பூஜாரி உடல் நலமில்லாததால்" என்று சர்வ சகஜமாகப் பேசினான் சாதவாகனன்.

காஷ்டானன் விடவில்லை. "உடல் நலமில்லாதிருந்தாரா?" என்று கேட்டான்.

"ஆம். ஏன், சந்தேகமா அதில்?"

"இல்லை."

"உம்?"

"ஊருக்குப் போயிருந்ததாகச் சொன்னார்கள்."

"சொன்னது யார்?"

"திட்டமாக யாருமில்லை. பராபரியாகக் காதில் விழுந்தது."

இதைக் கேட்டு இளநகையை இதழ்களில் விரித்துக் கொண்ட சதகர்ணி, "பராபரியாக வேறென்ன காதில் விழுந்தது?" என்று கேட்டான் நகைப்பொலி தொனித்த குரலில்.

"எதிரியிடம் சிறைப்பட்டுவிட்டதாகக் கேள்விப்பட்டேன்." என்று இணறினான் காஷ்டானன்.

"ஆகவே இவரைத் தூக்கில் போடுவதாக நாகபாணன் சொன்னதை என்னிடம் சொல்ல அஞ்சுகிறீர்?" என்று கேட்ட சதகர்ணி நகைத்து "வேறென்ன சொன்னார் மகாக்ஷத்ரபர்?" என்றும் வினவினான்.

"தங்களை மரக்கலத்தில் சந்திக்கச் சித்தமாயிருப்பதாகவும், தாங்கள் தனித்துவராமல் துணைக்கு யாரையாவது அழைத்து வந்தால்...." மேலே சொல்லவில்லை காஷ்டானன். பூஜாரி தன் கண்முன்னே இருந்தாலும் அவரைத் தூக்குப் போடுவதாக நாகபாணன் செய்த மிரட்டலுக்கு அர்த்தமில்லையென்பதாலும் பேச்சைப் பாதியிலேயே நிறுத்திவிட்டான்.

அதற்கு மேல் சதகர்ணி அவனிடம் பேச்சுக் கொடுக்காமல் கோவிலுக்குள்ளே வரும்படி சைகை செய்து முன்னால் சென்றான். பூஜாரி கற்பூரத் தட்டை எடுத்து ஆரத்தி காட்டியதும் அவர் கொண்டு வந்த கற்பூர ஜ்வாலையை கைகளால் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டான் கௌதமி புத்ரன். பூஜாரி கொடுத்த விபூதியையும் நெற்றியில் அணிந்து கொண்டான்.

காஷ்டானனுக்கும் தட்டைக் காட்டச் சொல்லி, கற்பூர ஜ்வாலையில் கட்டைவிரலைக் காட்டி அதில் பிடித்த திருஷ்டிக் கரியை காஷ்டானன் நெற்றியில் தீட்டினான்.

"இது என் மதமல்ல...." என்று காஷ்டானன் கூவியதைப் பொருட்படுத்தாது அவன் நெற்றியிலும் விபூதி தீட்டி, "இன்று முதல் நீ சைவ மதம்" என்று கூறினான்.

"எதற்காக நான் மதம் மாற வேண்டும்?" என்று கேட்டான் காஷ்டானன்.


"என்னைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் என் மதத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்" என்றான் சதகர்ணி.

"ஏன்?"

"மதம்தான் மனிதர்களைப் பிணைக்கும் பெரிய சக்தி."

"என் மதத்திலேயே நான் இருந்தால் என்ன?"

"இனி நீ நாகபாணனிடம் போக



முடியாது. போனால் பூஜாரி தப்பிய விஷயத்தைச் சொல்லும்படியிருக்கும். சொன்னால் உன்னை வெட்டிவிடுவான்'' என்ற சதகர்ணி, ''நீ என் பக்கத்திலிருப்பதே உனக்குப் பாதுகாப்பு'' என்று கூறி ''நாளை இரவு நான் நாகபாணனைச் சந்தித்தவுடன் பெரிய நிகழ்ச்சிகள் விளையும்'' என்றும் எச்சரிக்கை தொனித்த குரலில் சொன்னான். பிறகு காஷ்டானனைக் கூட்டிக் கொண்டு சண்டிகா தேவி குகைக்குச் சென்றான்.

காலை நேரம் கடந்து கதிரவன் மேலே எழுந்துவிட்டதால் காடு எங்கும் சூரிய ர்ச்மிகளால் புதுமெருகு கொண்டது. திறந்திருந்த குகைக்குள்ளும் இரண்டு கிரணங்கள் பட்டையாகப் பாய்ந்து படிகளைத் தழுவிச் சென்றதால் கதிரவன் சண்டிகாதேவியின் திருவடிகளைத் தொட முயன்ற பிரமையை சிருஷ்டித்தான். குகைக்கு மேலிருந்த செடிகள் சில மலர்களைப் படிகளில் உதிர்த்திருந்ததால் கதிரவன் பூஜையை மலர்ப் பூஜையாகச் செய்ய முன் வந்ததுபோல் தோன்றியது. இந்தச் சூழ்நிலையில் குகையின் உள்ளிருந்து சித்தரஞ்சனியின் குரல் அமுதமயமாக ஒலித்தது. அந்த தேவி கானத்தைக் கேட்டு மெய்மறந்து பல நிமிடங்கள் நின்றுவிட்ட சாதவாகனன் ''வா போவோம்'' என்று காஷ்டானனுக்கு உத்தரவிட்டு, படிகளில் இறங்கிச் சென்றான். காஷ்டானன் பின் தொடர்ந்தான்.

சண்டிகா தேவி முன்பு உட்கார்ந்து சங்கீத உபாசனையில் ஈடுபட்டிருந்த சித்தரஞ்சனி. தேவியை வணங்கிவிட்டு, தன்னைத் தாண்டி விழுந்த சதகர்ணியின் நிழலைக் கண்ட

சாண்டில்யன்



''ராத்திரி பஞ்சு மிட்டாய் தின்கிற மாதிரி கனவு கண்டேன் டாக்டர்.''

''அதுக்கென்ன?'' !

''காலையில் பார்த்தபோது தலையணையில், பாதிப்பஞ்சை காணும் டாக்டர்.''

—ஊழை. அ. கதிர்வேல்.

தும் திரும்பினான். காலையில் நீராடியதால் உலராத தலையில் ஜடை இடாமல் அடி முடிச்சுப் போட்டு, மலர்களைக் கூந்தலின் பரப்பில் சொருகியிருந்த சித்தரஞ்சனியே ஒரு தேவதையாகக் காணப் பட்டாள். அவள் நெற்றியில் துலங்கிய குங்குமப் பொட்டும் விபூதிக் கீறலும் கழுத்தில் தீட்டியிருந்த பூஜைப் பிரசாதமான சந்தனமும் அவளைத் தேவகன்னிகையாக அடித்திருந்தன.

தெய்வீகம் கலந்த அந்த அழகைப் பார்த்த கௌதமிபுத்ரன் பேசும் சக்தியை இழந்து பல விநாடிகள் நின்றுவிட்டான். காஷ்டானன் உள்ளத்தில் அச்சம் கலந்த பிரமிப்பு உண்டாயிற்று. தான் மணக்க இருந்த சித்தரஞ்சனி தன்னை அடியோடு ஏறிட்டுப் பார்க்காததையும், சதகர்ணியைப் பார்த்ததும் வெட்கம்கலந்தபார்வையை வெளியிட்டதையும், கவனித்துக் கைக்குக் கிட்டாத அந்தக் கனியைப் பற்றி நினைப்பதும் உயிருக்கு அபாயம் என்ற எண்ணத்தால் தனது பார்வையைச் சண்டிகா தேவி மீது நிலைக்க விட்டான். அதைக் கண்ட சதகர்ணி, ''சித்தரஞ்சனி! காஷ்டானன் நமது மதத்தில்சேர்ந்து விட்டார். நமது படையில் ஒரு முக்கிய பதவி வகிப்பார்'' என்று சித்தரஞ்சனிக்கு காஷ்டானன் மத மாற்றத்தை எடுத்துரைத்தான்.

''கட்சி மாறுகிறாரா?'' என்று கேட்டாள் சித்தரஞ்சனி.

''கட்சி மாறவிட்டால் பதவி எப்படிக் கிடைக்கும்?'' என்று கேட்ட சதகர்ணி, ''நமது படைகளுக்கு இவர் தலைவர்'' என்று சொன்னான்.

காஷ்டானன் பிரமை உச்ச கட்டத்தை அடைந்தது ''நான் உங்கள் படைத் தலைவனா?'' என்று வியப்புடன் கேட்டான்.

''ஆம்.''

''வஜ்ரபாகு இருந்தாரே?''

''அவர் வேறு அலுவலாகத் தலைநகரம் சென்றுவிட்டார். அவருக்குப் பதில் உன்னை நியமித்திருக்கிறேன். உனக்கு இதில் ஒரு அதிர்ஷ்டமிருக்கிறது'' என்றான் சதகர்ணி.

''என்ன அதிர்ஷ்டம்?'' என்று சந்தேகத்துடன் கேட்டான் காஷ்டானன்.

''சித்தரஞ்சனியின் உத்தரவுப்படி நீ நடந்துகொள்ளவேண்டும். அவள் உத்தரவை எனது உத்தரவு போல் பாவித்து நட. உனக்கு எந்த ஆபத்தும் வராது'' என்றான் சதகர்ணி.

''ஆமாம். இங்கு படைகள் ஏது? மலைவாசிகள் கூட்டம் படையாகுமா?'' என்று கேட்டான் காஷ்டானன்.

''படையின் திறன் படைத் தலைவன் அளிக்கும் பயிற்சியைப் பொறுத்தது'' என்ற சதகர்ணி காஷ்டானனை நோக்கி, ''படைத் தலைவரே! நாளை இரவு நான் நாகபாணன் மரக்கலத்திற்குப் போகும்போது மூன்று மரக்கலங்கள் வடக்கிலிருந்து வரும். அவற்றுக்கு நாகபாணன் மரக்கலத்திலிருந்து தீபத்தால் அடையாளம் காட்டுவார்கள். அந்த அடையாளத்தைக் கவனித்து நான் திரும்பியதும் என்னிடம் சொல்லும்'' என்று கூறிவிட்டு, ''சித்தரஞ்சனி! இவருக்கு நமது படைகளைக் காட்டு'' என்று உத்தரவிட்டு எட்ட இருந்த தனது புரவியில் ஏறிக்கொண்டு கடற்கரையை நோக்கிச் சென்றான்.

தன்னைத் தொடரும்படி காஷ்டானனுக்குச் சைகை செய்த சித்தரஞ்சனி மலையின் சரிவிலிருந்த ஒரு பாதை மூலம் மலையின் மறுபக்கத்தை நோக்கிச் சென்றாள். ஒரு ஜாமம் முழுவதும் பயணம் செய்த பிறகு மலையின் மறு பக்கச் சரிவில் நின்று தனது இனிய குரலில் இசைக்கத் தொடங்கினாள். அவள் குயில் சாரீரம் மேலே படிப்படியாக எழுந்து மேல் ஸ்தாயியை எட்டும் சமயத்தில் தடதடவென்று இரு புரவிகள் வரும் ஓசை கேட்டது. இரு வீரர்கள் மலையின் மறு பக்கச் சரிவின் அடர்ந்த காட்டிலிருந்து வேகமாக வந்து சித்தரஞ்சனிக்குத் தலை வணங்கினார்கள். ''இவர் உங்கள் படைத் தலைவர். அழைத்துச் செல்லுங்கள்'' என்று சித்தரஞ்சனி உத்தரவிட்டாள். புரவியிலிருந்து இறங்கிய இரு வீரரும் காஷ்டானனுக்கு இருபுறத்திலும் வந்து அவன் கைகளைப் பிடித்து அழைத்துச் சென்றார்கள். அவர்கள் பிடியில் அச்சத்துடன் சென்ற காஷ்டானன் திரும்பத் திரும்பத் தன்னைப் பார்த்த வண்ணம் பரிதாபமாகச் செல்வதைக் கண்ட சித்தரஞ்சனி புன்முறுவல் கொண்டாள். ''கௌதமிபுத்ரர் ராஜ தந்திரம் இணையற்றது. அவரை யாரால் புரிந்து கொள்ள முடிகிறது?'' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள். சதகர்ணியைப் போன்ற மகாவீரன் தனது மையலில் சிக்கியதைப் பற்றிப் பெருமையும் கொண்டாள். 'அடி சித்தரஞ்சனி! என்ன இருந்தாலும் நீ அதிர்ஷ்டசாலி!' என்று உள்ளூரத் தன்னைச் சிலாகித்தும் கொண்டாள்.

(தொடரும்)

நாடு எப்படித்தான் உருப்படுமோ?

சர்வீஸ் நெம்பருக்கு கட்டணம் செலுத்துவதற்காக மின் அலுவலகத்திற்குச் சென்றிருந்தேன். 16—ந்தேதி செலுத்தியிருக்க வேண்டும். சந்தர்ப்பச் சூழ்நிலையால் அன்று செலுத்த முடியவில்லை. 17 ந்தேதி காலை 9.30 மணிக்குச் சென்றேன். மின் கட்டணம் வசூலிப்பவரிடம்விவரம்கூறினேன். உடனே அவர், ''அடடே, இப்பதானே கணக்கு முடித்தேன்; ஒரு அரைமணிநேரம் முன்பு வந்திருந்தால் கூடச் சரி செய்திருக்கலாம். ஆனால் இப்போது ரூ. 15/— அபராதத் தொகையுடன்தான் செலுத்த வேண்டும்'' என்றார். ''சரி''யென்றேன்! ''அப்படியானால் அதோ அங்கிருப்பவரிடம் தொகையைச் செலுத்தி விடுங்கள்'' என ஒருவரைக் காட்டினார். நான் அவரிடம் சென்று சிறிதுநேரம் நின்றேன். அவரோ என்னைப் பற்றிச் சிறிதும் கண்டு கொள்ளாமல் ஏதோ அவசர வேலையில் பிஸியாக இருப்பது போல் பாவனை செய்தார். மீண்டும் முதலாமவரே என்னைக் கூப்பிட்டு, எனது சர்வீஸ் நெம்பரின் பில் தொகையுடன் ரூ. 5/— ஐ மட்டும் அதிகப்படியாக வசூலித்தார். உடனே நான் அவரிடம், ''என்னங்க... அபராதத் தொகை ரூ. 15/— என்றல்லவா சொன்னீர்கள்; இப்போது ரூ. 5/— மட்டும் கூடுதலாக வாங்கியுள்ளீர்களே இது பர்சனல் அபராதத் தொகைங்கள்ா!'' எனக் கேட்டேன். அதற்கு அவர் முகம் மலரச் சிரித்தார். இப்படி ஒவ்வொருவரும், ஒவ்வொரு வகையில் அவர்களின் இலாக்காவுக்குத் துரோகம் செய்தால், நாடு எப்படி உருப்படும்?

— சேலம், ஆர். மணிவண்ணன்.

ஹிந்தி ஏகாதிபத்தியம் தலையெடுக்கிறது!

சில வாரங்களுக்கு முன்பு மத்தியத் தகவல் ஒலிபரப்பு அமைச்சர் சாட்கில் இனி டீ. வி.யும் ரேடியோவும் ஹிந்தியைப் பரப்பவேபயனாகும்என்றார்! இந்தமுடிவுக்கு அனுகூலமாகக் கொடைக்கானல் மைக்ரோவேவ் டீ. வி. ரிலே சென்டரை சென்னை டீ. வி. நிலையத்துடன் இணைக்கும் திட்டத்தை மூட்டை கட்டி வைத்து விட்டார். இதன் நிகர விளைவு என்னவென்றால் சென்னைக்கு அப்பால் உள்ள தமிழக மக்கள் எல்லோரும் புது தில்லியிலிருந்து ஒலிபரப்பாகும் ஹிந்தி நிகழ்ச்சிகளையே வலுக்கட்டாயமாக டீ. வி.யில் பார்த்தாக வேண்டும். பத்திரிகைகளும் அரசியல் தலைவர்களும் கொடைக்கானல் ரிலே நிலையத்தை சென்னை டீ. வி. நிலையத்துடன் இணைக்க வலுவான குரல் கொடுக்க வேண்டும்.

— கோவை, சார்லஸ் பாக்கியம்.

ஜாதகத்தின் பாதகங்கள்!

எனது நண்பரொருவர் தனது ஜாதகத்தைப் பார்ப்பதற்காக ஒரு லோக்கல் ஜோதிடரிடம் போனார். ஜாதகப் பலனைக் கணித்த ஜோதிடர், ''இப்போது நீங்கள் குடியிருக்கும் வீடு உங்களுக்கு ராசியல்ல. எவ்வளவு சீக்கிரத்தில் வீட்டை மாற்றுகிறீர்களோ அந்த அளவுக்கு இழப்புக்களைத் தவிர்க்கலாம்'' என்று சொல்லியிருக்கிறார். மிகவும் சிரமப்பட்டு நண்பர் வீட்டை மாற்றி வேறு வீதிக்குக் குடி போனார். அங்கேயும் துன்பங்கள் தொடர்ந்தன. அடுத்த ஆறாவது மாதம் மீண்டும் அதே ஜோதிடரிடம் போனார் நண்பர். இதற்குள் சனிப்பெயர்ச்சி நடந்திருக்கிறது. தற்போது ஜோதிடர், சனிப்பெயர்ச்சியின் விளைவாக ஏற்பட்ட மாறுதல்களை விளக்கினார். அதன்படி அவருடைய தற்போதைய பிரச்னைகளுக்கெல்லாம் அவருடைய மகனின் ஜாதகப் பலனே காரணம் என்றிருக்கிறார். இப்போதோ — நினைத்ததற்கெல்லாம் நண்பர் தன் மகனைப் பிடித்துச் சாத்துகிறார். ''சனியன் பிறந்ததிலிருந்தே எனக்குப் போறாத காலந்தான்,'' என்று அர்ச்சனை செய்கிறார்.

இதைக் காணும்போது மனம் மிகவும் சங்கடப்படுகிறது. ஜாதகம், சகுனம் எல்லாவற்றையும் விட கீதை உயர்ந்தது என்று நாம் எப்போது புரிந்து கொள்வோம்? முடிவைப் பற்றிக் கவலைப்படாமல் காரியத்தில் ஈடுபடுவதுதான் நமது கடமை என்பதை என்று உணர்வோம்?

— பூங்குருநல், அசோகன்.



* போஸ்டர்களால் அசிங்கப்படுத்தப்படும் வள்ளுவர் சிலை



* ஒழுங்கில்லாத குறுகலான பஸ் ஸ்டாண்டு

தயவு செய்து அடுத்த பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ள பெட்டிச் செய்தியை முதலில் படியுங்கள். படித்து விட்டீர்களா? ஆஹா! எத்தனை சிறப்பு வாய்ந்த மாவட்டம் அந்தச் சேலம் மாவட்டம் என்று ஆச்சரியப்படுகிறீர்களா? ஆச்சரியப்பட வேண்டாம்! அதே சேலம் நகரில்தான் நீங்கள் தொடர்ந்து படிக்கப் போகும் அடிப்படைப் பிரச்னைகளும் வேதனைப்பட வைக்கின்றன...

சேலத்தைச் சுற்றினேனும்; சோர்ந்து த


சேலத்தை இரண்டாகப் பிரித்து அதற்கு ராஜாஜி மாவட்டம் என்று பெயர் வைக்கப் போவதாக அமைச்சர் பொன்னையன் அறிவிப்புச் செய்திருந்தார். அப்படி இரண்டாகப் பிரிக்கப்படுவதற்குமுன் சேலத்தின் நிலையை அறிய ஆசைப்பட்டுச் சேலம் சென்றோம்.

திருச்சி மெயின்ரோடு மூலமாகச் சேலத்திற்குள் நுழையும்போது நம்மை வரவேற்பது 'தந்தை பெரியார் 100—வது ஆண்டு நினைவு வளைவு'தான். அந்த வளைவு 15.7.79 அன்று கி. வீரமணி தலைமையில் கலைஞர் மு. கருணாநிதியால் திறக்கப்பட்டது. கி. வீரமணி தலைமையில் திறக்கப்பட்டிருந்தும், கடைசி வரை பெரியார் பயன்படுத்திய சீர்திருத்தத் தமிழில் 'நினைவு', 'வளைவு' என்றில்லாமல் 'நினைவு', 'வளைவு' என்று சாதாரணத் தமிழிலேயே எழுதப்பட்டிருந்தது எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அந்த ஆச்சரியத்துடனேயே சேலம் பஸ் ஸ்டாண்டுக்குள் நுழைந்தோம். பஸ் ஸ்டாண்டு மத்தியில் கம்பீரமாக நிற்கும் மணிக் கூண்டைப் பார்த்தால், அது ஓடவில்லை! அதை நகராட்சி ரிப்பேர் செய்து சரிப்படுத்த வேண்டுமென்று சேலத்தைச் சேர்ந்த சில நற்பணி மன்ற இளைஞர்கள் உண்ணாவிரதம்கூட இருந்து பார்த்துவிட்டார்களாம். அதற்கும் நகராட்சி அசைந்து கொடுக்கவில்லையாம்! வேதனையாக இருந்தது.

சரி, அதுதான் தொலையட்டும், ஒரு மாவட்டத்தின் தலைநகரான சேலத்தில் பஸ் ஸ்டாண்டு எப்படியிருக்கிறது என்று பார்த்தால், அது அதைவிடவும் வேதனை. பஸ்களெல்லாம் தாறுமாறாக நிறுத்தப்பட்டு, 'நான் முந்தி! நீ முந்தி!' என்று போட்டி போட்டுக்







* ரோடுகளின் லட்சணம் இதுதானா!



ஓடாத மணிக் கூண்டு

காண்டு ஹாரன்களின் ப்தம் காதைக் கிழிக்கிறது. ப்படித்தான் சேலத்து மக்ள் இவற்றையெல்லாம் பாறுமையாகச் சகித்துக் காள்கிறார்களோ என்ற வியப்போடு, பஸ் ஸ்டான்ல் இருக்கும் அசைவ ஹாட்டல்ஒன்றின் உரிமைளரான சர்தார் ஜாபர் ஹுசேனை அணுகினோம்.

* ஜாபர் ஹுசேன்



ஏழைகளை விரட்டியடித்தார்' கள். 'ஆனால் சுத்தப்படுத்த மறந்துவிட்டார்கள்!

* சாக்கடையான திருமணி முத்தாறு

ரும்பினோம்!





* சிவகுமார்



* சீனிவாச கோபாலன்

''சார், இந்த பஸ் நிலையத்தை எவ்வளவு அழகா வைக்கலாம் தெரியுமா! ஆனால்' இந்த முனிசிபாலிட்டி இதையெல்லாம் என்னிக்குமே கவனிக்காது. பஸ் நிலையத்தைச் சுற்றிப் பழக்கடைகள், மற்றும் புத்தக, பிஸ்கட், பூக்கடைகள் அனைத்தும் பயணிகளுக்கும் பஸ்களுக்கும் இடையூருக ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கின்றன. இவற்றை அகற்றிச் சுத்தப்படுத்த முனிசிபாலிட்டிக்கும் சரி, போலீஸ்காரர்களுக்கும் சரி தைரியமும், யோக்கியதையும் இல்லை. காரணம், தங்களுக்குத் தேவையான போதெல்லாம் 'சம்திங்' பெறுவதுதான்! அடிக்கடி பஸ் நிலையத்தில் வெளியூர்க்காரர்கள் பணத்தையும் பொருள்களையும் திருட்டுக் கொடுப்பது சகஜமாகிவிட்டது. தனியாக ஒரு பெண் இந்த பஸ் நிலையத்திற்குள் வந்துவிட்டால் போதும், சில காலிப் பயல்கள் செய்யும் சேஷ்டைகள், அநாகரீகமான பேச்சுக்கள்..... ச்சே..... இவற்றையெல்லாம் காவல் துறையினர் கண்டு கொள்வது கிடையாது.

"இப்போது இந்த பஸ் நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றத் திட்டம் போட்டு, அச்சுதன் ஏரி என்னும் இடத்தில் (சொர்ணமுகி எதிரில்) — இங்கிருந்து ஆறு கிலோ மீட்டர் தூரத்தில் புதிதாகக் கட்டிக் கொண்டு இருக்கிருர்கள். அதற்கு அவசியமே இல்லை. இந்த பஸ் நிலையத்திலேயே இடையூருக உள்ள நடைபாதைக் கடைகள், விக்டோரியா தியேட்டர் மற்றும் போஸ் மைதானம் ஆகியவற்றில் நீக்க வேண்டியவற்றை நீக்கிவிட்டுப் பராமரித்தால் போதும், சேலம் பஸ் நிலையம் போல் 'பெரிய பஸ் நிலையம் தமிழகத்தில் இல்லை என்று சொல்லும்படியாக இருக்கும்!

''மேலும் வருடந்தோறும் போஸ் மைதானத்தில் அரசு போடும் கண்காட்சியை நிறுத்த வேண்டும்; அல்லது பயணிகளுக்கு எந்தவித இடையூறும் இல்லாத அளவில் நேரு ஸ்டேடியத்தில் கண்காட்சியைப் போட முன்வர வேண்டும். போஸ் மைதானத்தில் ஆகஸ்டு மாதம் ஆரம்பமாகும் இந்தக் கண்காட்சிக்கு ஜூலை மாதமே ஸ்டால் பந்தல்கள், மற்றும் கண்காட்சிக்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்து விடுவதால், பஸ் நிலையத்திற்கு வரும் வெளியூர்ப் பஸ்கள் அனைத்தையும் நகரத்தின் வெளியிலேயே — ஊர்க் கோடியிலேயே நிறுத்திவிடுகிருர்கள். இதனல் எந்த ஊர் பஸ் எந்த இடத்தில் நிற்கிறது என்று தெரியாமல் பயணிகள் விழிப்பதைப் பார்க்கும் போது மிகவும் வேதனையாக இருக்கிறது...'' என்று சொல்லிக் கொண்டே சென்ற அவரிடம், சேலத்தை இரண்டாகப் பிரித்து ராஜாஜி மாவட்டம் என்று பெயர் வைக்கப் போவது குறித்து....'' என்று கேள்வியை முடிப்பதற்குள்,

''அந்தத் தியாகச் செம்மலோட பெயரை வைத்து அவருக்கு இழுக்கைத் தேடித் தராமல் இருந்தால் சரி. சேலத்தைச் சீர் செய்துவிட்டு அவர் பெயரை வைக்கட்டுமே....!'' என்று பொரிந்து தள்ளினர்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இந்த பஸ் நிலையத்தில் (அப்போது காய்கறி மார்க்கெட்) சேலம் முனிசிபாலிட்டியால் கட்டப்பட்ட — தமிழகத்திலேயே இரண்டாவது மிகப் பெரிய தியேட்டர் சென்ட்ரல் விக்டோரியா டாக்கீஸ். சேலம் முனிசிபாலிட்டியினர் அந்தத் தியேட்டரை இடித்துவிட்டுப் பஸ் நிலையத்தை விரிவுபடுத்தப் போவதாகச் சொல்லி காலி செய்யச் சொன்னர்கள். ஆனல் அதை வாடகைக்கு எடுத்து நடத்திக் கொண்டு வந்த வரதராஜப் பிள்ளை காலி செய்ய மறுத்துவிட்டார். பிறகு அவர் மீது முனிசிபாலிட்டியினர் வழக்குப் போட்டார்கள். கடந்த 25 வருஷமாக இந்த வழக்கு நடந்து கொண்டு வருகிறது.

வரதராஜப் பிள்ளை சமீபத்தில் மரணம் அடைந்துவிட்டதால் அவருடைய கடைசி மருமகன் சிவகுமார் அந்தத் தியேட்டரை நடத்தி வருகிருர். அவரை அணுகி விசாரித்த போது, ''வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் நடந்து கொண்டிருக்கிறது. தினமும் பயங்கர நஷ்டத்தில்தான் தியேட்டர் நடந்து கொண்டிருக்கிறது. முனிசிபாலிட்டியினர் தியேட்டருக்குச் செய்யும் தண்ணீர் சப்ளையை நிறுத்திவிட்டார்கள். லெட்ரின் குழாய்களையும் அடைத்துவிட்டார்கள். இதனல்தியேட்டரின் சுகாதாரம்கெட்டுவருகிறது. பஸ்நிலையத்தை விரிவுபடுத்த வேண்டும் என்ற காரணத்தினல்தான் இந்தத் தியேட்டரை இடிக்கப் போவதாகச் சொல்லி எங்களை காலி செய்யச் சொல்கிருர்கள். இப்போதுதான் பஸ் நிலையத்தை அச்சுதன் ஏரிக்கு மாற்றப்

''எங்கப்பா என்னைப் போல தாராளமா செலவு செய்ய மாட்டார்...''

''ஏன் அப்படி?''

''எங்கப்பாவைப் போல அவங்கப்பா அவ்வளவு பணத்தைச் சம்பாதிச்சு வைக்கலையே!''

—குமார்.

சிறப்பு மிக்கது எங்கள் சேலம்

* மாக்னஸைட், பாக்ஸைட், சுண்ணாம்புக் கல், குவார்ட்ஸ், காரட், பெல்ஸ் பார், ஜிப்சம், ஸ்பீடைட், மைக்கா கிரேனைட் போன்ற கனி வளம் நிறைந்த பகுதி சேலம். நாளுக்கொரு தொழிற்சாலையாகப் பெருகிவருவதும் உண்மை.

* இருநூறு கோடி ரூபாய் செலவில் எழும்பியுள்ள கஞ்ச மலை இரும்பாலையில் எவர்சில்வர் தகடுகளாக உற்பத்தியாகிக் கொண்டிருக்கின்றன. விரைவில் மின் அணு தொழிற்பேட்டை துவங்கப்படவும் இருக்கிறது.

* வெகு விரைவில் 200 ஏக்கர் பரப்பளவில் விமான நிலையம் ஒன்றும் அமைக்கப்படவிருக்கிறது.

* ஏற்கெனவே உள்ள பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரிகளுடன் மருத்துவக் கல்லூரிக்கான இடமும் தயார் நிலையில் இருக்கிறது.

* சென்னையை அடுத்துச் சேலத்தில்தான் அதிகமான சினிமா தியேட்டர்கள் இருக்கின்றன. மொத்தம் அறுபத்து மூன்று.

* வெள்ளி ஆபரணங்கள் செய்யும் தொழில்களும், பட்டு நூல் உற்பத்தி, கைத்தறித் தொழில்களும் கணிசமான அளவுக்கு வளர்ந்து கொண்டுள்ளன.

* தமிழகத்தின் எழுபது சதம் காகிதத் தேவையைப் பூர்த்தி செய்யும் சேஷசாயி காகிதத் தொழிற்சாலை சேலம் மாவட்டத்தில்தான் உள்ளது. மேட்டூர் நீர் மின்நிலையமும் சேலம் மாவட்டமே!

* சேலத்திலிருந்து ஜப்பான்வரை கருங் கற்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மேட்டூரிலிருந்து வங்காளத்திற்கு மீன்களை அனுப்புகிறார்கள்.

* பால் பவுடர் தொழிற்சாலை, லாரிகளுக்கு 'பாடி'' கட்டும் தொழிற்சாலைகளும் நிறைந்த மாவட்டம். ஜவ்வரிசி உற்பத்தி ஏராளம்.


* சேலத்திலிருந்து நான்கு ரூபாய் பஸ் கட்டணத்தில் குளுகுளு ஏற்காடு!

— மகரிஷி

போகிறார்களே பிறகு எதற்காக எங்களை இன்னமும் இந்த முனிசிபாலிட்டியினர் வம்புக்கு இழுக்கிறார்கள் என்று தெரியவில்லை. இந்த ஒரு காரணத்ினாலேயே கேஸ் எங்கள் பக்கம் ஜெயிக்க வாய்ப்பு இருக்கிறது. அதற்கு முன் நானே,' இந்தத் தியேட்டரின் பரப்பளவு மொத்தம் 29,237 அடி. அதில் 18,172 அடியை முனிசிபாலிட்டிக்கே தந்து விடுகிறேன். மீதம் உள்ள 11,065 அடியை மட்டும் எனக்குக் கொடுத்துவிடுங்கள். அதில் மினி தியேட்டரை கட்டிக் கொள்கிறேன்' என்றுகூடச் சொல்லிப் பார்த்தேன். அவர்கள் அதற்கும் சம்மதிக்கவில்லை. போனால் போகட்டும் சுப்ரீம் கோர்ட்டில் முடிவு எப்படி ஆகுமோ அப்படியே ஆகட்டும் என்று விட்டு விட்டேன்!'' என்றார்.

சேலத்திலுள்ள டி.வி.எஸ். கம்பெனியில் பணிபுரியும் சீனிவாச கோபாலன் என்பவரைச் சந்தித்தபோது எங்களை அழைத்துச் சென்று, ''இதுதான் சார், திருமணி முத்தாறு!'' என்று பெரிய சாக்கடை நீர் ஓட்டத்தைக் காண்பித்தார். அருகில் சென்ற போது துர்நாற்றம் தாங்க முடியாமல் தவித்துப் போனோம்.

''இந்த ஆற்றில் முன்பு முத்துக் குளித்ததாகப் பெரியவர்கள் சொல்வார்கள். ஆனால் இப்போது கொசுக்களின் பிறப்பிடமாகவும், பன்றிகளின் உறைவிடமாகவும் பலவித நோய்கள் பரவுவதற்குக் காரணமாகவும்தான் இருக்கிறது'' என்றார்.



பிறகு, சேலம் ஜங்ஷன், சந்தைப் பேட்டை, செவ்வாய்ப் பேட்டை போன்ற இடங்களுக்கு எங்களை அவரே அழைத்துச் சென்று ரோடுகளின் பரிதாப நிலையைக் காட்டினார். மறுபடியும் நாங்கள் திருச்சி மெயின் ரோடுக்கே வந்தபோது, அங்கு சில வருடங்களுக்கு முன்பு ரோடு ஓரங்களில் குடிசை போட்டுக் கொண்டு வாழ்ந்த ஏழைகளின் குடிசைகளை இடித்துத் தள்ளியிருந்ததையும், அதை ஆண்டுக்கணக்கான பிறகும் நகராட்சியினர் சுத்தப்படுத்தாமல் வைத்திருந்ததையும் காட்டினார். அவற்றையெல்லாம் நாங்கள் பார்த்துக் கொண்டே சென்றபோது, பஸ் நிலையத்தினுள்ளும், சினிமாத் தியேட்டர்கள் முன்னும், புரோக்கர்கள் சேலத்திற்குப் புதிதாகவருபவர்களையும்,' அந்த' டேஸ்ட் உள்ளவர்களையும் வெகுஉலாவகமாகப் பேசி லாட்ஜுகளுக்கு அழைப்பதையும் கண்கூடாகக்கண்டோம். இதனைச்சுட்டிக்காட்டிய சீனிவாச கோபாலன், ''இங்கு பெண்களை வைத்து 'அந்த'த் தொழில் செய்பவர்கள் ஏராளம்! இதெல்லாம் பெரிய பெரிய புள்ளிகளின் ஆதரவோடு சேலத்தில் நடக்கிறது!'' என்றார். நாங்கள் வேதனையோடு அவரிடம் விடை பெற்றுக் கொண்டு திரும்பினோம். எத்தனையோ இயற்கை வளங்களும், முன்னேற்றங்களும் நிறைந்திருந்தும் இப்படிப்பட்ட அவலங்களா என்று சோர்ந்து போய்த் திரும்பினோம்.

செய்தித் தொகுப்பு: மேஜர்தாசன்

படங்கள்:

சிவா போட்டோ ஸ்டுடியோ (ஈரோடு)

இது ஒரு தூய்மைப் பகுதி

இராஜாபாலசந்தர்



"டிங்....டிங்....டிங்...." என அடி தாங்காமல் அலறியது அந்த இரும்புத் துண்டு. அதனை மனித மொழியில் இப்படி மொழி பெயர்க்கலாம். "இடைவேளை நேரம் முடிந்து விட்டது. மாணவர்கள் யாவரும் வகுப்பிற்குச் செல்லவும்."

வராந்தாவிலும், விளையாட்டு வளாகத்திலும் தாறுமாறாக இறைந்திருந்த மாணவர்கள் தங்களின் வகுப்புக்களை நோக்கி விரைவாகப் படையெடுத்தனர்.

பால் ஐஸை அவசரமாகச் சப்பிக் கொண்டே வந்ததில் பலருக்குச் சட்டையெல்லாம் கறையானது.

"டபுளப்.... டபுளப்...." என மணியடித்தவுடன் பிரம்பை விசிறியடித்தபடி துரத்துவார் விளையாட்டு ஆசிரியர். அவரிடம் அகப்பட்டுவிடக்கூடாதே என்ற அச்சம் தான் மாணவர்களின் இந்தப் பரபரப்புக்குக் காரணம்.

இதனால், எப்போதுமே மணியடித்த இரண்டு நிமிடங்களில் வகுப்பறைகள் நிறைந்துவிடும். அதன் பிறகு, ஒரு மாணவனைக்கூட அவசியமின்றி வெளியே பார்க்க முடியாது.

இந்த விஷயத்தைப் பொறுத்தவரை; உடற் கல்வி ஆசிரியருக்குக் கொஞ்சம் மனநிறைவு தான்.
காரணம், மற்ற பாடங்களைப் போல, விளையாட்டும் ஒரு கட்டாயப் பாடமாக ஆக்கப்படாமலேயே இருப்பது அவருக்கு மிக வருத்தம்.

அதனால்தான் மாணவர்கள் விளையாட்டில் ஆசையையும், ஆர்வத்தையும் இழந்து விட்டார்கள் என்பது அவரது வாதம்.

சரி, நாம் கதைக்கு வருவோம்.



மணி அடித்தவுடன் மாணவர்கள் அவரவர் வகுப்பிற்குச் செல்லும்வரை ஒரு ஜோடிக் கண்கள் அவர்கள் அனைவரையும் கூர்மையாகக் கவனித்துக் கொண்டு இருக்கும்.

விளையாட்டு வாத்தியாரிடம் 'டிமிக்கி' கொடுக்க நினைப்பவர்கள் இந்தக் கண்களிடம் சிக்குவது உறுதி. பிறகு, அதற்குத் தனி தண்டனைகள் உண்டு.

அந்தக் கண்கள் வேறு யாருடையதும் அல்ல, பள்ளியின் தலைமை ஆசிரியருடையவைதான்.

அதற்காகவே, பள்ளிக்கூடம் முழுவதையும் பார்க்கக் கூடிய இடமாகத் தேர்ந்தெடுத்துத் தம் அறையாக்கிக் கொண்டார் தலைமை ஆசிரியர்.

அவரைப் பற்றிச் சொல்ல நிறைய விஷயங்கள் உண்டு.

இன்னும் சில வருடங்களில் ஓய்வு பெற இருப்பவர் அவர். எனவே, அறிவும், அனுபவமும் அதிகம் பெற்றவர்.

எல்லாவற்றிற்கும் மேலாக, பொறுப்புணர்ச்சி மிக்கவர்.

வேண்டிய அளவு அன்பை மாணவர்களிடம் பொழிவார். ஆனால், அவர்கள் வேண்டாத காரியம் செய்துவிட்டால், கடுமையைக் காட்டிக் கடுகாகப் பொரிவார்.

ஆசிரியர்கள் விஷயத்திலும் அவர் அப்படித்தான்.

சாதுரியமாகப் பேசிச் சரியானதைச் சாதிக்கும் திறமை பெற்றவர் அவர்.

''மாணவர்களுக்கு நல்ல புத்திமதி கூற வேண்டியது உங்களோட பொறுப்பு. அதைக் கடைப்பிடிச்சா அவர்களுக்கு நல்லது இல்லையா?'' என்று ஆசிரியர் கூட்டத்தில் கனிவுடன் கேட்பார்.

அனைத்து ஆசிரியர்களின் முகபாவமும் அதை ஆமோதிக்கும்போது, ''அதே போல ஆசிரியர்களுக்கு நல்ல ஆலோசனைகளைக் கூற வேண்டியது தலைமை ஆசிரியரோட கடமை. அது சரின்னு உங்க மனசுக்குத் தோணிச்சின்னா, நீங்களும் அதை கைக்கொள்ளலாமில்லையா?'' என்று கூறிச் சிறந்த அறிவுரைகளை ஆலோசனை என்ற பெயரில் கூறுவார்.

ஆசிரியர் செய்யும் தவறான காரியங்களைப் பெயர் குறிப்பிடாமல் கூறி, அதன் பின்விளைவுகள் பற்றியும் இதமாக எடுத்துரைப்பார்.

இதனால் தவறிழைத்தவர்கள் திருந்துவது மட்டுமின்றி, மற்றவர்களுக்கும் அது பிரயோஜனமாக இருக்கும்.

இவர் எப்படி இத்தனை நுணுக்கமாகக் கவனிக்கின்றார் என எல்லோரும் கருத்து வேறுபாடு இன்றி வியப்பார்கள்.

'டிஸிப்ளின் முக்கியம்' என மாணவர் இலக்கிய மன்றத்தில் வலியுறுத்துவார்.

'ஸின்ஸியாரிட்டி அவசியம்' என ஆசிரியர்களை வற்புறுத்துவார்.

அவரின் கண்டிப்பும், 'கடமையை ஒழுங்காகச் செய்' என்ற அவரின் வலியுறுத்தலும் பலருக்கு அவர் மீது எரிச்சலை உண்டாக்கின.

ஆனால், மொத்தத்தில் பார்க்கும்போது, அனைத்து ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கும் அவர் மீது மதிப்பும், மரியாதையும் நிறையவே உண்டு.

தன் அறையில் இருந்து கொண்டே பள்ளியின் மொத்த இடத்தையும் நோட்டமிட்டார் தலைமை ஆசிரியர்.

அனைத்து வகுப்புகளிலும் பாடம் ஒழுங்காக நடந்து கொண்டு இருந்தது. ஒரு மாணவன்கூட அனாவசியமாக வெளியே திரியாமல் இருப்பது கண்டு மகிழ்ந்தார்.


எதிர்ச் சுவரில் உற்சாகமாக இயங்கிக் கொண்டிருந்த கடிகாரத்தைப் பார்த்தார். தற்போது நடந்து கொண்டிருந்த 'பீரியட்' முடிய இன்னும் இருபது நிமிடங்கள் பாக்கி இருந்தன.

எனவே, வகுப்பறைகளை ஒருமுறை சுற்றிப் பார்வையிடக் கிளம்பினார்.

சில வகுப்புகளில் விஞ்ஞான சோதனைகளைச் செய்து காட்டிக் கொண்டு இருந்தனர் ஆசிரியர்கள். ஓர் அறையில் தமிழய்யா நாலடியாரை ராகம் போட்டுப் பாடிக் கொண்டு இருந்தார். உலக உருண்டையைச் சுழற்றி என்னவோ விளக்கினார் பூகோள வாத்தியார்.

மாணவர்கள் உற்சாகமாகக் கவனித்துக் கொண்டு இருந்தனர்.

மறுபுறத்தில் அமைந்திருந்த அறைகளைப் பார்வையிட, அவர் திரும்பியபோது, அந்தப் பக்கமிருந்து வேகமாக ஓடி வந்த ஒரு மாண



அருள்வாக்கு

ஒவ்வொரு ஆசையும் ஒவ்வொரு ஸமயத்தில் அலுத்துப் போகிறது. ஆனாலும் எந்த ஆசையுமே ஒரு வழியாக அற்றுப் போயும் விடாமல் கொஞ்ச நேரத்துக்கு அப்புறம் 'விட்டேனா பார்' என்று மறுபடி படையெடுக்கிறது. ஆசையைப் பூர்த்தி பண்ணும் வஸ்துவின் அநுபோகம் ஜீவனுக்குத் திரும்பத் திரும்ப வேண்டியிருக்கிறது. அதற்கு அவன் அடிமையாகி விடுகிறான். addict ஆகிவிடுகிறான். அடிமையாய் விட்டால் அப்புறம் துக்கப்பட வேண்டியதுதான்.

'ஷவர் பாத்' தான் தனக்கு 'ஹாபிட்' என்றால் எல்லா இடத்திலும் 'ஷவர்' கிடைக்குமா? ஸங்கீதத்தில் ரஸிக்யம் இருக்கிறவனுக்கு எப்போதும் உசந்த ஸங்கீதமாகக் கிடைக்க முடியுமா? கவிதையிலே ரொம்ப ரஸிப்பு, இலக்கியத்திலே ஈடுபாடு இருக்கிறவனுக்கு உசந்த விஷயமாக எப்போதோதான் கிடைக்கிறது. காமா சோமா, கன்னா பின்னா ஆகியவைதான் நிறையக் கிடைக்கின்றன. இவனுக்கோ படிக்காமலிருக்க முடிவதில்லை. அப்படி ஹாபிட் ஆகிவிட்டது. ஆனால் படிக்க எடுக்கிற புஸ்தகம் எதுவும் திருப்தி தரமாட்டேன் என்கிறது. அதற்காகப் படிக்காமல் இருந்தாலும் dull ஆக depressed ஆக இருக்கிறது. ஆசை உண்டாக்குகிற ஹாபிட் என்கிற பழக்கதோஷத்தினால் இப்படியெல்லாம் துன்பம். ரேஸ் கோர்ஸ், கள்ளுக் கடை, சீட்டாட்டம், காஃபி இவைதான் என்றில்லை; எதிலே ஆசை வைத்தாலும் அது ஒரே இழுப்பாக இழுத்து அதிலே ரொம்ப ஆனந்தத்தைத் தந்த அநுபோகத்துக்காக மறுபடி மறுபடி தாஹப்பட வைத்து ஒருத்தனை வரட்டி எடுத்துவிடுகிறது. இவன் எதிர்பார்ப்பது — உசந்த ஸங்கீதம், பிடித்தவனுக்கு உசந்த ஸங்கீதம், க்ராம்யக் கூச்சல் பிடித்தவனுக்கு அப்படிப்பட்ட கூச்சல், உசந்த லிட்ரேச்சர் பிடித்தவனுக்கு ரஸமான இலக்கியம், ஆபாஸக் கூத்துப் பிடித்தவனுக்கு அந்த ஆபாஸம், இட்லி ஸாம்பார் பிரியனுக்கு அந்த போஜ்யம் — இப்படி ஒவ்வொருத்தனும் எதிர்பார்ப்பது அவன் ஆசைப்படும் தரத்துக்கு எப்போதும் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட ஸமயங்களில் ஏமாற்றமும் துக்கமுமே ஏற்படுகிறது. அந்த ஆசை இல்லாதிருந்தால் இந்தத் துக்கமும் இல்லை.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

வன் அவர்மீது மோதிக் கொண்டான்.

''பார்த்து வரணும் தெரியுதா?'' என அவனைத் தட்டிக் கொடுத்தார் தலைமை ஆசிரியர். அவன் 'திருதிரு' என விழித்தான்.

''எத்தனையாவது படிக்கிறே?''

சொன்னான்.

''வகுப்பை விட்டு இப்ப எதுக்கு வெளியில போறே?''

''ஒண்ணுக்கு முட்டிக்கிச்சு சார். அதான், வாத்தியாரை கேட்டுக்கிட்டுப் போறேன் சார்'' என்றான் பதற்றத்தோடு அந்தப் பையன்.

''சரி போ!'' என அவனை அனுப்பி விட்டு, மேற்கொண்டு நடந்தார் தலைமை ஆசிரியர்.

வகுப்பறைகளைச் சுற்றிக் கொண்டு மறுபுறமாக வந்தார். அப்போது அதே பையன் திரும்பி வருவதைப் பார்த்தார்.

அவன் கையில் எவர்சில்வர் செம்பு ஒன்று மின்னியது. அவரைப் பார்த்ததும் அவன் ஒரு தூணுக்குப் பின்னால் மறைந்தான்.

'இவனை விட்டுப் பிடிக்க வேண்டும்' என்று நினைத்தவர், அவனைக் கவனியாதது போல நடந்தார்.

இதை அறியாத பையன், அவசரமாக நடந்து தன் வகுப்பறையினுள் நுழைந்தான்.

அவனைப் பின்தொடர்ந்து வேகமாகப் போன தலைமை ஆசிரியர், அவன் புகுந்த அறையை நெருங்கினார். உள்ளே நடந்த உரையாடலைக் கேட்டு கதவிற்கு வெளியிலே நின்று கொண்டார்.

குரலை வைத்து உள்ளே இருப்பது வேணு ஆசிரியர் என்று தெரிந்தது.

வேணு அந்தப் பையனைத் திட்டுவது கேட்டது.

''ஏண்டா சாவு கிராக்கி, தூரத்தில பெரிய வாத்தியார் வாராரான்னு பார்த்துட்டுத்தானே உன்னைப் போகச் சொன்னேன்?'' என ஆத்திரப்பட்டார் வேணு.

''வந்து... அவர நா பார்க்கலே சார்...'' என நா குளறினான் பையன்.

''என்னடா கேட்டாரு அவர்?''


''எங்க போறேன்னு கேட்டாரு சார்.''

''நீ என்னடா சொன்னே முண்டம்?''

''நீங்க சொல்லிக் குடுத்த மாதிரியே ஒண்ணுக்குப் போகறதாச் சொல்லிட்டேன் சார்.''

அதற்கு மேல் தாங்க முடியாமல் உள்ளே நுழைந்தார் தலைமை ஆசிரியர்.

திடீரென அவரைப் பார்த்ததும் திகைத்த வேணு, உடனே சமாளித்துக் கொண்டு மழுப்பலாகச் சிரித்தார்.



தவிர்க்கக் கூடிய விபத்துக்கள்

போட்டி : 38

சாலையில் திருஷ்டி பூசணி உடைத்துவிடுகிறார்கள். அதிலே ஒரு ஸ்கூட்டர் ஏறிச் சறுக்கிவிட்டுப் பயணிக்குக் காயம் படுகிறது. பூசணி உடைத்தவர் வருந்துகிறார். சமையலறையில் புடவை தீப் பற்றிவிடத் தீப்புண்ணுக்குச் சிகிச்சை பெறும் போதுதான் தோன்றுகிறது. நைலான் புடவையைக் கட்டிக் கொண்டு சமையல் செய்திருக்க வேண்டாமே என்று. இப்படித் தவிர்த்திருக்கக் கூடிய விபத்துக்கள் பற்றிக் காலம் கடந்த ஞானோதயம் உங்களுக்கோ, உங்கள் நண்பர், உறவினருக்கோ நிச்சயம் ஏற்பட்டிருக்கும். அது பற்றிக் கீழேயுள்ள வெற்றிடத்தில் சுருக்கமாக எழுதி, இந்த அரைப்பக்கத்தையும் முழுமையாகக் கத்தரித்து அனுப்புங்கள். பிறருக்கு எச்சரிக்கையாக அமையும். பிரசுரமானால் பரிசு. தவிர, குலுக்கல் முறையில் ஒருவருக்கு வி.ஐ.பி. ஸூட்கேஸ். உறையின் மேல் 'தவிர்க்கக் கூடிய விபத்துக்கள்' என்று கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

முடிவு தேதி : 3.2.86.

இன்னும் பாக்கியிருப்பது பதினைந்தே வி.ஐ.பி. ஸூட்கேஸ்கள்தான்! அவற்றில் ஒன்றைப் பெறும் வாய்ப்பைத் தவற விடாதீர்கள். வாரந்தோறும் போட்டிகளில் பங்கு பெறுங்கள்.

வி.ஐ.பி. ஸூட்கேஸ் பரிசுத் திட்டம்

என் பெயர்: ....

விலாசம்: ....

....

"காப்பி சாப்பிடறீங்களா சார்? சூடா இருக்கு" என்று கூறி அந்தச் செம்பைக் காட்டினார் வேணு.

சினத்தை அடக்கிக் கொண்டார் தலைமை ஆசிரியர்.

"என்னை ரூம்லே வந்து பாருங்க." என்று மட்டும் கூறிவிட்டு வேகமாக வந்துவிட்டார்.

கொஞ்ச நேரத்தில் தலைமை ஆசிரியரின் அறைக்குள் அலட்சியமாக நுழைந்தார் வேணு.

"என்ன சார் விஷயம்?" என்று கேட்டார் எதுவுமே நடக்காதது போல.

கோபத்தை வெளிக் காட்டாமல் பேசினார் தலைமை ஆசிரியர். "நீங்க செய்தது சரியா மிஸ்டர் வேணு? பிள்ளைகளுக்கு நல்லதைச் சொல்லித் தரத்தான் இந்தப் பள்ளிக்கூடம் இருக்கு. அவங்களுக்கு அறிவை வளர்க்கறது மட்டும் நம்ம வேலையில்லே. நல்ல குணங்களைப் பழக்கறதும் நம்ம கடமைதான். மற்ற இடத்துல மனிதர்கள் எப்படியும் இருக்கலாம் சார். ஏன்னா, அது அவங்க சுய விருப்பம். மேலும் சொந்தமா கெட்டுப் போக வெளியுலகத்துல நிறையச் சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் காத்திருக்குது. ஆனா, இங்கே சுயமாகக் கெட்டுப் போக வழியில்லே; இருக்கவும் கூடாது. ஏன்னா, இது பள்ளிக்கூடம். தூய்மையான சிந்தனைகளுக்கும், எண்ணங்களுக்கும் மட்டும்தான் இங்க அனுமதி. அதைப் போதிக்க மட்டும்தான் நமக்கு உரிமையுண்டு."

"இப்ப நான் என்ன சார் பெரிய தப்புச் செய்திட்டேன்?"

"நான் அப்படிச் சொல்லலையே. உங்களோட ஸ்டூடண்டுக்கு உங்களுக்கு உதவி செய்ய விருப்பம் இருந்தா, அதைத் தட்டிக் கேட்க எனக்கு உரிமையில்லே. ஆனா, தவறான வழிமுறைகளை அவங்களிடம் கையாளறதும், தப்பான சிந்தனைகளை அவங்க மனசில தூண்டிவிடறதும் பெரிய குற்றம், தெரியுமா?"

"இப்ப என்ன செய்யணும் நான்? உங்க கிட்ட மன்னிப்புக் கேட்கணும் அவ்வளவு தானே?"

"அது எனக்கு அவசியமில்லே மிஸ்டர் வேணு. மாணவர்களுக்கு பொது நலத்தைப் பற்றி போதிக்கலேன்னாலும் பரவாயில்லே. ஆனா, சுயநலத்துக்காக அவங்களை பாழாக்கிடாதீங்க. கெட்ட பழக்கங்களை உண்டாக்கற இடமில்லே இது. இது பள்ளிக்கூடம். புனிதமான இடம். போர்டு எழுதி வைக்கலேன்னாலும், இது ஒரு தூய்மைப் பகுதி. இடத்தாலே மட்டுமில்லே, மனத்தாலேயும் தான். அதை நீங்க உணர்ந்தால் போதும். சரி, நீங்க போகலாம்." உருக்கமாகக் கூறினார் தலைமை ஆசிரியர்.

வேகமாக வெளியேறிய வேணு ஆசிரியரின் உதடுகள் வெறுப்புடன் முணுமுணுத்தன. "பெரிய அரிச்சந்திரன்னு நெனைப்பு உனக்கு! த்தூ...."

25. பிழைக்கத் தெரியவில்லை!

காலையில் பார்வதி இரண்டு முறை வந்து பார்த்துவிட்டுச் சென்றாள். சந்திரசூடன் விழிக்கவில்லை. விடிந்து வெகு நேரத்திற்குப் பிறகுதான் கண் விழித்தார். விழித்த உடன் அவருடைய பார்வை அறையின் மூலையை நோக்கித் திரும்பியது. எரிந்த காகிதங்களின் சாம்பல், மூலையில் கறுப்பாகக் கிடந்தது. அதைப் பார்த்தபடியே படுத்துக் கிடந்தார். மனத்தில் உற்சாகமில்லை.

இவளைப் பற்றி எழுத முனைந்ததைவிட சக்திசிவத்தின் வரலாற்றை எழுதத் தொடங்கியிருக்கலாம் என்று எண்ணினார். சக்தி சிவத்தை எண்ணியதுமே உள்ளத்தில் ஆனந்தம் பொங்குவதை உணர்ந்தார்.

ஓ....! மரணத்தை எவ்வளவு சர்வ சாதாரணமாக ஏற்றிருக்கிறார்! மரணத்தைக் கூடத் தம் ஆதிக்கத்தில் அல்லவா வைத்திருந்திருக்கிறார்! நினைக்க நினைக்கப் பிரமிப்பாயிருந்தது. இந்த மரணத்தைப் பற்றி மனிதன் எண்ணி எண்ணி மாய்வதை நினைத்துப் பார்த்தார்.

மனிதன் ஒருவன்தான் இது பற்றிய நினைவில் அல்லற்படுகிறான். உலகத்தில் வேறு எந்த ஜீவராசியும் இப்படிப் பயந்து நடுங்குவதில்லை. ஒவ்வொரு கணத்தையும் வாழ்க்கையாக்கி அனுபவிக்கிறது.

இவருடைய பக்தியையும், காதலையும், சமாதி நிலையையும், லீலைகளையும் பற்றி எழுதினாலாவது மனத்திற்கு ஆனந்தமாயிருக்கும். ஒரு கவர்ச்சி நடிகையைப் பற்றி எழுதி என்ன கண்டேன்? உயர்ந்த லட்சியம் ஏதுமில்லாது உடலைக் காட்டிப் பரபரப்பூட்டிய ஒரு கவர்ச்சி நடிகை, கடைசியில் தான் கிழவியாவதைக் காணச் சகியாமல் தற்கொலை செய்து கொண்ட வரலாறுதானா எனக்குக் கிடைத்தது....

சந்திரசூடன், மூலையில் கிடந்த சாம்பலைப் பார்த்தார். வெறுப்பினால் முகத்தைச் சுளித்தார். இந்திராணியைப் பற்றிய நினைவு மீண்டும் குமைந்தது. அவளுடைய வரலாற்றில் பாதிக்கு மேல் எழுதிவிட்டார்.

இந்த நூற்றாண்டின் சினிமா உலகில் ஒரு சகாப்தத்தை ஏற்படுத்தியவளின் வரலாறு. அந்த சகாப்தம் எவ்வளவு இழிவானது.



ர. சு. நல்லபெருமாள்

உணர்வுகள் உறங்குவதில்லை

மக்களின் மனத்தையும் அறிவையும் உயர்த்துவதைவிட்டு, வெறும் காம வெறியைத் தூண்டிய சகாப்தம். ஓர் இருண்ட ஆபாசமான சகாப்தம். இதில் அகப்பட்டு, இளைஞர்களின் உள்ளங்கள் திக்குமுக்காடித் திணறிவிட்டன. சிலபைத்தியங்கள் அவளுக்காகத் தற்கொலை செய்து கொண்டார்கள். அவளுடைய ஆதிக்கம் பிரமிப்பூட்டுவதாய்த்தானிருந்தது.


இவற்றைப் பற்றி எழுதியதுவரை தீயிட்டுக் கொளுத்தியாகிவிட்டது. அதோ அந்த மூலையில் கருகிச் சாம்பலாகிக் கிடக்கிறது. இந்தப் புத்தகத்தை எத்தனையோ பேர் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்— மாதவிப் பதிப்பகம் செட்டியார், சம்பத், பத்திரிகை அதிபர், லட்சக் கணக்கான வாசகர்கள் — அத்தனை பேர்களுடைய எதிர்பார்ப்புக்கள் இங்கே எரிந்து முடிந்துவிட்டன.

காலையில் பார்வதி மாடிக்கு வந்தபோது, காகிதச் சாம்பலைப் பார்த்துவிட்டுக் கேட்டாள்.

அவருடைய பதிலைக் கேட்டுத் திகைத்து நின்றுவிட்டாள். அவளுடைய வருத்தமெல்லாம், அவருக்குப் பணம் நஷ்டமாகிவிட்டதே என்பதைப் பற்றித்தான்.

"என்ன மலைத்து நின்றுவிட்டாய்? வெறும் குப்பையை எரித்துவிட்டேன். இந்தக் குப்பை எனக்கு நல்ல விலைக்குப் போவதாக இருந்தது. வைரத்தை விற்று நல்ல விலை கிடைத்தால் பெருமை. குப்பையை விற்று என்ன பெருமையை அடைய முடியும்?" என்று அவர் அவளைச் சமாதானப்படுத்த முனைந்தபோது அவள் "குப்பையை விற்றாலும் கிடைப்பது காசுதானே?" என்றாள். அவள் குரலில் தொனித்த கடுமையை அவர் உணர்ந்தார்.

பைத்தியக்காரத்தனமாக எரித்துவிட்டாயே என்று அவரைக் குற்றம் சாட்டுவது



போலிருந்தது. அவனுடைய குரல்.

அவர் சிரித்தார். ''வியாபாரம் கண்ணிய மானதாயிருக்க வேண்டும். சாராயமும் கஞ்சாவும் விற்றாலும் பணம் வரும். அந்த மாதிரி ஈனத் தொழிலில் எனக்குப் பணம் வேண்டாம்'' என்று சிரித்தார்.

''நிழல் பத்திரிகையை நடத்த பணத்திற் காக இந்தப் புத்தகத்தை நம்பியிருந்தீர் களோ?'' என்றான். அவன் குரலில் பரிதாபம் தொனித்தது.

''பத்திரிகையின் பெயரும் நிழல்தானே. என் நம்பிக்கையும் நிழல் மாதிரி மறைந்து விட்டது'' என்று சிரித்தார்.

ஓ.....! இவ்வளவு நஷ்டத்திலும் இவரால் எப்படிச் சிரிக்க முடிகிறது? எழுதியது அனைத்தையும் ஒரு நொடியில் எரித்துவிட் டாரே! எப்படி மனம் வந்தது? பார்வதிக்கு வியப்புத் தாளவில்லை.

சம்பத் அவரைத் தேடி வந்தபோது பார்வதி, கீழே இருந்தாள். சம்பத்தைக் கண்டதுமே பெரிய சண்டை நிகழப் போகிறது என்பதை ஊகித்துக்கொண்டாள். அவள் எதிர்பார்த்தபடியே மாடியில் சம்பத் கூக்குரலிட்டார்.

''டேய், உன்னுடைய திமிர் உன்னை விட்டு எங்கே போகப் போகிறது? லட்ச ரூபாய் வருமானத்தை இழந்துவிட்டாய்'' என்றார் சம்பத்.

''வருமானத்தைத்தானே? என் சுய மரி யாதையை இல்லையே?''

''என்ன மரியாதை குறைந்துவிடப் போகிறது? அவள் கொடி கட்டிப் பறந்த வள். நீ பெரிய எழுத்தாளன் என்று பேர் வாங்கியிருக்கிறாயே; அவளுக்குள்ள புகழ் உனக்கு உண்டா? அவளைப் பற்றி ஒரு குக் கிராமத்தில்கேட்டால்ஒருமாடுமேய்ப்பவன் கூட அவளைப் பற்றிச் சொல்வான்.''

''என்னைப் பற்றி மாடு மேய்ப்பவன் புகழ வேண்டாம். நாலு அறிவாளிகள் சொன்னால் போதும்டா.''

''மூணு பேர் அவள் செத்ததைக் கேட்ட தும் தற்கொலை செய்து கொண்டார்கள் தெரியுமா?''

''அவர்களைப் போன்ற மூடப் பைத்தியங் கள் படிப்பதற்காக நான் எழுதத் தயாரா யில்லை.''

''செட்டியாரிடம் அட்வான்சாகப் பதினா யிரம் வாங்கிக் கொடுத்தேனே; பணம் வாங்கிய கடமைக்காகவாவது எழுத வேண் டாமா?''

''செட்டியாருக்கு இரவிலேயே பதினாயி ரத்திற்கு செக் எழுதி வைத்துவிட்டேனே. மேஜை மீது கிடக்கிறது பார். எடுத்துக் கொண்டு போய் கொடு.''

''உன்னுடைய பத்திரிகை முதலாளிக்கு என்ன பதில் சொல்லப் போகிறாய்? இந்தப் புத்தகம் பற்றிப் பிரமாதமாக விளம்பரம் வேறு செய்துவிட்டாரே? இந்த விஷயம் தெரிந்தால் உன்னைப் பத்திரிகை அலுவலகத் திற்குள்ளேயே விடமாட்டார். விரட்டியடித்து விடுவார்'' என்றார் சம்பத் கோபத்துடன்.


சந்திரசூடன் சிரித்தார். ''அதோ மேஜை யில் கிடக்கிறது பார் ராஜினாமாக் கடிதம். அதையும் எடுத்துக் கொண்டு போ. முத லாளியிடம் கொடுத்துவிடு'' என்றார்.

''அடப் பாவி! எல்லாவற்றிற்கும் தயா ராகிவிட்டாயா?''

''டேய், இந்த வியாபாரிகளைப் பற்றி எனக்குத் தெரியும்டா. இவர்களுக்குப் பணந் தான் தெய்வம். மனிதனுடைய சுய மரியாதை யையோ, லட்சியத்தையோ பற்றி இவர் களுக்கு அக்கறை கிடையாது. என் மீது இவர்களுக்கு எழப் போகும் கோபம் எனக்குப் புரிகிறது. அதனால்தான் செட்டி யாருக்கு ஒரு செக்கும், என் முதலாளிக்கு ராஜினாமாக் கடிதமும் எழுதி வைத்துவிட் டுத்தான் இரவில் படுத்தேன்'' என்றார் சந்திரசூடன்.

திகைப்புற்ற சம்பத், மேற்கொண்டு பேச முடியாமல் பொருமினார். சந்திரசூடன் சொன்னார்: ''என் கவலையெல்லாம் உன் னைப் பற்றித்தான். இந்தப் புத்தகத்தின் மூலம் நீ எதிர்பார்த்திருந்த வருமானம் உனக்குக் கிட்டாமல் போய்விட்டது.''

''எவ்வளவோ எதிர்பார்த்திருந்தேன். செட்டியார் விற்பனையில் பாதி லாபம் தருவ தாக இருந்தார். எல்லாம் போச்சு'' என்று பெருமூச்சுவிட்டார் சம்பத். பிறகு சொன்னார். ''எல்லாவற்றிற்கும் மேலாக எனக்கு இன்னொரு ஆசை இருந்தது. நீ எழுதும் புத்தகத்தில் நான் எடுத்த புகைப் படங்களும் அச்சாகுமானால், எனக்கு எவ் வளவு புகழ் கிடைக்கும். எல்லாவற்றையும்



உண்மையான கைவிளக்கு எது?



நள்ளிரவில் நெடுந்தூரம் நடந்து செல்ல வேண்டும். சேர வேண்டிய இடம் கண்ணுக்குத் தெரிவதில்லை; கைவிளக்கு ஒன்று கைவசம் உண்டு. அது சில அடி தூரம்தான் வெளிச்சம் காட்டுகிறது. ஆயினும் அது போதுமானது. நாம் போகப் போக வெளிச்சமும் கூடவே வரும். அப்போதைக்கப்போது நாம் செய்ய வேண்டிய கடமையைச் சரிவரச் செய்தால், அது நல்ல முடிவுக்கு நம்மைக் கொண்டு சேர்க்கும். மனசாட்சி தான் நம்மிடையே உள்ள கைவிளக்கு. நேர்மையான வாழ்க்கையில் அது நம்மை நடத்திச் செல்லும்.

— சுவாமி சித்பவானந்தரின், "தினசரி தியானம்" என்ற நூலில் இருந்து.

— எஸ். ஏ. கோவிந்தகுமார்.

ஒரு நொடியில் கெடுத்துவிட்டாய்.''

சம்பத்தைப் பரிதாபத்துடன் பார்த்தார் சந்திரசூடன். ''இந்திராணியைவிட நீ குறைந்தவனில்லை. உன்னுடைய திறமையால்தான்டா அவளுடைய புகழே பரவத் தொடங்கியது'' என்று அவரைச் சமாதானப்படுத்த முயன்றார்.

ஆனால் சம்பத்தோ பெரும் நஷ்டம் ஏற்பட்டுவிட்டதாக வெகு நேரம் புலம்பிக் கொண்டிருந்தார். புறப்பட்டுப் போன போது ''டேய், நீ பிழைக்கத் தெரியாதவன்டா'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

அவர் சென்றதும் பார்வதி மாடிக்குச் சென்றாள். ''அவர் கோபத்தோடு போகிறாரே'' என்றாள்.

''பாவம், அவனுக்கு வருமானம் போய் விட்டது என்ற வருத்தம்.''

''உங்களைப் பார்த்தால்தான் பாவமாயிருக்கிறது'' என்றாள் பார்வதி.

சந்திரசூடன் திகைப்புற்று அவளைப் பார்த்தார்.

''வேலையையும் ராஜிநாமாச் செய்துவிட்டீர்கள்'' என்றாள்.

''பத்திரிகை முதலாளி என்னை இனி வேலையில் வைத்துக் கொள்ள மாட்டார். அவர் என்னை நீக்குமுன்பே நானே ராஜிநாமா செய்துவிட்டேன்''.

''இனி என்ன செய்வதாக எண்ணியிருக்கிறீர்கள்?''

''வேறு எத்தனையோ பத்திரிகைகள் இருக்கின்றன. நான் இந்தப் பத்திரிகையிலிருந்து விலகிவிட்ட செய்தியை அறிந்ததும் பல பத்திரிகைகளிலிருந்து எனக்கு அழைப்பு வரும்.''

''எந்தப் பத்திரிகையில் பணி புரிந்தாலும், உங்கள் சுதந்திரம் பாதிக்கப்படத்தானே செய்யும்?''

''என்னுடைய சுதந்திரத்தை இழக்க மாட்டேன்.''

''இழக்க நேரிடும் கட்டம் வரலாம். இப்போது வரவில்லையா?''

''அப்படி வரும்போது பார்த்துக்கொள்ளலாம்'' என்றார் சந்திரசூடன்.

''வேறு ஒரு பத்திரிகையில் போய் வேலை செய்வானேன். சுதந்திரமாக நீங்களே சொந்தமாக ஒரு பத்திரிகையைத் தொடங்க வாய்ப்புக் கிடைத்தது. விட்டு விட்டீர்கள்.''

''எதைச் சொல்கிறாய்?''

''இந்திராணியின் வரலாற்றைத்தான். அதற்குப் பணம் கிடைத்திருக்கும். முழுவதையும் எழுதியிருந்திருக்கலாம்.''

''முழுவதையும் எழுதி முடித்துப் பிறகு எரித்திருக்கலாம் என்கிறாயோ?'' என்று கேட்டுச் சிரித்தார்.

''அவளுடைய கதை நன்றாகத்தானிருந்தது. உங்களுடைய எழுத்துத் திறமையின் உச்ச நிலையே அதில் தெரிந்தது. அந்தப் புத்தகம் வெளி வருமானால் உங்களுடைய மிகச் சிறந்த எழுத்து அதுவாகத்தானிருக்கும்.''

''அப்படியிருக்குமானால் நான் எரித்தது தான் நல்லது.''

''ஏன்?''

''என்னுடைய சிறந்த எழுத்து, ஒரு சினிமாக்காரியின் கவர்ச்சியைப் பற்றியதாக இருக்கக் கூடாது. நாளை, தமிழ் இலக்கியத்தைப் பற்றி ஆராய்பவன், என்னுடைய எழுத்தின் வீழ்ச்சியாக இந்தப் புத்தகத்தைச் சுட்டிக் காட்டுவான்.''

''எப்படியோ வாசகர்களுக்கு ஒரு ரசமான புத்தகம் கிடைக்காமல் போய்விட்டது'' என்று கூறிவிட்டுச் சென்றாள் பார்வதி.

சந்திரசூடன் வெற்றிலைச் செல்லத்தை எடுத்து மடி மீது வைத்துக் கொண்டு சுவாரஸ்யமாக வெற்றிலை போடத் தொடங்கினார்.

அறையின் மூலையில் இந்திராணியின் சாம்பல் காற்றில் பறந்தது.

(தொடரும்)



திருட்டுக்



கதை பிறந்த கதை

பெங்களூரில் கல்லூரி விடுதியில் தங்கிப் படித்துக் கொண்டிருந்த சமயம், என் அறையில் பெட்டியில் வைத்திருந்த நூறு ரூபாய் களவு போய்விட்டது. எவ்வளவு தேடியும் கிடைக்கவில்லை. வருந்திப் பயனில்லை என்று என்னையே தேற்றிக் கொண்டு அந்த அனுபவத்தையே கதையாக்கி ஒரு கன்னடப் பத்திரிகைக்கு எழுதி அனுப்பினேன். அது பிரசுரமாகி, நான் எழுதிய முதல் கதையாக அமைந்துவிட்டது! எனக்கு ஏக குஷி தான்!

— ஆனந்த், மேட்டுப்பாளையம்.



பாட்டியின் வீரம்!

அதிகாலை ஆறு மணி இருக்கும். சரியாகக் கண் தெரியாத எங்கள் பாட்டி கொல்லைப் புறம் சென்றார். கொல்லையில் இருந்த விளா மரத்தில் காய்த்துத் தொங்கிய விளாங்காய்களைப் பறிக்க வந்த திருடன் மீது தடுக்கி விழப்போனவர், அவன் வந்த காரணத்தைப் புரிந்து கொண்டு, 'மரத்தில் உள்ளவை யாவும் காய்கள் என்றும், 'வீட்டில் பழங்கள் உள்ள' தாகவும் கூறி, அவனை உள்ளே கூட்டி வந்து பழங்களைத் தந்து உபசரித்து, வாசல் வழியே அனுப்பி வைத்தார்!

— எஸ். பிரகாஷ், திருவண்ணாமலை.

அனாவசியமாகப் பொல்லாப்பு!

சின்னஞ்சிறு தங்கைப் 'பாப்பா'வை என்னிடம் ஒப்படைத்துவிட்டுக் கண் மூடிவிட்டார் என் தாயார். அவளை வளர்த்து ஆளாக்கி, அவளுக்குத் திருமணமும் நிச்சயித்தேன். அம்மாவின் நகைகளையெல்லாம் அவளுக்குத்தான் கொடுத்தேன். அவள் சிறு வயதில் அணிந்திருந்த ஒரு சங்கிலியை மட்டும் பிறகு கொடுக்கலாம் என்று நிறுத்தி வைத்துக் கொண்டேன். அந்தச் சங்கிலி





வாசகர் பங்கு

கொடுத்த அனுபவம்

தொலைந்து போய்விட்டது! அவள் புக்ககத்தார் என் மீதே திருட்டுப் பழி சுமத்த, நான் பட்ட பாட்டைச் சொல்லி முடியாது. இருபது ஆண்டுகளுக்குப் பிறகுதான் அவர்கள் என்னை நம்பி, உண்மையைப் புரிந்து கொண்டார்கள்.

— வி. எஸ். எல். நரசிம்மன், சென்னை—40.

'காவல் நிலையமா? திருட்டு நிலையமா?

என் புத்தம் புது சைக்கிளைக் காணவில்லை என்று போலீஸில் புகார் செய்தேன். ஆறு மாதங்கள் கழித்து, சைக்கிள் கிடைத்துவிட்டதாகத் தகவல் வந்ததும் காவல் நிலையம் சென்றேன். அங்கு என் சைக்கிளின் 'டைனமோ'வைக் கழற்றிக் கொண்டிருந்தார் ஒரு போலீஸ்காரர். "சார்! அது என் சைக்கிள்!" என்று நான் அலறியதை அவர் துளியவது லட்சியம் செய்ய வேண்டுமே! அங்கு வரிசையாக நின்ற பல சைக்கிள்களைக் காண்பித்து "இவற்றிலிருந்து உனக்கு எந்தப் 'பார்ட்டு' தேவையோ, கழற்றி எடுத்துக் கொள்" என்று கூசாமல் சொன்னார்! நான் கல்லாய்ச் சமைந்து போனேன்.

—ஜே.எல். அரவிந்தன், அரிசிப்பாளையம்.

இப்படியும் ஒரு திருடன்!

முதல் முறையாக நான் பர்ஸைத் தவற விட்ட சமயம், வீட்டில் அடி வாங்காத குறைதான்! இரண்டு நாட்களுக்குப் பிறகு, தபாலில் திரும்பி வந்தது என் பர்ஸ்—பணத்துடன் தான்! உடன் இணைத்திருந்த கடிதத்தில் "என்னை மன்னிக்கவும். குருவாயூரப்பனுக்காக நீங்கள் வைத்திருந்த பணத்தை எடுத்துவிட்டேன். அதை என்னால் உபயோகிக்க முடியாது" என்று எழுதியிருந்தது! நான் பணத்தை ஒரு கவரில் போட்டு குருவாயூரப்பன் காணிக்கை என்று எழுதி வைத்திருந்ததன் விளைவு இது. குருவாயூரப்பனுக்கு நன்றி தெரிவித்தேன்.

— சுபஸ்ரீ, உடுமலைப்பேட்டை.

சிரிப்பதா; அழுவதா?

ஒருநாள் மாலைக் காட்சி சினிமா பார்த்துவிட்டுத் திரும்பிய நண்பர், வந்ததும் சாப்பிடுவதற்காகத் தயாராக வைத்திருந்த தோசைகளில் பாதிக்கு மேல் காணாமல் திகைத்தார். புழக்கடைக் கதவு திறந்திருக்கக் கண்டு வெளியே போய்ப் பார்த்தார். அங்கு சிமெண்ட் தரையில் அடுப்புக் கரித் துண்டத்தால் எழுதப்பட்டிருந்தது: "மிளகாய்ப் பொடி தீர்ந்துவிட்டதால் தோசைகளை மிச்சம் வைத்துள்ளேன்." கோபத்தினிடையே சிரிப்பும் வந்தது நண்பருக்கு. வேறு வழியின்றி உப்புமா தயாரித்துச் சாப்பிட்டுவிட்டு உடனே புழக்கடைக் கதவை சரி செய்யவும் முற்பட்டார்.

— ஜி. என். மேரி மைக்கின், சென்னை—19

திருடன் நிச்சயித்த கல்யாணம்

காஞ்சிபுரத்தில் என் நண்பருக்கும் பக்கத்து வீட்டுப் பெண்ணுக்கும் பல வருடங்களாகக் காதல். இருவரும் பெற்றோருக்குப் பயந்து கொண்டு ரகசியமாய்க் கடிதங்கள் பரிமாறிக் கொண்டனர். நண்பனின் போட்டோவுடன் கடிதங்களையும் பெட்டியில் வைத்துப் பூட்டி, பீரோவின்மேல் பத்திரப்படுத்தி வந்தாள் அப்பெண். பல பொருள்களுடன் அந்தப் பெட்டியும் களவாடப்பட்டது. போலீஸ் ஸ்டேஷனில் பெட்டி திறக்கப்பட்டது.... இன்ஸ்பெக்டர் நிலைமையை உணர்ந்து, பெற்றோரிடம் பேசி, திருமணத்தை நடத்தி வைத்தார்!

— வி.கே. பாலசுப்ரமணியன், திருப்பரங்குன்றம்.

திருட்டால் விளைந்த நன்மை

மதுப் பழக்கத்திற்கு அடிமையாக இருந்த என்னைப் பலமுறை திருத்த முயன்று தோல்வியே கண்டாள் என் மனைவி. ஒருமுறை என்னிடம் வீட்டை ஒப்படைத்துவிட்டு அவள் பிறந்தகம் சென்றபோது, நான் நன்றாகக் குடித்துவிட்டேன். மறுநாள் சுய நிலைக்கு வந்த பிறகு, வீட்டில் எல்லாப் பொருள்களும் திருட்டுப் போயிருப்பது கண்டு அதிர்ந்தேன். வீடு திரும்பிய மனைவியின் அழுகை என் குற்ற உணர்வைப் பன்மடங்காக்கியது. அன்று முதல் விட்டுத் தொலைத்தேன் குடிப்பதை.

— ஆர். மணி, மதுரை—3.

புண்பட்ட பிஞ்சு மனம்

நான் ஏழாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது சக மாணவி ஒருத்தியின் தங்கச் சங்கிலி டாலர் காணாமல் போய்விட்டது. ஜெயா என்ற மற்றொரு மாணவி மீது அபாண்டமாகத் திருட்டுப் பழி சுமத்தப்பட்டது. அவள் அவமானம் தாளாமல் பூச்சி மருந்தைச் சாப்பிட்டுத் தற்கொலை செய்து கொண்டுவிட்டாள். ஒரு வாரம் கழித்து வீட்டிலேயே டாலர் கிடைத்துவிட்டது என்று சஞ்சலமில்லாமல் அதை அணிந்து வந்தாள் தொலைத்தவள்! அந்தப் பெண் இன்று ஒரு டாக்டர்! ஜெயாவின் தந்தை எழுதிய உருக்கமான கடிதத்தைப் படித்துவிட்டு என் ஆசிரியை கதறியதை என்னால் மறக்கவே முடியாது.

— ராகினி, திண்டுக்கல்—1.

மலை அழுதால் மழை பொழியும்!



தூரக்கிழக்கிலுள்ள பாக்கலாசா என்ற மலை, திடீரென்று கண்ணீர்விட்டு அழும்! இது அழத் தொடங்கிவிட்டால், அங்கிருக்கும் மக்கள், 'மழை வரப் போகிறது' என்பார்கள். அதன்படியே மழையும் கொட்டும். இந்த அதிசய மலை, நீர் உறிஞ்சும் பாறைகளால் ஆனது. காற்றில் ஈரப்பசை அதிகரிக்கும்பொழுது, காற்றிலுள்ள ஈரத்தை இந்தப் பாறைகள் உறிஞ்சிக் கொள்வதால், மலையின் மீது நீர்த்துளிகள் படர்ந்து காணப்படும். அதனால் இம்மலையே 'அழுகிற மலை' எனப்படுகிறது.

— தகவல்: ரெங்கம்.

என்ன மனிதர்கள்!

மார்கழி மாதம் விடியற்காலையில் வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்த வயதான அம்மாளின் கழுத்திலிருந்து தாலியைப் பிடுங்கிச் சென்றுவிட்டான் ஒரு திருடன். அவர் ''ஐயோ! என் தாலி போச்சே!'' என்று பலமுறை கத்தியும் அக்கம்பக்கத்திலிருந்து யாரும் உதவிக்கு வரவில்லை. அவர் கத்தியது காதில் விழுந்த போதிலும் அவர் கூறிய சொற்களைக் கொண்டு அவருடைய கணவர் இறந்துவிட்டார் என்றே எண்ணினார்களாம்! அதனால் மெதுவாகக் காப்பி குடித்துவிட்டு வந்து பார்த்தார்களாம்! இந்த விளக்கம் சொன்ன சிலரைக் கண்டு 'என்னே உலகம்' என்று வியந்து போனேன்!

— அலமேலு ராமன், சென்னை — 20.

காப்பாற்றிய ஆர்மோனியம்!

என் அக்கா வீட்டில், உள் அறையில் ஒரு ஆர்மோனியம் இருக்கிறது. நள்ளிரவில் வந்த திருடன் அதை ஏதோ விலையுயர்ந்த பொருள்கள் நிறைந்த பெட்டி என்று நினைத்து, திறக்க முற்படவும் 'டொய்ங்' என்று பெரிதாக ஒலி கிளம்பியது. அலறி ஓடிவிட்டான் திருடன். மற்ற எல்லாச் சாமான்களும் பிழைத்தன.

— ஆர். சுலோசனா, திருநெல்வேலி.

மனுஷியா? அரக்கியா?

நெல்லையில் நாங்கள் வசித்தபோது பக்கத்து வீட்டுப் பெண் இரவு தூங்கும்போது தலையணைக்கடியில் கழற்றி வைத்த சங்கிலி காணாமல் போனதும் வீட்டில் வேலை செய்த சிறுமி மேல் சந்தேகப்பட்டாள். தான் அதை எடுக்கவில்லை என்று அந்தச் சிறுமி எவ்வளவு சொல்லியும் கேளாமல், அவளை அடித்து உதைத்துக் கொதிக்கும் எண்ணெயில் அவள் கையை முக்கச் செய்து..... அரக்கத்தனமாக நடந்து கொண்டாள். இத்தனைக்கும் பிறகு, எலி வளைக்கு அருகில் கண்டெடுக்கப்பட்டது அந்தச் சங்கிலி.

— ராதி, சென்னை — 39.

'பாவம்' என்று பார்த்தால்.....

பணியாற்றும் பெண்கள் விடுதியில் தங்கியிருந்த சமயம். நெருங்கிய உறவினரின் திருமணத்துக்காகச் சென்னையிலிருந்து வந்திருந்த நிறைமாதகர்ப்பிணி ஒருத்தி வார்டனிடம் வந்து விடுதியில் இரண்டு நாட்கள் தங்க அனுமதி கேட்டாள். எங்கள் வார்டன் மறுத்த போது, தோழிகளும் நானும்தான் அவளுக்குச் சிபாரிசு செய்து அனுமதி வாங்கித் தந்தோம். அடுத்த நாள் மாலை நாங்கள் நன்றாக ஏமாந்து போனது தெரிந்து போயிற்று. அவள் உண்மையான கர்ப்பிணியே அல்ல! அவள் வயிற்றில் கட்டி வந்த துணி மூட்டையை பாத்ரூமில் எடுத்துப் போட்டுவிட்டு, அதற்குப் பதில் எங்கள் அறைகளிலிருந்து திருடிய விலையுயர்ந்த புடவைகளையும் டிரான்ஸிஸ்டரையும் வயிற்றில் கட்டிக் கொண்டு கம்பி நீட்டிவிட்டிருந்தாள்!

— டி. பழனியம்மாள், வேலூர் (சேலம்)

புளோப்ளாஸ்ட் வழங்கும் வி.ஐ.பி. ஸூட்கேஸைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறுபவர்:

எஸ். பிரகாஷ்,
1, ஐயங்குளம் அக்கிரஹாரம்,
திருவண்ணாமலை 606 601.

கிழக்கே ஓர் உலகம்



பாங்காக் குடியிருப்புக்கள்.



பாங்காக் விமான நிலையம்.



பாங்காக் சாலை.

2. இதன் பெயர் ஜனநாயகம்!

விமான நிலையத்திலிருந்து பாங்காக் நகரத்துக்குச் செல்லும் இருபத்தி ஐந்து கிலோ மீட்டர் பாதை சீராக வழுக்கிக் கொண்டு போயிற்று. பயணத்தின் சுகம் பாதையின் சிறினலா, அல்லது அவருடைய மர்ஸிடீஸ் பென்ஸினலா என்று கேட்டதற்கு, "நல்ல ரோடுதான் காரணம்" என்றார் ரங்கராஜன்.

"தாய்லாந்தியர் மிகச் சுறுசுறுப்பானவர்கள். மிகக் கச்சிதமாக வேலை செய்பவர்கள்" என்றார். "அவர்களது கட்டிட வேலையில் ஓர் அப்பழுக்கு சொல்ல முடியாது. 'ஏன் வேலையை முடிக்கவில்லை?' எனகிற கேள்வியே எழாது! ஏனென்றால் சொன்ன நேரத்துக்குமுன்பே முடித்துவிடும் சுறுசுறுப்பு இவர்களுடையது."

ரங்கராஜன் ஒரு சிவில் இன்ஜினியர். இந்தியாவில் C.P.W.D.யில் முன்பு வேலை பார்த்தவர். எனவே அவருடைய கணிப்பு சரியானதாகத்தான் இருக்கும்.

"ஆறு மாதங்களில் சுமார் 18 தளம் கொண்ட ஸ்கை ஸ்க்ரேப்பர் எழும் விந்தையை இங்கே பார்க்கலாம். அது மட்டுமில்லை. ஃபினிஷிங்கைப் பாருங்கள்! எத்தனை கச்சிதமாக இருக்கிறது! எத்தனை சுத்தமாக இருக்கிறது!

பிரதான சாலையின் இருமருங்கிலும் வானளாவிய கச்சிதமான பளபளக்கும் ஸ்கை ஸ்க்ரேப்பர்கள் தென்பட்டன.

"அமெரிக்கப் பணம் இங்கே...." என்று நான் முணுமுணுத்தேன்.

"அமெரிக்கப் பணமாயிருந்தால் என்ன? வேலை செய்பவர்கள் இவர்கள்தானே? நாம் உதவி பெறுவதில்லையா?"


"இங்கு மிலிட்டரி ரூல் வேறு" என்றேன் நான்.

"இதை முழுக்க மிலிட்டரி ரூல் என்று சொல்ல முடியாது. இந்தத் தேசத்து அரசியல் சற்று சிக்கலானது. ஜனநாயக ஆட்சி என்றுதான் இதைச் சொல்கிறார்கள்."

"எப்படி? ஆர்மி சீஃப் அல்லவா பிரதம மந்திரியாக இருக்கிறார்?"

"ராணுவத் தலைவர் இங்கு ஸெனேட்டின் (பாராளுமன்றம்) அங்கத்தினர் கூட. அரசர் அவரைப் பிரதமராக நியமனம் செய்து மந்திரி சபையைக் கூட்டச் சொல்லலாம். மந்திரி சபையில் எல்லா மந்திரிகளும் ராணுவத்தினர் அல்ல. பெரும்பான்மையாக முறையாகத் தேர்தலில் ஜெயித்தவர்களே."

"இங்கு ராணுவக் கோஷ்டிகள் நிறைய



ஏற்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேனே?''

''ஆமாம். அது நடக்கும். இங்கு ராணுவம் ரொம்பப் பலமுள்ளது. இங்கிருக்கும் நிலவரத்தைப் புரிந்து கொள்வது கொஞ்சம் கஷ்டம்தான். பிரிட்டனைப் போல் இங்கு அரசாட்சி உண்டு. ஆனால் இங்கு அரசரின் சொல்லுக்கு ஜனங்களிடையே ரொம்ப மதிப்பும் உண்டு. ஒரு ராணுவ கோஷ்டி பேர்ய் இன்னொரு கோஷ்டி பதவிக்கு வரும்போது அதை நடத்துபவர் சர்வ சாதாரணமாக அரசரிடம் நீளச் சென்று, ''நான் புதிதாக மந்திரி சபை கூட்டப் போகிறேன். உங்கள் ஆசி வேண்டும்'' என்று கும்பிடு போட்டுவிட்டால் காரியம் சுலபமாக முடிந்துவிடும். தன் பதவியையும் அந்தஸ்தையும் இவர்கள் மதிப்பார்கள் என்கிற கணிப்பில் அரசர் ஒப்புதல் தந்துவிட்டால் ஜனங்கள் பிறகு வாயைத் திறக்க மாட்டார்கள். இன்னொரு விஷயம். ராணுவம் இங்கு பலமானதாக இருப்பதால் அதற்கு ஓரளவுக்கு இணங்காவிட்டால் தேசத்தை ராணுவம் முழுவதுமாகக் கைப்பற்றி விடும் என்கிற பயமும் இருக்கும் அரசருக்கு.''

'பின் இதை எப்படி ஜனநாயகம் என்று சொல்லமுடியும்?' என்றுநான் குழம்பினேன். சரியான விடை கிடைக்காமலே அவர் வீட்டில் தூங்கிப் போனேன். ரங்கராஜன் ஆபீஸ் போய்விட்டுப் பிற்பகலில் திரும்பி வந்தார். உணவருந்தி முடிந்ததும், ''உங்களை கிராண்ட் பாலஸ்ஸின் வாசலில் இறக்கி விடுகிறேன். அதைச் சுற்றிப் பார்த்துவிட்டுச் சற்று நடந்து சென்றால் சயனித்திருக்கும் புத்தரின் கோவில் இருக்கிறது. இரண்டையும் பார்த்து முடிக்கக் குறைந்தது மூன்று மணி நேரம் ஆகும். பார்த்துவிட்டுத் தெருமுனையில் நில்லுங்கள். நான் ஆபீஸிலிருந்து திரும்பும் வழியில் உங்களை பிக் அப் செய்கிறேன்'' என்றார்.

பிரதான தெருக்களில் நிறையத் தெரிந்த எல்லா ராணுவப் பச்சை யூனிஃபார்ம் காரர்களும் வயசில் சின்னவர்களாக இருந்தார்கள்.

ஒருநாற்சந்தியைத்தாண்டும்போது, ''இது ஜனநாயகத்துக்காக எழுப்பப்பட்ட, ஞாபகார்த்தச் சின்னம்'' என்று நடுவில் உயரமாக இருந்த ஸ்தம்பத்தைக் காண்பித்தார் ரங்கராஜன்.

''ஓ! ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைத்து நினைவுச் சின்னமும் எழுப்பிவிட்டார்களாக்கும்'' என்று நான் சிரித்தேன். ''ஜனநாயகப் போர்வை போர்த்தியிருந்தாலும் இந்த ராணுவ ஆட்சி பொது ஜனங்களின் வாழ்க்கையைப் பாதிப்பதில்லையா? மக்கள் கிளர்ச்சி ஏதும் செய்வதில்லையா?''

''இல்லை. அவர்களுக்குப் பழகிப் போயிருக்க வேண்டும். இப்பொழுது இருக்கும் ஜெனரல் த்ரிசுலா நந்தா எல்லாரையும் விட அதிக வருஷங்களாக, ஐந்து வருஷங்களுக்கு மேலாக அதிகாரத்தில் இருந்து வருகிறார். நாளைக்கே இன்னொருத்தர் வந்தாலும் வரலாம்.''

''ஆட்சியில் இப்படிப்பட்ட நிச்சயமின்மை இருக்கும்போது அரசு நடத்துவதில் குழப்பமும் தடங்கல்களும் ஏற்படுவதில்லையோ?''

''ஒரு தடங்கலும் ஏற்படுவதில்லை. 'கூ' நடந்ததுகூடத் தெரியவராது. ஒரு கலாட்டா இருக்காது. அன்று அரண்மனைத் தெருவின் பக்கம் பொது ஜன வாகனங்களை விடமாட்டார்கள். இரண்டு மூன்று டாங்க்குகள் நின்றிருக்கும். அவ்வளவுதான். மறுநாளைக்கு நாளிதழைப் பார்த்து விவரம் தெரிந்துகொள்வோம்! ஆட்சியிலுள்ள ராணுவத் தளபதியின் கையெழுத்து மாறும். ஆனால் கொள்கைகள் மாறாது. காரியங்கள் ஏதும் நிற்காது.

''நம் தேசத்தில் தென்படும் மோசமான ஏழைமை இங்கு இல்லை. வேலையில்லாத் திண்டாட்டம் அத்தனை கடுமை இல்லை. கிட்டத்தட்ட எல்லா ஏழைகளும் ஏதாவது ஒரு சுய சம்பாத்தியத்தில் ஈடுபட்டு விடுகிறார்கள். பூ விற்பார்கள். கைவேலை செய்வார்கள்.''

''இங்கே தொழிலாளர் பிரச்னை ஒன்றும் இல்லையா?''

''இல்லை. வேலை நிறுத்தம் இங்கு சட்டப்படி அனுமதி இல்லை.''


'இது கட்டுப்பாடா பயமா' என்று நான் யோசிக்கையில் ரங்கராஜன் தொடர்ந்தார்:

''சில இடங்களில் எப்பொழுதாவது ஸ்ட்ரைக் என்று கேள்விப்படுவோம். உடனேயே அது அமுக்கப்பட்டுவிடும்.''

''இவர்கள் சொன்ன நேரத்திற்குள் வேலையை முடிப்பதற்கு இதுவும் காரணமாக இருக்கலாம்.''

''இருக்கலாம். இங்கு சராசரி புத்திசாலித்தனம் அதிகமில்லை. ஆனால் காரியத்தில் திறமையுள்ளவர்கள். சராசரி இந்தியன் அதிக புத்திசாலியாக இருந்தும் என்ன பிரயோஜனம்? சவுக்கடி கிடைத்தால்தானே

வாஸந்தி



* அரண்மனையின் இன்னொரு பகுதி.

அவனும் திறமையைக் காண்பிக்கிறான்..."

எமர்ஜென்ஸி நினைவில் நான் மௌன மானேன்.

இங்கு ராமா என்கிற பெயரில் நிறைய அரசர்கள் ஆண்டிருக்கிறார்கள். விமான நிலையத்திலிருந்து வரும்போது ஒரு பிரதான சாலைக்கு Rama V என்று பெயர். சமஸ்க்ருத பெயர் கொண்ட பல் வீதிகள் தென்பட்டன. சுகும்வித், பிராசான வித், ஷாலா சாந்திதம் இன்னும் பல. 'தாய்' என்றால் சுதந்திரம் என்று அர்த்தமாம்!

வெகு காலத்துக்கு ஹிந்து மதம்தான் தாய்லாந்தின் மதமாக இருந்திருக்கிறது. அசோகன் இந்த 'சுவர்ண பூமிக்கு இரண்டு குழுக்களை அனுப்பி புத்த மதத்தைப் பரவச் செய்தான். இன்றைக்கு புத்த மதமும் இஸ்லாமிய மதமும் இவர்களுடைய பிரதான மதங்கள். ஒரு காலத்தில் ஸம்ஸ்க்ருதம் அரசவையின் பாஷையாகவும் பாலி ஜனங்களின் பாஷையாகவும் இருந்திருக்கிறது.

ரங்கராஜன் ஒரு பிரும்மாண்ட வெள்ளைக் காம்பவுண்டுக்கெதிரில் என்னை இறக்கிவிட்டார்.

"இதுதான் அரண்மனை. இதற்குள் ஏகக் கட்டிடங்கள் உண்டு. இந்தக் காம்பவுண்டுக்குள்ளேயே அரண்மனைக் கோவில் இருக்கிறது. அதில்தான் பிரசித்தி பெற்ற மரகத புத்தரின் சிலை இருக்கிறது" என்றார்.

நான் நுழைவுக் கட்டணத்தைச் செலுத்தி டிக்கெட்டை வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்ததும் அந்த ஒரு மைல சதுரப் பரப்பில் தென்பட்ட பல்வேறு கட்டிடங்களைக் கண்டு பிரமித்துப் போனேன். இந்திர லோகத்தில் காலடி வைத்தாற்போல் தங்கமும் வெள்ளியுமாகக் கட்டிடங்கள் வெய்யிலில் பளபளத்தன. ஆலிவ் பச்சையில் நூறு அடிக்கு ஒரு மிலிட்டரிகாரர் நின்று இது தேவலோகமல்ல. தாய்லாந்துதான் என்று நினைவூட்டிக் கொண்டிருந்தார்.

அரசன் ராமா I னினால் 1782 ஆம் ஆண்டு இந்த அரண்மனை கட்டப்பட்டதாம். நம்ப முடியவில்லை. நேற்று கட்டப்பட்டதைப் போல் தும்பு தூசு இல்லாமல் பளபளவென்று இருந்தது. மிக நுணுக்கமான சித்திர வேலைப்பாடு. தங்க முலாம் பூச்சும், பதித்த கண்ணாடிச் சதுரங்களும் இடையே ஓடிய பச்சை சிவப்பு ரேக்குகளும் புத்தம் புதிதாக ஜொலித்தன. அநேக சின்ன இடுக்குகள் கொண்ட டிசைனில் துளித் தூசு இருக்க வேண்டுமே! நம் டூரிஸ்ட் டிபார்ட்மெண்ட்காரர்கள் பாங்காக்குக்கு ஒரு நடை வந்து பார்க்கட்டும் என்று நான் எண்ணிக் கொண்டேன். லக்னோவில் ஒரு சரித்திரப் புகழ் பெற்ற அரண்மனையைப் பார்க்கச் சென்று பாதத்திலும் உடையிலும் ஒட்டிக் கொண்ட தூசை ஜன்மத்திற்கு மறக்க முடியாது. தில்லி மாநகரத்திலும், பார்க்கப்பட வேண்டிய இடங்களில் அசுத்தத்துக்குக் குறைவே இல்லை.

கண்ணாடி போலப் பளபளக்கும் மியூஸியத்தையும், பௌத்த புராணங்களை விளக்கும் அற்புத ஓவியங்களையும் பார்த்துவிட்டு நான் அந்தக் கோட்டத்துள்ளேயே இருந்த மரகதப் புத்தர் கோவிலை அணுகினேன். 'இங்கே புகைப்படம் எடுப்பது சட்ட விரோதமானது' என்ற பெரிய ஆங்கில போர்டைப் பார்த்துச் சட்டென்று என் காமிராவைப் பைக்குள் நுழைத்தேன். பல பக்தர்கள் மண்டியிட்டு மௌனமாக வணங்கிக்கொண்டிருந்தார்கள். மிக உயரமான பீடத்தில் மரகத புத்தர் சாந்த ஸ்வரூபியாய்க் கீழ் நோக்கிய பார்வையுடன் வீற்றிருந்தார். அந்தப் பார்வையில் இருந்த காருண்யத்தை நான் எங்கும் கண்டதில்லை.


(தொடரும்)

பசிப்பிணி போக்கும் மூலிகை

குஜராத் மாநிலத்திலுள்ள ஜேகர் மலையில் ஒரு மூலிகை கிடைக்கிறது. 'காளியோ கண்டு' எனப்படும் இம்மூலிகையை ஒருவர் ஒருமுறை சாப்பிட்டால், அவருக்கு ஒரு வாரம் வரை பசியே தெரியாது. அம்மலையில் வாழும் சாமியார்களுக்கெல்லாம் இந்த அதிசய மூலிகை தான் உணவாகப் பயன்படுகின்றது.

— பீகார் மாநில மூலிகை ஆராய்ச்சிக் குழுத் தலைவர் ரசிக்லால் கூறியது.

— தகவல்: வீ. ரெங்கம்.



தலைவலி பலவகை உண்டு சிகிச்சை ஒன்றே ஒன்று!



சக்தி வாய்ந்த, நம்பகமான

அனாஸின்

உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும் வலி-நிவாரணி மருந்து, மிக அதிக அளவில் கொண்டது அனாஸின். எனவே தலைவலியில் இருந்து துரித நிவாரணம் பெற அனாஸின் ஒன்றே போதும்.

தலைவலியைத் தவிரவும், ஜலதோஷம், ஃப்ளூ, முதுகு வலி, தசை வலி மற்றும் பல் வலி ஆகியவற்றிற்கு நல்ல பலனளிக்கிறது.

பாதுகாப்பான ஃபாயில் உறையில்



சொல்லப்போனால் டாக்டரின் மருந்துதான்

அனாஸின்

இந்தியாவின் நம்பர் 1 வலிநிவாரணி மருந்து

11

சொர்க்கத்தின்

இடந்த இரண்டு தினங்களாகவே சுவாமிநாதன், கடை வீதிக்குப் போகும் எண்ணத்தை ஒத்திப் போட்டு விட்டிருந்தார். பற்பசை வாங்காமல் முடியாது என்ற நிலை வந்ததும், கடை வீதிக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கபாலீஸ்வரரைக் கண்டு தரிசித்து நாளாகிவிட்டது. விமலாவைப் போல் அடிக்கடி கோவில் குளம் என்றில்லாவிட்டாலும், எப்போதாவது ஒருமுறை 'இறைவனைக் காணப் போவது அவர் வழக்கம். அதிலும், யமனிடமிருந்து மீட்டுத் தந்துவிட்ட ஆண்டவனுக்கு நன்றி கூறாவிட்டால்....? தமக்குள் சிரித்தபடியே அவர் புறப்பட்டு விட்டிருந்தார்.

ஸ்வாமி தரிசனத்தை முடித்துக் கொண்டு மாடத் தெருக்களைக் கடந்து வந்தவர் கண்ணில் அந்தப் பற்பசை விளம்பரம் பட்டது. ஒரு பற்பசை பாக்கெட்டிற்குப் பல் துலக்கும் 'பிரஷ்' இலவசம். அதன் அருகே, புத்தாண்டு, பொங்கல் சஞகை, தள்ளுபடி விற்பனை விளம்பரங்கள்.

மாலை நேரத்தின் முன்பகுதியாதலால், மாடத் தெருவின் கறிகாய் மார்க்கெட் சூடு பிடிக்க நேரம் செல்லும். ஆறு மணிக்கு மேல் அந்தப் பக்கம் மனித வெள்ளத்தில் நீந்தித்தான் செல்ல வேண்டியிருக்கும். இடை இடையே, மாடுகளையும், வாகனங்களையும் வேறு சமாளிக்க வேண்டும். அவர் விரைவாக நடந்து பஸ் நிலையத்தின் திருப்பத்தருகில் வந்தார். பற்பசை விளம்பரம் அவரை மீண்டும் ஈர்த்தது.

''இத்தனை பொருட்களைத் தள்ளுபடி

லெக்ஷ்மி



கதவுகள்

விலை, இனும் பொருட்களுடன் என விளம்பரம் செய்கிருர்களே. மனிதனுக்கு மிகத் தேவையான மருந்துகளுக்கு யாராவது தள்ளுபடி விலை தருகிருர்களா?'' அவருக்குச் சிரிப்பு வந்தது. அத்தியாவசியமான பொருள் என்றதும் கறுப்புச் சந்தைக்குள் புகுந்து கொண்டுவிடுகிறதே! டாக்டர்கள்



மட்டும் என்ன? கையை விட்டா, நோயாளிகளுக்கு மருந்து வாங்கிக் கொடுக்க முடியும்? மருந்து உற்பத்தியாளர்கள் தரும், இலவச மருந்துக்களைக் கூட, நோயாளிகளுக்குக் கொடுத்துப் பணம் செய்யும் ஒரு சில டாக்டர்கள் இருக்கும்போது, உண்மையான மருந்துவர்களைப் பற்றி அறிந்து கொள்வதுகூடக் கடினமாகிவிட்ட காலம் இது. மாருதி நர்ஸிங்ஹோமை ஒருமுறை நினைத்துக்கொண்டவர் உடம்பைச் சிலிர்த்துக் கொண்டார். மளிகைக் கடை ஜாபிதா போல, தந்த மருந்துப் பட்டியலிலிருந்து அவர் ஒரு மாதிரி தப்பித்துக் கொண்டுவிட்டார்.

பற்பசையை வாங்கிக் கொண்டு திரும்பியவர் சட்டென நிமிர்ந்தார்.

''ஸார் சௌக்கியமா? உங்க மனைவி உடம்பு எப்படி இருக்கு?''

சுவாமிநாதன் கண்களைக் கூர்மையாக்கிஞர். ஒட்ட வெட்டிய கிராப்பும், கண்களில் அகம்பாவமுமாக, கர்வத்தோடு, மாருதி நர்ஸிங் ஹோமில் நின்ற டாக்டர் மோஹன் அல்லவா? அந்த அகங்காரம், துடுக்கு, இகழ்ச்சியான புன்னகை எல்லாம் எங்கே மறைந்து போயின? கண்களில் ஒரு கனிவு, உதட்டில் புன்னகை.... முகத்தில் லேசான சோர்வு, களையப்படாத குறுந்தாடி.... வியப்புடன் பார்த்தான்.

''என்னைத் தெரியலியா ஸார்! நான்தான் டாக்டர் மோகன்.''

''ஹலோ! நீ எங்கே..... இந்த வேளையில். எனக்கு அடையாளமே புரியலே....'' என்று தடுமாறியவர், ''ஆமா, லீவில் இருக்கியா?'' என்று கேட்டு வைத்தார்.

''நான் அந்த நர்ஸிங் ஹோமில வேலை செய்யலே ஸார்'' மோகன் முகத்தில் சிறிது கோபம் நிழலாடியதை கவனித்துக் கொண்டார் அவர். நர்ஸிங் ஹோமையே தன் தலையில் வைத்துக் கொண்டிருப்பதைப் போலப் பெருமையுடன் நடந்து கொண்டிருந்த இந்த இளைஞனுக்கு என்ன ஆயிற்று?

''மாருதி நர்ஸிங் ஹோமிலே வேலை செய்யறதுன்னுலே பெருமையாச்சேப்பா. அதோட நிறைய வைத்திய முறைகளைப் பற்றியும் கத்துக் கொண்டிருக்கலாமே. அவசரப்பட்டுட்டியே'' என்ருர்.

''நிறையவே கத்துக்கிட்டதாலேதான் இந்த அவசர முடிவுக்கு வந்தேன்'' அவன் குரலில் கசப்பு தொனித்தது.

''புரியலையே.''

''உங்களுக்கு நேரம் இருக்குமானுல் விளக்கமா சொல்றேன். அதிலேயும், உங்களை எங்கேயாவது கண்டால் நிச்சயமா, என்னைப் பத்தி சொல்லணும்னு நான் துடிச்சிக்கிட்டிருந்தேன். இன்னைக்கி தற்செயலாக உங்களைப் பார்த்ததும்....''

''அப்ப நிச்சயம் கேக்க வேண்டியதுதான். வா. அந்த மரத்தடியில் நின்று பேசலாம். உன்னோட வேலை நேரம்.....

''அதைப்பத்திக்கவலைப்படாதீங்க'' என்ற படி பிரதான சாலையில் கன கம்பீரமாக வந்த பல்லவன் வாகனங்களையும்.

ஆட்டோ, கார்களையும் கடந்து மறுபக்கம் உள்ள, பெரிய மரத்தடியில் நின்றான் அவனைத் தொடர்ந்த சுவாமிநாதன், மௌனமாக அவனருகில் வந்து நின்றார்.

''முதல்லே உங்களை நிறுத்தி வச்சுப் பேசறதுக்கு மன்னிச்சுக் கொள்ளுங்க'' என்று ஆரம்பித்தான் அவன்.

''பரவாயில்லேப்பா, சொல்லு.''

''அன்றைக்கு ஒருநாள் எனக்குப் பெரிய உபதேசம் செஞ்சீங்களே, நினைப்பிருக்கா?''

''நினைவில் இருக்கு.''

''அன்னைக்கு எனக்கு உங்க மேலே ரொம்பக் கோபம் வந்தது. இவர் யார் எனக்கு உபதேசம் பண்றத்துக்குன்னு ஆத்திரம் கூட வந்தது.''

''எல்லா இளவயசுக்காரர்களுக்கும் ஏற்படற இயற்கையான உணர்ச்சிதானேப்பா. இதிலே தவறு என்ன இருக்கு?'' சுவாமிநாதன் ஆறுதலாகக் கூறினார்.

''அப்படி இல்லே ஸார். எனக்கே நேரு சுய அனுபவம் ஏற்பட்டது. அந்த அனுபவத்தாலே கிடைச்ச அடி, என் மனசுக்குள்ளே பெருத்த மாறுதலையே ஏற்படுத்திட்டதுன்னு சொல்லணும் ஸார்.''

சுவாமிநாதன் அவனையே உற்றுப் பார்த்தார். முகம் சிவக்க, மோகன் உணர்ச்சி வசப்பட்டவனாய்ப் பேசிக் கொண்டிருந்தான்.

''எனக்கு எங்கம்மாவைத் தவிர வேறே யாரும் இல்லே. நான் ஒரே மகன்கிற காரணத்தாலே, அவங்க ரொம்பப் பாடு பட்டு என்னை ஆளாக்கி, டாக்டராக்கினாங்க. அதனாலே அவங்களை நான் ரொம்ப நேசிச்சேன்'' துயரத்தினால் அவன் குரல் நடுங்கியது.

''அம்மா எங்கே இருக்காங்க?'' மெல்ல வினவினார் அவர்.

''மேல் உலகத்தில்'' அவன் கண்களில் இலேசாகக் கண்ணீர்.

''ரொம்ப ஸாரி மோகன். தெரியாமக் கேட்டுவிட்டேன்'' மன்னிப்புக் கேட்கும் பாவனையில் அவனை நோக்கினார் சுவாமிநாதன்.

''நடந்ததைப் பற்றி முழுசா கேளுங்க ஸார். என் அருமையான தாயாருக்கு, 'ஹார்ட் அட்டாக்' வந்திட்டது. நம்ம நர்ஸிங் ஹோம். கவனிப்பு இருக்கும். வைத்தியச் செலவும் அதிகமா பாதிக்காதுன்னு நினைச்சு அவங்களை, மாருதி நர்ஸிங் ஹோமிலே சேர்த்தேன். ஆனால் அம்மா பிழைக்கலே'' அவன் குரல் உடைந்தது.

''பாவம். அவங்களுக்குக் குடுத்து வைக்கலே, பிள்ளை பெரிய டாக்டராகி, ஒரு நர்ஸிங் ஹோமையே கட்டி ஆளப் போவதைப் பாக்கறத்துக்கு'' என்று பரிதாபமாகக் கூறினார் சுவாமிநாதன்.

''ஹூம்! ஒரு சமயம் அவங்க பிழைச்சிருந்தாக்கூட, மறுபடியும் ஒரு 'அட்டாக்' வந்து இறந்து போயிருப்பாங்க ஸார்'' வெறுப்புடன் கூறினான் மோகன்.

''என்ன சொல்கிறே?''

''அம்மா போன துயரம் அடங்கறத்துக்குள்ளே, நர்ஸிங் ஹோமிலே ஒரு 'பில்' வந்துது பாருங்க, நான் ஆடிப் போயிட்டேன்.''

''அங்கேயே வேலை செய்கிற உனக்குக் கூடவா இந்தக் கதி'' என்று வியப்பு மாறாதவராய் வினவினார் சுவாமிநாதன்.

''எங்க தலைவரிடமே தைரியத்தை வரவழைத்துக் கொண்டு போய்க் கேட்டுவிட்டேன். 'வைத்திய சிகிச்சைக்குப் பணம் எடுத்துக்கலேயே, மத்தபடி நர்ஸிங் ஹோமில் இருந்ததுக்குப் பணம் கட்டத்தானே வேணும்' என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார். அன்றைக்குத் தீர்மானம் செஞ்சேன் ஸார்.''

''அப்படியா?''

''பணம் மட்டும் வாழ்க்கை இல்லே. ஏழை எளியவங்களுக்கும், வைத்திய உதவி போய்ச் சேரணும்னு நீங்க குறிப்பிட்டது என் மனசில் உரைச்சுது. இருக்கிற பணத்தையெல்லாம் திரட்டிப் போட்டு, நர்ஸிங் ஹோம் பில்லைக் கொடுத்துக் கடன் தீர்த்தேன். வேலையை ராஜிநாமா செய்துவிட்டேன்.''

''அவசரமான முடிவு.''

''நல்ல திடமான முடிவுதான் செஞ்சேன் ஸார். நானும் என்னைப் போல் இன்னும் நாலஞ்சு டாக்டர்கள் இள வயசுக்காரங்களாச் சேர்ந்து கூட்டாக ஒரு 'பாலி கிளினிக்' ஒண்ணை ஆரம்பிச்சிருக்கோம்.''

சுவாமிநாதன் பெருமையுடன் மோகனைப் பார்த்தார். ''எனக்குக் கேட்கவே சந்தோஷமா இருக்கு.''

''எங்களோட ஒரு பெண் டாக்டர்கூட வேலை செய்யறாங்க ஸார். ஏழைகளுக்கு எங்களால் ஆனவரை வைத்தியம் செய்யறோம். குடுத்த பணத்தை வாங்கிக்கறதுன்னு முடிவு செய்திருக்கோம். இருபத்தி நாலு மணி நேர சேவை செய்கிறது எங்கள் 'கிளினிக்.' ''



''அய்யா, ஒரு ஐந்து பைசா தர்மம் பண்ணுங்க சாமி?''


''ஏன் ஐந்து காசு கேட்கிறே?''

''யார் யார் எவ்வளவு போடுவாங்கன்னு முகத்தைப் பார்த்தாலே தெரியும் சாமி.''

—கோவை. அ. கதிர்வேல்.

அனைவருக்கும் எமது உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்

படிப்பதற்குச் சிறந்த இடம்



'கண்டது கற்கப் பண்டிதனாவான்' என்ற பழமொழியில் அதிக நம்பிக்கை உடையவர் ஜி. டி. நாயுடு. சிறு வயது முதற்கொண்டே கையில் கிடைக்கும் எல்லாப் புத்தகங்களையும் படித்து விடுவார். ஆனால் படிப்பதற்கு நேரம்தான் கிடைக்காது. படிக்க வேண்டிய புத்தகங்கள் நிறையச் சேர்ந்துவிட்டால் அவர் என்ன செய்வார் தெரியுமா?

கோவையிலிருந்து சென்னைக்குச் செல்லும் இரயில் வண்டியில், ஒரு முதல் வகுப்புப் பெட்டி முழுவதையும் ரிசர்வ் செய்து கொள்ளுவார். அதில் புத்தக மூட்டையுடன் ஏறி உட்கார்ந்து கொண்டு படிக்க ஆரம்பிப்பார். இரயில் சென்னைக்கும், கோவைக்குமாக ஓடிக் கொண்டிருக்கும். ஜி. டி. நாயுடு மட்டும் பெட்டியிலிருந்து இறங்காமல் படித்துக் கொண்டே இருப்பார். எல்லாப் புத்தகங்களையும் படித்து முடித்தால் தான், கீழே இறங்குவார். இப்படி, நான்கு நாட்கள் வரை இரயிலிலேயே இருந்திருக்கிறார்.

— தகவல்: ரெங்கம்.

''மருந்துகள் பட்டியல்.....'' சுவாமிநாதன் இழுத்தாற்போல் கேட்டதும், மோகன் வாய்விட்டுச் சிரித்தான்.

''பயப்படாதீங்க. கூடுமானவரை, மருந்துக் கம்பெனிகளின் இலவச மருந்துகளை, இலவசமாகவே ஏழைகளுக்குக் கொடுக்கிறோம். இரண்டுபடுக்கைஒருகுட்டி அறுவை சிகிச்சை நிலையம் எல்லா வசதிகளும் செய்திருக்கிறோம்.''

''முதல் போடப் பணம் தேவையா இருந்திருக்கணுமே. அதுக்கு என்ன செய்தே?''

''அவங்க அவங்க கொஞ்சம் முதல் போட்டு ஆரம்பித்தோம். உங்களைப் பார்த்து, இதைத் தெரிவிக்கணும்னு சில நாட்களா ஆசை ஸார். நீங்களே வந்தீங்க'' மோகன் உற்சாகத்தோடு கூறி முடித்தான்.

''டாக்டர் மோகன்! உன்னைப் போல இளம் டாக்டர்கள், இப்படியே எண்ணினால், இந்த நாடு நிச்சயமா முன்னேறிடும். ஏதோ கிழவன் பேத்திக்கிட்டுக் கிடக்கறான்னு நீ உதாசீனம் செய்யலே. என்னை மதிச்சு நீ சொல்ல வந்தே பாரு, அதுவே என்னைப் பூரிக்க வச்சிட்டதுப்பா'' உணர்ச்சி பொங்க அவனது கைகளைப் பற்றிக் கொண்டார் அவர்.

''நீங்க கட்டாயம் எங்க பாலி கிளினிக்குக்கு வரணும் ஸார்.''

''ஐயோ! மறுபடியும் நோயுடனா?'' என்று வேடிக்கையாகக் கேட்டார் அவர்.

''இல்லே ஸார். பெரியவரா, எங்களுக்கு நல்லாசி கூறும் ஒரு நல்ல மனம் படைச்சவரா வந்துட்டுப் போங்க. எங்க 'பாலி கிளினிக்' பணம் பண்ணுகிற இடம் இல்லேன்னு நீங்க புரிஞ்சு கொண்டீங்கன்னா, அதுவே என் மனசுக்குப் பெருத்த ஆறுதல்'' என்றான் அவன்.

தம் ஒருவரது ஒரு சின்னஞ்சிறு உபதேசம், இப்படிப்பட்ட பெரிய செயலுக்கு அடிக்கல் ஆகுமானால், இது போலப் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர் நல்லதையே செயலாக்க உதவலாமே. சுவாமிநாதன் மனம் விம்மிதம் அடைந்தது. 'புதியதோர் உலகம்செய்வோம்' என்றபடி, இன்றைய இளைய சமுதாயம், வருங்காலத்திற்கு வழிகாட்டிகளாக இருக்க முடியுமே.

''நிச்சயம் நீங்க வரணும். எங்க 'பாலி கிளினிக்' இங்கேதான், அடையாறு போற வழியில், பிராடீஸ் ரோடு கடைசியில் வச்சிருக்கோம். ஏன்னா, ஏழை பாழைகள் சுலபமா வர்ற இடம் அதுதான் ஸார். பிரசவம் கூடப் பாக்கறோம் ஸார். மருந்துகள் அவங்களாலே முடிஞ்சதை வாங்கி வரச் சொல்றோம். மத்தபடி, ஒரு சமுதாய நலத் திட்டத்தோடதான் இதை உருவாக்கி வருகிறோம். நல்லபடியா நடக்கணும்னு ஆசி கூறுங்க ஸார்'' மோகன் குரல் தழுதழுத்தது.

''நீ நன்னா அமோகமா இருப்பே மோகன். கிராமத்துக்குப் போய் வைத்தியம் செய்யணும்னு டாக்டர்களைச் சொல்றா. அது அவசியம்தான். ஆனா அதே சமயம், இதே பட்டணத்திலே, ஆயிரக் கணக்கான ஏழைகள் வைத்திய வசதி கிடைக்காம அவதிப்படறா. அவர்களையும் நீங்க கவனிக்க வேண்டியதுதான். இப்ப நீங்க அதைச் செய்யுங்கோ. கட்டாயம் உங்க 'கிளினிக்' பக்கம் வரேன்'' என்றார் உற்சாகமாக.

மோகனிடமிருந்து விலாசத்தைப் பெற்றுக் கொண்டு, வீடு திரும்பியவர் மனம் இலேசாகி இருந்தது.

''என்ன பெரியப்பா இது? எத்தனை நேரமா உங்களுக்காகக் காத்திருக்கிறது?'' செல்லமாகச் சிணுங்கியபடி ஐஸ்வர்யா, இருப்பிடத்தை விட்டு எழுந்து நின்றாள்.

''இவளுக்கு என்ன பிரச்னை?'', உள்ளுணர்வு உறுத்த அவர் பிரமிப்புடன் அவளைப் பார்த்தார்.

(தொடரும்)

பிறந்தேன் வளர்ந்தேன்



‘இதனால் யாவருக்கும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால்....’ — என்று ஒவ்வொரு வசனத்திற்கும் முன்னால் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பதுதான் குறை. கவுண்டமணி பாதி நேரம் உபதேசம்தான் செய்கிறார். (வியட்நாம் வீடு சுந்தரம் உபயம்.)

முழுநீளத்திற்கும்போன முறை வந்தபோது கவுண்டமணிக்கு நகைச்சுவை கலந்த பாத்திரம். சமாளித்து விட்டார். அந்த அசட்டுத் துணிச்சல் ப்ளஸ் தப்புக் கணக்கு. இந்தப் படத்தில் கவுண்டமணிக்கு சீரியஸ் கதாநாயகன் — அதுவும் இளமைக் கதாநாயகன் ரோல்!

ஆஃபீஸில் முதலாளி நோட்ஸ் டிக்டேட் செய்யும் நேரத்தில் இவர் முருகன் படத்தை வரைந்து கொண்டிருக்க, ஜீவிதா நோட்ஸ் எடுத்து டைப் அடித்துக் கொடுக்கும் காட்சிகள்..... ரசிக்கலாம் ரகம். காதலியின் அருகே உட்கார மேஜை நாற்காலியோடு கொஞ்சம் கொஞ்சமாய் கவுண்டமணி நகர்ந்து வரும் காட்சி சிரிக்கலாம் டைப்.

மற்றபடி.....

டூயட் காட்சிகள், சண்டைக் காட்சிகள், உருக்கமான காட்சிகள் — கவுண்டமணி எதையோ தொலைத்து விட்டு நிற்பது போல் காமிராவைப் பார்க்கும் காட்சிகளில் பரிதாபம்தான்! அண்ணாவின் புராணத்தை வில்லுப் பாட்டில் துவம்சம் செய்கிறார்கள்.

செந்தாமரையின் மகனைத் தன் மகனென்று க.பெட்டி சிங்காரம் சொந்தம் கொண்டாட, மேலே மேலே குழப்பி அவர் தலையைப் பிய்த்துக் கொள்ளுகிறாரே, அது சுவாரஸ்யம். மீதி நேரங்களில் பல்லைக் கடித்துக் கொண்டு அவர் செய்யும் வில்லத்தனங்கள் வெத்து வேட்டு.

ஜீவிதாவுக்குச் சுலபமான வேலை. வாயை அகல விரித்துச் சிரிக்க வேண்டும். கவுண்டமணியுடன் தையாதக்கா என்று குதிக்க வேண்டும். சிரிக்கிறார், குதிக்கிறார்.

காது ஜவ்வுகளைக் கிழிக்க.... இருக்கவே இருக்கிறார்கள் சங்கர் கணேஷ்.

ஃபிலிமில் கோளாறு, காமிராவில் தகராறு என்று யோசிக்க வைக்கும் படப்பிடிப்பு. (ஒளிப்பதிவு: கோவிந்தன்.)

வீணடிக்கப்பட்ட லிஸ்ட்டில் எஸ்.வி. சேகரையும், ராஜீவையும் மறக்காமல் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

— ஜெயமன்மதன்

“எந்த வரி சேமிப்பு திட்டத்திலும் நான் வரிவிலக்கை மட்டும் எதிர்பார்ப்பதில்லை.

அதனால்தான் நான் யூனிட் இணைந்த ஆயுள் இன்சூரன்ஸ் திட்டத்தில் சேர்ந்தேன். (ULIP)

நான் ஒரு வருடத்தில் செலுத்தும் தொகை ரூ. 3000. அதற்கு வருமான வரி சட்டம் செக்ஷன் 80C பிரிவின் படி முழு வரிவிலக்கு உண்டு.

என் இலக்குத் தொகை ரூ 30,000 ஆக இருந்தால்கூட திட்டத்தின் முடிவில் எனக்கு குறைந்த பட்சம் ரூ. 50,000 கிடைக்கும்.

விதிவசத்தால் ஏதேனும் விபத்தில் நான் இன்றே இறக்க நேரிட்டால் என் குடும்பத்திற்கு ULIP ரூ 45,000 தரும். நான் செலுத்திய தொகை இதுவரை ரூ. 6000 ஆக இருந்தால் கூட! ஏன் என்றால் ULIP விபத்து மற்றும் ஆயுள் காப்பீடு இரண்டும் இணைந்த திட்டம்.

சொல்லுங்களேன்! வேறு எந்த முதலீட்டுத் திட்டம் இத்தனை நன்மைகள் அடங்கியது?


ULIPல் இன்னொரு நன்மை. ரூ. 3000 முதல் ரூ. 30,000 வரை எந்த இலக்குத் தொகையையும் நம் வசதிக்கு ஏற்றபடி தேர்ந்து எடுக்கலாம்.

என் குடும்பத்தின் நன்மை கருதி இந்த நல்ல திட்டத்தில் சேர்ந்தது எனக்கு மிகுந்த மனநிறைவை அளிக்கிறது. என் முதலீடு "யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா"வில் பாதுகாப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையும் கூட!

உங்கள் குடும்ப நன்மைக்கு இதைச் செய்வது மிகச் சுலபம். வாருங்கள்!

கனரா வங்கியின் கிளை, மற்றும் யூனிட் டிரஸ்டின் அங்கீகாரம் பெற்ற ஏஜண்ட் அல்லது தலைமைப் பிரதிநிதியை சந்தியுங்கள்.”

மேலும்!
திட்ட இறுதியில்
இலக்குத் தொகைக்கு போனஸ்!
5% பத்து வருட திட்டத்துக்கு.
7.5% பதினைந்து வருட திட்டத்துக்கு.



திரு CPKN நந்தனன் மதுரா கோட்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் உயர் அதிகாரியாகப் பணிபுரிபவர்.

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா

(அரசு பொது உடைமை நிதி நிறுவனம்)

தலைமை அலுவலகம்— பம்பாய்-400 020.

பிராந்திய அலுவலகம்:
ரெஜினு மான்ஷன், 46, செகண்ட லைன் பீச்,
சென்னை 600 001, போன்-27433 24146

ஆந்திரப்பிரதேச அலுவலகம்:
27 11/6B, மேரி சாலை, கவர்னர்பேட்டை,
விஜயவாடா-520 002. போன்-63964

கேரளா அலுவலகம்:
XII/756, தேக்கமடம் சாலை,
திருச்சூர் 680 001. போன்-24690

தமிழ்நாட்டில் முக்கிய பிரதிநிதிகள்:

- சேலம். திரு N.K. இங்கர்சால், சேலம்-636 002 போன்-51520
- திருச்சி. திரு. M. ராமலிங்கம், திருச்சி-620 001 போன்-28280
- வட ஆற்காடு. திரு P. நாராயணன், வேலூர்-632 012 போன்-21575
- கோவை, பெரியார், நீலகிரி. திரு. A. தனபால், கோயம்புத்தூர்-641 018 போன்-34775
- மதுரை, ராமநாதபுரம். திரு M. ராமமூர்த்தி, மதுரை-625 002 போன்-அலுவலகம்-30160 வீடு 43179
- தஞ்சை. திரு K. முத்துசாமி, தஞ்சாவூர்-613 007 போன்-வீடு-1224

Sista's. ITI. 436.85 TM A

ULIP-நேசப்பிணைப்பிற்கோர் நேர்த்தியான திட்டம்.

முரட்டுக் கரங்கள்

சினிமாப் பார்க்கும்போது சீட்டுக்குள்ளேயே பதுங்கி உட்காரத் தோன்றுகிறது. அசந்து மறந்து தலையைத் தூக்கினால் எங்கே நம்மை டுமீல் என்று சுட்டு விடுவார்களோ என்ற பயம். திரையில் நடமாடும் ஒவ்வொரு ஆண் மகனும் கையில் குறைந்தபட்சம் ஒரு துப்பாக்கியாவது வைத்திருக்கிறார். குதிரையில் ஓடிக் கொண்டே எல்லாத் திக்கிலும் சுடுகிறார்கள்.

கதை?

இதுதானே வேண்டாமென்கிறது? குதிரை உண்டு, துப்பாக்கி உண்டு என்றால் என்ன அர்த்தம்? ஒரு ஏமாந்த கிராமம். அதைச் சூறையாடும் கொள்ளைக்காரர்கள். அந்தக் கிராமத்தைக் காப்பாற்றப் புறப்பட்டு வரும் நான்கு (இதில் ஐந்து) இளம் வீரர்கள் என்று புரிந்து கொள்ள வேண்டாமோ?

ஷோலே டைப் வில்லனாய் சத்தியராஜ். தலையைக் கலைத்துக் கொண்டு, கறுப்புப் பற்களை இளித்துக் கொண்டு, வலதுபுறம் தூக்கிய மூதுகோடு அவர் வந்ததும் ஜோர் ஜோர் என்று எழுந்து உட்கார்ந்தால்..... சப். குகைக்குள்ளேயே தர்பார். எப்பொழுதாவது இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்குமாய் நடை. நினைத்தபோது நாலு வார்த்தை. ஏமாற்று ராஜ்!

வழக்கம் போல் கொஞ்சம் செண்ட்டிமெண்ட். பார்வையில்லாத சிறுமியின் பாசம். அதற்கு அடிமைப்பட்டுச் சாகும் நிலையில் அவளைத் தேடி வந்து உயிரை விடும் மாரி. ஊருக்கு வெளியே ஒதுக்கப்பட்ட பெண்ணின் சோகம். அதைத் தீர்த்து வாழ்வளிக்கச் சத்தியம் செய்து, அநியாயமாய் இறந்து போகும் காளி. உடம்பில் வெடிகுண்டுகளைச் சுற்றிக் கொண்டு, எதிரிகளிடையே குதித்து உயிர்த் தியாகம் செய்யும் ரஹ்மான்.....

டிஸ்கோ சாந்தியின் டான்ஸ் அயிட்டமும் உண்டு. தியாகராஜன்தான் ஹீரோ. துள்ளித் துள்ளி சண்டை போடுகிறார். குறி தவறாமல் சுடுகிறார். அநாயாசமாய்க் குதிரையிலிருந்து இறங்குகிறார். தன் இளமையின் சோகக் கதையை அழுகையோடு (?) சொல்லும்போது கோட்டை விடுகிறார். சுலக்ஷணாவிடம் காதல் காட்டும்போது திண்டாடுகிறார்.

எண்ணிக்கொள்ளுங்கள் : இன்னும் ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், பானுசந்தர், ஷா நவாஸ், சிவசந்திரன், கராத்தே மணி, தீபா என்று ஏராளத் தலைகள்.

எல்லாம் இருந்து என்ன? காமிராவைத் தவிர வேறெதையும் ரசிக்க முடியவில்லையே!

— ஜெயமன்மதன்











• தவறில்லை..... ஆனால்....

• எதிர்த்த காரணம்

• நியாயமான குற்றச்சாட்டு

தி.மு.க. ஊழலுக்கும் அ.தி.மு.க. ஊழலுக்கும் என்ன வித்தியாசம்?

* முத்துமணி, சென்னை—20.

? இந்த வருஷம் மார்கழி எப்படி?

! என்ன கிண்டலா? ஒருபக்கம் ஒலி பெருக்கிகளின் மூலமாகப் பக்திப் பாடல்கள் நம் காதுகளைப் பிளந்தனவென்றால், மறுபக்கம் நடந்த ஐயப்ப பஜனை காதுகளையே கிழித்தெறிந்தது. இத்தனையும் போதாதென்று பாக்யராஜின் பிறந்த நாளும் மார்கழியில்தான் வரவேண்டுமா? ஒரேயொரு நாள்தான் என்றாலும், ஒலிபெருக்கிக்கோஷங்களால் அந்தப் பேட்டை அன்று கதிகலங்கிப் போனது. இத்தனை இரைச்சலுக்கு மத்தியில் மார்கழி எப்படி மகிழ்ச்சியளிக்கும் நண்பரே? 'மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்' என்று கீதையில் கிருஷ்ண பகவான் சொல்லியிருப்பதில் ஏதேனும் அச்சுப் பிழை நேர்ந்திருக்குமோ என்றுதான் ஐயப்படுகிறேன். பொது இடங்களில் ஒலிபெருக்கிகளை அலற விடுவதற்கு என்று முடிவு கட்டுகிறோமோ அன்றுதான் நாம் நாகரிகமுள்ளவர்களாவோம்.

* வி. ரமேஷ், பெங்களூர்—10.

? 'நள்ளிரவில் பெற்றோம்; இன்னும் விடியவேயில்லை!' — இந்த வரிகளைப் பற்றி இப்போது என்ன நினைக்கிறீர்கள்?

! இன்னும் விடியவேயில்லை என்பது உண்மையல்ல. இருட்டில் பெற்றதை வெளிச்சத்தில் தேடிய போது காணவில்லை; மீண்டும் கொள்ளை போய் விட்டது!

* மு. மதிவாணன், அரூர்.

? ஆரம்பப் பள்ளிகளில் சங்கீதத்தைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்று டி. கே. பட்டம்மாள் கூறியிருப்பது பற்றி?

! பட்டம்மாள் சொன்னதில் தவறில்லைதான். ஆனால் திருச்சிக்குப் பக்கத்திலிருக்கும் ஒரு பள்ளிக்கூடத்தில் மூன்றும் வகுப்பில் படிக்கும் பத்து வயதுச் சிறுமி ஒருத்திக்குத் தன் பெயரைக் கூட எழுதத் தெரியவில்லையாம்! அதுவும் தமிழில்!! இந்த லட்சணத்தில் சங்கீதம் வேறு வந்து, அதுவும் சங்கடப்பட்டுக் குழந்தைகளையும் சங்கடப்படுத்த வேண்டுமா? அடிப்படையே ஆட்டம் கண்டிருக்கிறதே ஸ்வாமி!

* ஆர். எச். கோபி, குடியாத்தம்.

? ஆஸ்திரேலிய அம்பயர்களைக் கபில் தேவ் குறை கூறியிருக்கிறாரே?

! நியாயமான குற்றச்சாட்டுதான். அம்பயர்கள் என்பவர்கள் நீதிபதிகள் மாதிரி. அப்படிப்பட்டவர்கள் சில சமயங்களில் தவறாகத் தீர்ப்புச் சொல்லும்போது, அந்தத் தவறான தீர்ப்பைக் கோடிக்கணக்கான ரசிகர்கள் உலகெங்கும் டி.வி.யில் பார்ச்சென்று



நீங்கள் கேட்டவை
— தராசு.

காண்கிறார்கள். இது அந்த அம்பயர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களோ அந்த நாட்டுக்கே ஓர் அகில உலக அவமானமில்லையா? எனவே, டி. வி. யில் ஆக்ஷன் ரீப்ளே பார்த்துத் தீர்ப்புச் சொல்கிற மூன்றாவது அம்பயர் ஒருவர் அவசியம் வேண்டும். சந்தேகம் ஏற்படும்போது இவரை மைதானத்தில் உள்ளவர்கள் கலந்தாலோசிக்க வேண்டும். குதிரைப் பந்தயத்தில் கூட ஃபோட்டோ ஃபினிஷ் பார்த்துத் தீர்ப்புக் கூறப்படுகிறதல்லவா? அப்படியிருக்கும்போது கிரிக்கெட் ஆட்டக்காரர்களும், ரசிகர்களும் இன்னமும் இதை வற்புறுத்தாமலிருப்பது அதிசயம்தான்!

* பெ. சங்கரபாண்டியன், பொய்கை.

? கலைஞர் ஆட்சியிலிருந்த ஊழலுக்கும் புரட்சித் தலைவர் ஆட்சியிலுள்ள ஊழலுக்குமிடையே உள்ள வித்தியாசம் என்ன?

! அப்போதிருந்தவர்கள் விதைத்தார்கள். அதைத்தான் இப்போதுள்ளவர்கள் அமோகமாக அறுவடை செய்து கொண்டிருக்கிறார்கள்.

* ஸ்ரீ பட்டாபிஷேகப்ரியன், குடியாத்தம்.

? சென்னையில் பன்னிரண்டு லட்சரூபாய்ச் செலவில் அமைக்கப்பட்ட அலங்கார வளைவினால் அரசுக்குச் செலவுதானே? பொது மக்களுக்கு என்ன நன்மை?

! அண்ணா நகரில் அமைக்கப்பட்டதையும், அதை எம். ஜி. ஆர். திறந்து வைத்ததையும் தானே சொல்கிறீர்கள்! நீங்கள் கூறுவது நூற்றுக்கு நூறு உண்மை. சென்னை நகரிலுள்ள கொசுத் தொல்லையையும், சீர்படுத்தப்படாத சாலைகளையும், ஆண்டாண்டு தோறும் எழும் குடிநீர்ப் பிரச்னையையும், மின்சார வெட்டுக்களையும் தீர்த்தொழிக்க முடியாத ஓர் அரசு — அடிக்கடி உயிர்களைப் பழிவாங்குகிற அளவுக்கு விபத்துக்களை உருவாக்கும் திறந்து கிடக்கும் பாதாளச்சாக்கடை மூடிகளைக் கூடப் பராமரிக்காத ஓர் அரசு, வெறும் அலங்கார வளைவுகளை மட்டும் ஆடம்பர விளம்பரங்களோடு திறந்து வைப்பது, பொதுமக்களின் காதுகளில் பூச்சுற்றுகிற மோசடிதான்!

* மு. சிவஞானமுருகன், ஸ்ரீவைகுண்டம்.

? சண்டிகாரைப் பஞ்சாபிற்கு மாற்றுவது தொடர்பாக இரு முதல்வர்களுக்குள்ளும் ஏற்பட்டுள்ள மோதல்கள் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? தேசிய எதிர்க்கட்சிகள் இதில் மௌனம் சாதிப்பதேன்?

! இரண்டு தலைவர்கள் ஒன்று சேர்ந்து ஒப்பந்தம் செய்து கொள்வது மட்டுமே சாதனையாகிவிட முடியாது. அந்த ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவதற்கான சூழ்நிலையை மக்கள் மனத்தில் உருவாக்குவதுதான் உண்மையான சாதனை. முன்னதில் வெற்றி கண்ட ராஜீவ் இரண்டாவது அம்சத்திலும் வெற்றி காண உழைக்க வேண்டும். இதற்கு இடையூறாக ஹரியானா மக்களைத் தூண்டிவிட்டுக் கொண்டிருப்பதே லோக்தள் போன்ற தேசிய எதிர்க்கட்சிதான். அந்தத் தூண்டுதலின் பின்விளைவுகள் காரணமாக நாம் மக்கள் செல்வாக்கை இழந்து விடுவோமோ என்று அஞ்சித்தான் பஜன்லால் இ. காங்கிரஸ் முதல்வராயிருந்தும் அவ்வப்போது ராஜீவின் ஒப்பந்தத்திற்கு எதிராகப் பேசுவது போல் நடிக்கிறாரோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

* ஆர். ஹரிஹரன், திருவனந்தபுரம் — 9.

? பாக். ராணுவ ஆட்சி நீக்கப்பட்டது பற்றி...?

! ராணுவ ஆட்சியாவது, நீக்கப்பட்டதாவது? பசியின் கொடுமையால் பச்சைக் குழந்தையொன்று பாலுக்கழும் போது, வெறும் பாட்டிலைக் காட்டி விளையாடும் கொடூரம்தான் இப்போது ஜியா செய்திருப்பது!

* ஆர். விஜயராஜ், பெரியகுளம்.

? தமிழக அரசியல்வாதிகள் இந்தியை எதற்காக எதிர்க்கிறார்கள்?

! இந்தி மொழி என்பது நம்மோடு சகஜமாகக் கைகுலுக்க வரவில்லை. அதன் ஆதிக்க வெறி மற்ற மொழி பேசுவோரை இரண்டாந்தரக் குடிமக்களாக்கிவிடும் அபாயம் இருக்கிறது. அவ்வாறு நேர்ந்தால் எப்படித் தேசிய ஒருமைப்பாடு நீடிக்கும்? இவற்றையெல்லாம் மனத்தில் கொண்டுதான் ராஜாஜி போன்ற பெரியவர்களே இந்தி மத்திய அரசின் ஆட்சி மொழி ஆவதை எதிர்த்தார்கள். அதே காரணங்களுக்காகத்தான் இப்போது கருணாநிதியும், வீரமணியும் எதிர்க்கிறார்கள். மற்றபடி இந்தி மொழியின் மேல் தனிப்பட்ட முறையில் யாருக்கும் வெறுப்பில்லை. இதில் அரசியலும் இல்லை. சமத்துவம், சமநீதிக்காக நடக்கும் போராட்டமே.

---

* ரூ. 10 பரிசு பெறுபவர்:
மு. சிவஞானமுருகன்,
8, சிவன் கோவில் தெரு,
ஸ்ரீவைகுண்டம் — 628 601.



வட்டமேஜை

எப்படிப் போகும் ஒரு மாதம்?

புரட்சிப் பணி!

* கல்கி ஏற்கும் சமுதாயப் பணி ஒரு புரட்சி பணியாகும். நல்ல பல படைப்புக்களை வாசகர்களுக்கு வழங்கி, நல்ல பெயர் பெற்றிருக்கும் கல்கி இந்த நற் பணியால் தங்கத்தில் பதித்த வைரம் போல் ஜொலிக் கும் என்பதில் சந்தேகம் இல்லை!

சென்னை—18. அரி ராணிபிரியன்.

பாகம் பாகமாகத்தான்...

* பாவம் சார் நீங்கள். ஒவ்வொரு சிறு கிராமத் திலும் ஆயிரக்கணக்கான பிரச்னைகள் உள்ளன. இந்த நிலையில் நீங்கள் 'கல்கி'யின் 'பொன்னியின் செல்வன்' போலப் பாகம் பாகமாகத்தான் வெளியிட வேண்டி வரும்! ஒரு மாதத்தில் முடியாது!

திருச்சி—12. செ. அன்பு மதியழகன்.

ஏக்கம் தீர்ந்தது!

* புத்தாண்டுக்கு ஒரு வாழ்த்துக்கூட கல்கியிட மிருந்து இல்லையே என்று பக்கங்களைப் புரட்டினேன். பிறகுதான் புரிந்தது பிரதமரின் அழகான அட்டைப் படம்தான் புத்தாண்டு வாழ்த்து என்று!

கிருஷ்ணகிரி. இரா. மோகன்.

அருமையிலும் அருமை!

* முதலாண்டின் முடிவில்.... ராஜீவ் பற்றிய கவர் ஸ்டோரி—ராஜீவின் ஒரு வருட சாதனைகளை ஆறு பக்கங்களில் அருமையாய் அலசியிருப்பது அருமையிலும் அருமை. அதுவும் நடுநிலைமையுடன் அலசியிருப்பது அதைவிட அருமை!

உள்ளி (வ.ஆ.) என். சண்முகம்.

தனித்து நிற்கிறீர்!

* 'பொய்களைச் சொல்லி பிழைப்பை நடத்திக் கொண்டிருப்பதைவிட உண்மையைச் சொல்லி உதை வாங்குவதே பெருமை' என்று தராசு சொல்வதைப் பார்த்தால் ஊரோடு ஒத்து வாழும் பழக்கம் உமக்குத் துளிகூட இல்லை போலிருக்கிறதே?

கும்பகோணம். பா. கிருஷ்ணதாஸ்.

இது கூடவா தெரியாது?

* வாசகர்கள் தங்கள் மனத்தில் சரியென்று பட்ட கருத்துக்களைத்தான் எழுதுகிறார்கள். இந்தச் சாதாரண உண்மைகூட சபாநாயகராக இருந்து அமைச்சரான வருக்குத் தெரியாமல் இருந்திருக்க முடியுமா? வியப் புத்தான்!

இரணியல். கலைமணாளன்.

இதுதான் உங்கள் பலம்!

* 'அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தங் களைத் தாக்குபவரை எல்லாம் அமைதியான முறையில் எதிர்த்துப் பதிலடி கொடுக்கிறீர்களே அதுதான் சார் உங்களின் பலம். அமைச்சர் ராஜாராமுக்குத் தங்களின் பதிலடி மிகவும் அருமை!

கடலூர்—2. ஆர். வேலுமணி.

வித்தியாசமான கதை!

* மாறிவிடும் மனிதர்கள் மத்தியில், 'எதிலும் ஒரு நேர்மை, நியாயம் வேணும்' என்பதை உணர்த்தி யிருந்த 'இதுவும் ஒருவகை நியாயம்தான்....' சிறு கதை வித்தியாசமாக இருந்தது.

திண்டுக்கல். எஸ்.பி. தியாகராஜன்.

என்ன காரணம்?

* 5.1.86 கல்கி இதழில் மலர்வண்ணன் எழுதிய 'மறைவாக நமக்குள்ளே' கதையில் 37ம் பக்கத்தில் மேலே பிரசுரம் செய்ய வேண்டியதை அடியிலும், அடியில் பிரசுரிக்க வேண்டியதை மேலே யும் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதை தங்கள் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன். காரணம் என்ன?

சென்னை—1. அனந்தகிருஷ்ணன்.

(வாசகர்களில் ஒரு பகுதியினருக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய குழப்பத்துக்கு வருந்துகிறோம். அச்சகத்தில் நேர்ந்த இத்தவறு கல்கி அச்சாகிக் கொண்டிருக்கும் போதே கவனித்துத் திருத்தப்பட்டது.

— ஆசிரியர்)

நன்றி! நன்றி!

* அன்புள்ள சரோ & மோ Gun!, வெறும் 'பத்து ரூபாய் பெருத விஷயத்துக்காகத் திருமண வலையில் சிக்கிக் கொண்ட உங்களுக்கு என் ஆழ்ந்த அனுதாபங் கள்! இருப்பினும், முதல்வரி முதல் கடைசிவரி வரையில் அலுக்காமல் சலிக்காமல் சிரிக்க வைத்ததற் காக ரொம்ப Thanks!


பெங்களூர்—18. சுபமுகா.

தரம் கண்டு மகிழ்கிறேன்!

* கல்கி இதழின் தரம் கண்டு மகிழ்கிறேன். இத்தனை நாட்களாக இரவலாகப் படித்தவன், கடந்த ஓராண்டு காலமாகக் காசு கொடுத்தே வாங்க ஆரம் பித்துள்ளேன். சமீபகாலத்தில் கல்கியின் தரம் உச்சத்தை அடைய ஆரம்பித்து முன்னேறிக் கொண்டே இருக் கிறது!


மீஞ்சூர். கிருஷ்ணகுமார்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032. (Phone: 431543).
Assistant Editor: P. S. Mani. Editor: K. Rajendran.



காதல் சின்னத்தின்
எதிரே
காதல் சின்னங்கள்!

வண்ணப்படம்:
யோகா



வளரும் குழந்தைகளுக்கு சுவையான
துணையாக விளங்கும் பால் பிஸ்கட்
Milk Bikis
BRITANNIA
Milk Bikis
சத்துமிகுந்த, சுவையான பிஸ்கட்.
பிரிட்டானியா
LINTAS BIN MB 12 2416 TM